# உதயன்

31 °C|°F
தெளிவான வானம்

சுடர் 30 | கதிர் 280 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆவணி 16. புதன்கிழமை 02.09.2015


## எம்.பியாக மகிந்த சத்தியப்பிரமாணம்

கொழும்பு, செப்.2
இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.
இலங்கை வரலாற்றில், ஜனாதிபதியாக இருந்த ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி

பக்கம் 24.....

## சபாநாயகராக கரு ஜயசூரிய



கொழும்பு, செப்.2
8ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக கரு ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். பிரதிச் சபாநாயகராகத் திலங்க சுமதிபால தெரிவானார்.
புதிய நாடாளுமன்றத்தின் முத

பக்கம் 22.....

## ஜெனிவாவில் இலங்கை ஆதரவு தேடிப் பரப்புரை

அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

ஜெனிவா, செப்.2
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது அமர்வு எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தால் இராஜதந்திரச் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.
இந்த அமர்வில் இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன், இலங்கை அரசின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும்

பக்கம் 22.....

# எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்பார் சம்பந்தன்

நாடாளுமன்றில் நாளை அறிவிப்பு
சு.க.- ஐ.தே.க. கூட்டாக இணக்கம்



கொழும்பு, செப்.2
8ஆவது நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாளை வியாழக்கிழமை தெரிவு செய்யப்படுவார் என அரச உயர்மட்டத்திலிருந்து நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன.
இதற்கான தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக எடுத்துள்ளதாக அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

பக்கம் 22.....

# சர்வதேச விசாரணை ஆயம் நிறுவ வலியுறுத்தி தீர்மானம்

வடக்கு மாகாண சபையில் நேற்று நிறைவேற்றம்
சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 2
இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களைச் செய்தவர்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை உருவாக்குவதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
தமிழ் மக்களுக்கு எதிராக சர்வதேச குற்றங்கள் புரிந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களை, சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் முன் நிறுத்த வேண்டும் என்று இந்தத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.
அத்துடன் இலங்கையை அர்த்தமுள்ள நல்லிணக்கப் பாதையில் இட்டுச் செல்வதற்குமாக, நம்பகமான சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு, சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து துணிவுடன் பணியாற்ற

பக்கம் 24.:...

## கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவராகச் சம்பந்தன்

*பேச்சாளராகச் சுமந்திரன்*

யாழ்ப்பாணம், செப். 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக மீண்டும் இரா. சம்பந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், கூட்டமைப்பின் உத்தியோகபூர்வப் பேச்சாளராக எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந் தன் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற தீர்மான மும் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளது.
8ஆவது நாடாளுமன்றத் துக்குத்

பக்கம் 22.....

## நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம்

கொழும்பு, செப்.2
நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.
நாடாளுமன்றின் நேற்றைய முதலாவது அமர்வில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் தெரிவைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவின்

பக்கம் 22.....

# வடமாகாண ஆளும் தரப்பு இரு அணிகளாகும் நிலை

முதற்றடவையாக முதலமைச்சரின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இழுபறி

யாழ்ப்பாணம், செப். 2
வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்புக்கிடையில் இதுவரையில் காணப்பட்டு வந்த ஒற்றுமையில் பிளவு ஏற்படும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் ஓர் அணியிலும் அவைத் தலைவர் மற்றும் சில உறுப்பினர்கள் மற்றொரு அணியிலுமாக முரண்படும் நிலை

பக்கம் 24.....

## ஜனநாயகம்,சமத்துவம், நீதி என்பன புதிய ஆட்சியில் நிலைக்கவேண்டும்

நாடாளுமன்றத்தில் சம்பந்தன் வலியுறுத்தல்

கொழும்பு, செப் 2
புதிய அரசின் ஆட்சியில் நாட்டில் ஜனநாயகம், சமத்துவம், நீதி என்பன நிலை நாட்டப்படவேண்டும். இந்த இலக்கை அடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முழுமையான ஆதரவை சபாநாயகருக்கு வழங்கும் என்று கூட்டணியின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றச் செயலாளர் நாய

பக்கம் 22.....

## நாடாளுமன்றில் நேற்று தம்பதியினர் பதவியேற்பு

*35 ஆண்டுகளின் பின்னர் நிகழ்வு*



கொழும்பு, செப்.2
நாடாளுமன்றத்தில் 35 ஆண்டுகளுக்குப் பின்னர், கணவனும் மனைவியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி யேற்றுக் கொண்ட நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
ஐ.தே.கவின் அம்பாறை மாவட்ட

பக்கம் 24.....

## சகல இனங்களும் ஏற்கும் வகையில் இலங்கை அரசியல் யாப்பு இல்லை

நாடாளுமன்றில் நேற்று ஜனாதிபதி கவலை



கொழும்பு, செப்.2
நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் சகல இன மக்களும் ஏற்றுக் கொள் ளக்கூடிய அரசியல் யாப்பொன்று உருவாக்கப்படாதமை துரதிர்ஷ்டவ சமானது என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.
நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டுமென்று

பக்கம் 24.....

## வித்தியா கொலைச் சந்தேகநபர்களின் ரத்த மாதிரிப் பகுப்பாய்வு தனியாரிடம்

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் தெளிவான ஆய்வை பெறமுடியவில்லை

யாழ்ப்பாணம், செப். 2
புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில், சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட உரோமம் மற்றும் ஆடை என்பவற்றில் இருந்து மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளக்கூடிய கருவிகள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தில் இல்லாத

பக்கம் 23.....

## பெரும்பான்மையின விவசாய உதவியாளர்கள் 158 பேரில் 149 பேர் வடக்கை விட்டு இடமாற்றம்

அந்த இடங்களுக்கு இங்குள்ளவர்களை நியமிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 2
வடக்கில் நியமிக்கப்பட்ட பெரும்பான்மையின விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் 158 பேரில் 149 பேர் வடக்கு மாகாணத்தை விட்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதாகத் தெரிவித்த, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண சபையின் 34 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தல் பரப்புரைச் செலவுகளை வெளிப்படுத்தும் சட்டம் விரைவில்

கொழும்பு, செப். 2

தேர்தல் பரப்புரைகளின் செலவுகளை வெளிப்படுத்தும் வகையில் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் தேர்தல்களின்போது இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒளி, ஒலிபரப்பு மற்றும் பத்திரிகை விளம் பரங்களுக்கான கட்டண விவரங்களை வெளியிடும் வகையில் இந்தப் புதிய சட்டமானது அறிமுகம் செய்யப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலத்திரனியல் ஊடகமொன்றில் விளம்பரங்கள் ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படும் ஒவ்வொரு தடவையும் அதற்கான கட்டணத்தை வெளியிடவேண்டும்.


இதேபோன்று அச்சு ஊடகங்களில் செய்யப்படும் விளம்பரங்கள் தொடர்பிலும் கட்டணங்கள் குறிப்பிடப்படவேண்டும்.

தேர்தல் பரப்புரையில் சில வேட்பாளர்கள் அதிக பணத்தைப் பரப்புரைகளுக்காகவும் விளம்பர நடவடிக்கைகளுக்கும் செலவு செய்யும் அதே நேரம் சில வேட்பாளர்கள் அவ்வாறு நிதி சிக்கல்களால் விளம்பரங்கள் செய்வதில்லை.

எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் தேர்தல்களின் போது தேர்தல் பரப்புரை விளம்பரங்கள் தொடர்பில் சில சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இது தொடர்பிலான உத்தேச சட்ட யோசனை ஒன்றை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (த)

## தந்தையும் மகனும் நேற்று நாடாளுமன்றத்தில் செல்பி



கொழும்பு, செப் 2

எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்றுக் காலை ஆரம்பமானது. அதன்படி நாடா ளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களும் நேற்றுக் காலை முதலாவது அமர்வுக்குச் சமுகம ளித்திருந்தனர்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவருடைய மகன் நாமல் ராஜபக்சவும் அவைக்கு வரும்போது சிரித்தவாறு செல்பி எடுத்துக் கொண்டனர். (த)

## பாசிக்குடா கடலில் மூழ்கி தேரர் சாவு

மட்டக்களப்பு, செப்.2

மட்டக்களப்பு, பாசிக்குடாக் கடலில் குளித்துக்கொண்டிருந்த பௌத்த தேரர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு மாணவரான குருநாகலைச் சேர்ந்த சந்திரானந்த ஹிமி தேரர் (வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சுற்றுலா மேற்கொண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 34 பௌத்த பிக்கு மாணவர்கள் பல இடங்களுக்குச் சென்றும் நேற்று பாசிக்குடாவுக்கு வந்திருந்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## இந்திய மீனவர் 16 பேர் திங்களன்று இரவு கைது

மலேரியா பரிசோதனைக்குப் பணிப்பு



யாழ்ப்பாணம், செப். 2

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்தமை மற்றும் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 ட்றோலர்களுடன் இந்திய மீனவர்கள் 16 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு அவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாக யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.றமேஸ் கண்ணா தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு வடக்கே காரைநகர் கடற்பரப்பில் 2 படகுகளுடன் 7 பேர் கைது செய்யப்பட்டனர். இராமநாதபுரம் மற்றும் கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களைச் சேர்ந்த அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 15 ஆம் திக்தி வரை விளக்கமறியலில் வைக்கமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

அவ்வாறே வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு கடற்பரப்பில் ஒரு ட்றோலருடன் 9 பேர் கைது செய்யப்பட்டனர். நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 7 பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. அவர்களது படகு உள்ளிட்ட உடைமைகளைக் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்குமாறும் நீதிமன்று தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களில் சிலருக்கு மலேரியாக் காய்ச்சல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது மலேரியாக் காய்ச்சல் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதால், அது பரவாமலிருக்க வெளிநாடுகளிலிருந்து வருவோர் குறித்த பரிசோதனையை மேற்கோள்ள வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளதாகவும், அந்த நடைமுறையின்படி வருபவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதாகவும் நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணையின் போது கடற்படைத் தளபதி ஆர்.கே. முணவர்த்தன மற்றும் இந்திய துணைத் தூதரக அதிகாரி எஸ்.இராஜாராம் ஆகியோரும் சமுகமளித் திருந்தனர்.

இதேவேளை – கடந்த வாரம் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தமது வலைகள் நாசமாக்கப்பட்டதாக வடமராட்சி மீனவர்கள் தெரிவித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4-101-106-108)

## உப்பு உற்பத்தியை நிறுத்துமாறு முந்தலில் நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, செப்.2

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் உப்பு உற்பத்தியை தடுத்து நிறுத்தக் கோரி அப்பிரதேச மக்கள் நேற்றுக் காலையில் பாதையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் மங்களவெளியின் சந்தியில் மு.ப. 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது கல்பிட்டி பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்– மனோஜ் ரணகல மற்றும் முந்தல் பிரதேச செயலாளர்– ஏ.எம்.சீ.எம். சானக்க பிரமேசூரிய ஆகியோர் அவ்விடத்துக்கு வந்ததுடன் ஒரு கிழமைக்குள் இந்தத் திட்டத்தை நீதிமன்றத்தின் அனுமதியுடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ற)

## இம்மாத இறுதியில் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதோடு, ஒரு மாதம் வரையிலான காலத்துள் அனைத்துச் செயற்பாடுகளையும் முடித்துவிட முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றிருந்ததோடு, அந்தப் பரீட்சைக்கு 304,926 பரீட் சார்த்திகள் தோற்றியிருந்தனர். (ற-22)

## ‘திரிசவிய’ திட்டம் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்

கிளிநொச்சி, செப்.2



உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் மாவட்ட செயலகங்கள் ஊடாக நடத்தப்பட்ட திரிசவிய நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் பயிற்சிபெற்ற மாற்று திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி தொழிநுட்ப கல்லூரியில் 6 மாத பயிற்சியை பூர்த்தி செய்த மாற்று திறனாளிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், தொழில் சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கிளி.ரெக் தலைவரும், மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளருமான ச.மோகனபவன் தலைமையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகன் கலந்து கொண்டார். பயிலுநர்களால் ஆக்கப்பட்ட பொருள்களை கொண்ட கண்காட்சிகூடம் ஒன்றும் திறந்து அரச அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த கற்கை நெறியில் 40 பேர் வரை மேற்கொண்டிருந்தனர் என்பதுடன், கற்கை நெறி காலத்தில் தலா 110 ரூபா வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது.

இக்கற்கை நெறியை பூர்த்தி செய்த 20 பேருக்கு தையல் இயந்திரங்களும், மேலும் 20 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசி திருத்தும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ற-ரி3)

# தவறான செய்திகளை வெளியிடுவதை இணையத்தளங்கள் நிறுத்த வேண்டும்

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்களுக்கு எதிராக இணைய ஊடகங்களில் வெளியாகின்ற தவறான செய்திகளைக் கண்டிப்பதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

பொறுப்பற்ற விதத்தில் செய்திகளைப் பிரசுரிக்கின்றமையை தவிர்க்குமாறு இணைய ஊடகங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இனிவரும் காலங்களில் எமது பல்கலைக்கழக சமூகம் சார்ந்த எந்தவொரு செய்தியாகினும் அதன் உண்மைத் தன்மையை உறுதிப் படுத்திய பின்னர் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவர் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப்பீட விரிவுரையாளரின் கணவர் என்று வெளியான தகவலும் அவ்வாறானதொன்றாகும். அத்தகைய தவறான செய்திகளைப் பிரசுரிப்பதை கண்டிக்கிறோம். மீறிப் பிரசுரிக்கப்படும் செய்திகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. – என்றுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச விசாரணை கோரி சிவாஜிலிங்கம் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.2

இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், சர்வதேச விசாரணையே தேவை எனவும் கோரி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் சபாமண்டபத்தின் வாசலில் தனிநபர் போராட்டம் நடத்தினார்.

வடக்கு மாகாண சபையின் 34 ஆவது அமர்வு ஆரம்பமாவதற்கான மணி ஒலித்த பின்னர், சபாமண்டபத்தின் வாயிலில் நின்று அவர் போராட்டம் நடத்தினார். சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறு அவர் தனது கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இதன் போது, அவைத் தலைவர் அவைக்கு பிரவேசிப்பதற்காக வருவதற்கு முன்னர், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிவாஜிலிங்கத்திடம், இது தொடர்பில் சபையில் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது எனவே போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். இதனையடுத்து சிவாஜிலிங்கம் அமைதியாகச் சென்று சபை அமர்வில் பங்கேற்றார். (ற-5)

## அத்துமீறி அமைக்கப்பட்டிருந்த கடைகள் அகற்றல்

வவுனியா, செப்.2

வவுனியா நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அத்துமீறி அமைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் நேற்று நகர சபையால் அகற்றப்பட்டன.

காலையில் திடீரென பசார் வீதி, பள்ளிவாசல், தர்மலிங்கம் வீதி, கொரவப்பொத்தான வீதி ஆகியவற்றில் அத்துமீறி அமைக்கப்பட்டிருந்த கடைகள் பொலிஸாரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன.

இதன்போது நகர சபையினருக்கும், வர்த்தகர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. (ற-402)

## இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தும் தடைசெய்யக் கோரியும் கவனவீர்ப்புப் போராட்டம் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இன்று மு.ப. 10மணியளவில் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அந்தப் பகுதி மீனவர்களைத் திரட்டி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமும் இந்திய மீனவர்கள் பருத்தித்துறை கடற்கரைப் பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடித்த நிலையில் அவர்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். அத்துடன் இந்திய மீனவர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் அத்துமீறி நுழைந்து இழுவைப் படகினையும் பயன்படுத்துவதனால் தமது வலைகள் அறுக்கப்பட்டு தாம் தொழில் செய்வதில் பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

இந்திய மீனவர்களின் இவ்வாறான அத்துமீறல்களைக் கண்டித்து இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-422)

# விசாரணைப் பணிகளை முடித்தது காணாமற்போனோர் ஆணைக்குழு

### தலைவர் பரணகம தெரிவிப்பு

கொழும்பு, செப்.2

காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள் பூர்த்தியாகியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு அதன் விசாரணைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், விசாரணை அறிக்கை எப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்படும் என்ற விபரங்களை வெளியிட முடியாது எனக் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மைய நாள்களாகக் கடும் வேலைப் பளுவில் இருப்பதாகவும், அவரைச் சந்திக்க நேரமொன்றை ஒதுக்கிப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1990ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலப்பகுதியில் வடக்கு–கிழக்கில் காணாமற்போன ஆயிரக்கணக்கானவர்கள் பற்றிய முறைப்பாடுகள் இந்த ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், ஜனாதிபதியே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களினால் 17ஆயிரத்து 329 முறைப்பாடுகளும், படையினரின் குடும்பங்களினால் 5ஆயிரம் முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# அதிபர் இடமாற்றப்பட்டமையைக் கண்டித்து வட்டு.மத்திய கல்லூரி மாணவர் போராட்டம்

### நேற்று வகுப்புகளைப் புறக்கணித்தனர்

யாழ்ப்பாணம், செப்.2

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தக் கல்லூரி மாணவர்கள் நேற்று முழுவதும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது.



குறித்த கல்லூரி அதிபருக்கு முன்னர் இடமாற்றம் வழங்கப்பட்டபோதும் மாணவர்கள் போராட்டம் நடத்தியிருந்தனர். அதையடுத்து அந்த இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் தற்போது அந்தக் கல்லூரிக்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். அதையடுத்தே மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தமது பாடசாலைக்கு முன்னைய அதிபர்தான் வேண்டும் என்று கோரியே அவர்கள் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதுதவிர புதிதாக வந்த அதிபரின் உறவினர் ஒருவர் அங்கு மாணவர் ஒருவரின் தந்தையைத் தாக்கினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதனால் அவர் அது தொடர்பில் வட்டுக் கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராஜாவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

அதிபரோ ஆசிரியரோ ஒரே பாடசாலையில் குறிப்பிட்ட வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்ற முடியாது. புதிய அதிபர் முன்னரே நியமிக்கப்பட்டுவிட்டார். குழப்ப நிலை காரணமாக அவர் வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையில் இருந்தார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் முன்னைய அதிபர்தான் வேண்டும் என்று மாணவர்கள் கோருகிறார்கள். இடமாற்ற நடைமுறையின்படி அவ்வாறு செய்ய முடியாது. பல வருடங்களாக பலர் சில பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெறாது உள்ளனர். அவர்கள் விரைவில் இடமாற்றம் பெறுவார்கள்.

புதிய அதிபருக்குச் சந்தர்ப்பம் கொடுக்காது அவர் மீது குற்றம் சுமத்த முடியாது. எக்காரணம் கொண்டும் கல்லூரியின் முன்னைய அதிபர் அந்தக் கல்லூரிக்கு மீளவும் நியமிக்கப்படமாட்டார். இந்தப் பிரச்சினை தொடர்பில் இன்று கலந்துரையாடப்படவுள்ளது.– என்றார். (ற-4)

# காணாமற்போனோரின் மனைவிகளிடம் இறப்புச் சான்றிதழ் கேட்கும் வங்கிகள்

மன்னார், செப்.2

மன்னாரில் உள்ள சில வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்கச் செல்லும் கணவன் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பப் பெண்களிடம் வங்கி முகாமைத்துவம் கணவனின் இறப்புச் சான்றிதழைக் கேட்பதாக பாதிக்கப்பட்ட பெண்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று மன்னார் பிரதேச சபையின் முன்னாள் உப தலைவரும், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தருமான அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போரின் முன்பும், போரின் பின்னரும் பலர் கடத்தப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களில் பலர் குடும்பத் தலைவர்களாகவும் உள்ளனர். இந்த நிலையில் குறித்த குடும்பத் தலைவர்கள் கடத்தப்படுவதற்கு அல்லது காணாமல் போவதற்கு முன்னர் தமது குடும்பத் தேவைகளுக்காக தனது மனைவி அல்லது பிள்ளைகளின் நகைகளை வங்கிகளில் அடகு வைத்து பணத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களில் பலர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். தமது கணவர் அடகு வைத்த நகைகளை மீட்பதற்கு காணாமல் போன குடும்பத் தலைவர்களின் மனைவிகள் முயற்சிக்கின்ற போதும் மன்னாரில் உள்ள சில வங்கிகளின் முகாமைத்துவம் காணாமல் போன கணவனின் இறப்புச் சான்றிதழைக் கோருகின்றனர். இது பாதிக்கப்பட்டவர்களின் மனதளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

குறித்த நகைகளை மீட்பதற்கு குறித்த பெண்கள் கட்டம் கட்டமாக வங்கிக்கு பணத்தை செலுத்தி இறுதியாக நகைகளை கேட்டால் காணாமல் போன தமது கணவருக்கான இறப்புச் சான்றிதழ் கேட்கப்படுகின்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பல பெண்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.– என்றார். (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டுப் பிடிக்கப்பட்ட சந்தேகநபருக்கு 14 வரை மறியல்

வடமராட்சியில் பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைது செய்யப்பட்ட கொலைச் சந்தேகநபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் கடந்த ஏப்ரல் 27 ஆம்திகதி அல்வாய்ப் பகுதியைச் ஒருவரை கல்லால் அடித்து கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் அவர் நீண்டகாலமாக தலைமறைவாகி இருந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த சந்தேகநபர் அல்வாயில் வீடொன்றில் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து அவரைக் கைது செய்யச் சென்றபோது தம்மைக் கண்டதும் தம்மை வாளால் வெட்டிவிட்டுத் தப்பியோடி முற்பட்டார் என்றும் அதனையடுத்தே அவரைத் துப்பாக்கியால் சுட்டு கைது செய்ததாகவும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. காலில் காயமடைந்த சந்தேகநபர் யாழ். போதனா வைத்தியசலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அங்கு பணியிலுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் சென்று பார்வையிட்ட பருத்தித்துறை நீதிவான், சிகிச்சையைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைத்து எதிர்வரும் 14 ஆம் திகதி மன்றில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிட்டார். (ற-4,108)

## அம்பன் சந்தி முதல் கட்டைக்காடு வரையான வீதியை திருத்தக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு அம்பன் சந்தியில் இருந்து கட்டைக்காடு வரையான வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது:–

பல ஆண்டு காலமாக இந்த வீதியை புனரமைத்து தருமாறு கோரியிருந்தோம். பருத்தித்துறையிலிருந்து அம்பன் வரைக்குமான பருத்தித்துறை பெருந்தெரு திணைக்களத்தினர் எமது கோரிக்கையை கருத்தில் கொண்டு செய்து தந்துள்ளனர். அவர்களுக்கு எமது நன்றியை தெரி வித்து கொள்கின்றோம்.

அதேபோல் அம்பன் –கட்டைக்காடு வீதியானது கிளிநொச்சி பெருந்தெருக்கள் திணைக்களத்துக்கு சொந்தமானது. இந்த வீதி மழை காலங்களில் பாவிக்க முடியாத நிலை காணப்படுவதோடு காற்று வீசும் காலங்களில் மண்கள் அள்ளிக் கொட்டப்படுகின்றது. அதனால் அரச வேலைகளுக்குச் செல்பவர்கள் இரு உடையுடன் சென்று உடை மாற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.


சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இது தொடர்பில் கவனம் எடுத்து இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றனர்.(ற-422)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

ஹெரோயின் போதைப்பொருளை பொதி செய்துகொண்டிருந்ததாகக் கூறப்படும் 32 வயதுடைய ஒருவரை திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியில் நேற்று மாலை கைது செய்ததுடன், சந்தேகநபரிடமிருந்து ஆயிரத்து 50 மில்லிகிராம் ஹெரோயினை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# கிளி. கரும்புச் செய்கையாளர்களுக்கு சர்க்கரை, பாணி தயாரிக்கும் பயிற்சி

## உடவளவ கரும்பு ஆராய்ச்சி மையம் வழங்கியது



கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சி மாவட்ட கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த 10 கரும்பு பயிர்ச் செய்கையாளர்கள் கரும்புச் சாற்றில் இருந்து சர்க்கரை, பாணி போன்ற பதார்த்தங்களை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிர்ச்சிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இரத்தினபுரி உடவளவ கரும்பு ஆராட்சி மையத்தால் நடத்தப்பட்ட வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இந்தப் பயிற்சிகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 10 கரும்பு பயிர்ச் செய்கையாளர்கள் சான்றிதழ்களைப் பெற்றுகொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கிளிநொச்சி கரும்புப் பயிர் செய்கையாளர் சங்கத்தை சேர்ந்த வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் பகுதிகளைச் சேர்ந்த 10 பயிர்ச் செய்கையாளர்கள் அண்மையில் இரதினபுரி உடவள கரும்பு ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட்ட கரும்புச் சாற்றில் இருந்து சர்க்கரை, பாணி போன்ற பதார்த்தங்களை உற்பத்தி செய்தல் தொடர்பான ஒரு வார காலப் பயிற்சியில் கலந்துகொண்டிருந்தனர். அப்பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து உடவள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்தோடு தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்டத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக கிளிநொச்சி கரும்புப் பயிர்ச் செய்கையாளர் சங்கத்துக்கு உடவள கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் சக்கரை, பாணி தயாரிக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளது.

(ற-21)

# மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை மட்டக்களப்பில்

## விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

மட்டக்களப்பு, செப்.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அதையடுத்து 16 சிறிய குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் புனரமைப்பு, சிறு தானிய விதைகள் விநியோகம் என்பன 157.6 மில்லியன் ரூபா செலவில் ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தால் புனரமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுத வியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஐந்தாண்டு அபிவிருத்தித்திட்டத்தில் உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் இவ் வருடம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டத்தின் கீழேயே இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. அதில் உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தால் இந்த வருடத்தில் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் சோதயன் குளம், அத்திக்காட்டுக் குளம், இலுப்பைக் குளம், குறுக்கானமடுக் குளம், நவுண்டல் மடுக்குளம், தரணிக்குளம், தரவைக்குளம், மியான்கல் குளம், கோரளைப் பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கிரிமிச்சையோடைக் குளம், ஆனை கட்ட காடு குளம் ஆகிய குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

அதே நேரம், ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அத்தியான்டமுன்மாரிக்குளம், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பழுகாமம் பிரதான வாய்க்கால், புழுக்குணாவை அணைக்கட்டு வாய்க்கால், கடுக்காமுனைக் குளம், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மகிழூர் முனைக் குளம் மற்றும் வாய்க்கால், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அடைச்சகல் குளம் ஆகியனவும் புனரமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பிஎஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் திட்ட முகாமையாளர் திருமதி ரோகினி சிங்கராஜா, ஆலோசகரும் விவசாய அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான கலாநிதிடி. பி.ரி. விஜயரெட்ண, மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன் ஆகியோருடன் பிரதேச செயலாளர்கள், விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், உதவிப்பிரதேச செயலாளர்ளும் பங்கு கொண்டனர். (ற-10)

# தனிநாயகம் அடிகளார் நினைவு தின நிகழ்வு



வவுனியா, செப்.2

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம் நேற்றுக் காலை வவுனியாவில் நடைபெற்றது. மத்திய பஸ் தரிப்பிட வளாகத்தில் அமைந்திருக்கும் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கன், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் கண்ணன், வவுனியா நகர சபை செயலாளர் க. சத்தியசீலன், முன்னாள் நகர சபை உப தலைவர் சுந்திரகுலசிங்கம் (மோகன்), கவிஞர் மாணிக்கம் ஜெகன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் வேட்பாளர் றோய் ஜெயக்குமார் மற்றும் சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு மலர் மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து தனிநாயகம் அடிகளாரின் நினைவு செற்பொழிவும் தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தினார். (ற)

# சட்டவிரோத நாணயத்தாள் கடத்திய இருவர் கைது

கொழும்பு, செப். 2

இலங்கையிலிருந்து சிங்கபூருக்கு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்டு செல்ல முயன்ற இருவரைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 71 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இராகலை மற்றும் வத்தளை பகுதிகளைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையச் சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-10)



*கிண்ணியா குட்டிக்கராச்சி என்னும் இடத்தில் எருமை ஒன்று இரண்டு தலைகளுடன் கன்று ஒன்றை ஈன்றுள்ளது. பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த விசித்திரக் கன்றை பார்வையிட்டு வருகின்றனர்.(ஐ)*

# மட்டு. வாவியில் ஆற்றுவாழை: மீனவர்களுக்கு அசௌகரியம்

மட்டடக்களப்பு, செப்.2

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியில் கடந்த இரு மாதங்களாக படர்ந்துவரும் ஆற்று வாழை எனும் ஒரு வகை தாவரத்தினால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். அதனால் தாம் தொழில் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வாவியை நம்பி சுமார் 13 ஆயிரம் மீனவ குடும்பங்கள் ஜீவனோபாயத்தை நடத்திவருகின்றனர். இக்குறித்த தாவரங்கள் [illegible] வதால் வலைகள் சேதமடைவதுடன் மீனவர்கள் தோல் நோய்க



ளுக்கு ஆளாவதாகவும் தோணிகளை வாவியினுள் செலுத்த முடியாதுள்ளதாகவும் கவலை வெளியிடும் இவர்கள் முதலைக்கடிக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தின் வாவி மீனவர்கள் இவ் ஆற்று வாழை தொல்லையினால் தொழிலையே கைவிட்டு வேறு தொழில்களை நாடிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த தாவரங்களை வாவியிலிருந்து அகற்றித் தருமாறு கடற்றொழில் திணைக்களத்தை மீனவர்கள் கோரியுள்ளனர். (ற)

# தேர்தல் ஆணையாளர் கிழக்குக்குப் பயணம்

கொழும்பு, செப்.2

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

தேர்தல் திணைக்களத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த தினத்தில் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் ஒரு அங்கமான இஸ்லாமிய சமய நிகழ்வுகள் எதிர் வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 4.00 மணிக்கு சம்மாந்துறை ஹிஜ்ரா ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதற்காகவே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சம்மாந்துறைக்குச் செல்லவுள்ளார்.

(ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்கள் அனைவருக்கும் பெரும் பொறுப்புகள் உண்டு

## சுட்டிக்காட்டுகின்றார் அனுரகுமார



கொழும்பு, செப்.2
நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமது சமூகம் தொடர்பில் பெரும் பொறுப்புக்கள் உள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

எட்டாவது நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை புதிய சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியபோதே அவர் அங்கு இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்கள், போராட்டங்கள் மத்தியில் எமக்கு வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளனர். அந்த வகையில் அம்மக்களின் எதிர்காலம் குறித்து நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நாட்டில் வாழும் சகல இனக்குழுக்கள் மற்றும் பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்றவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார்கள்.

ஆகவே இளைஞர்களின் எதிர்கால எதிர்பார்ப்புகள், வறுமையில் வாழுகின்ற மக்களின் எதிர்பார்ப்புக்கள், உரிமை மறுக்கப்பட்டவர்கள் எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றிற்கு இந்த சபையில் உள்ளவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது. – என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கம்மன்பிலவின் உரைக்கு நேற்று மன்றில் எதிர்ப்பு

நேற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன் பிலவுக்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தெரிவுக்குப் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்றத்தின் சட்டங்களை மீறும் வகையில் அவர் உரையாற்றியமையால், இடையில் குறுக்கிட்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க சட்டம் ஒழுங்கு தொடர்பில் கேள்வியெழுப்பினார்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, போரை முடிவுக்கு கொண்டு வந்தமை மற்றும் ஆயுதம் ஏந்துதல் தொடர்பில் உதய கம்மன்பில கருத்து தெரிவித்தரர்.

நாடாளுமன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆயுதம் ஏந்துதல் தொடர்பில் நாடாளுமன்றில் உரையாற்ற இடமில்லை என்று பிரதமர் தெரிவித்ததையடுத்து, சபாநாயகரின் உத்த ரவின் பேரில் உதய கம்மன்பில தனது உரையை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

மஹிந்தவின் தீவிர விசுவாசியான கம்மன்பில, அண்மைய நாள்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில கட்சிகளை இணைத்துக் கொண்டு புதிய கூட்டணியொன்றை அமைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. (ற)

## ஓராண்டு காலத்துக்குள் தேர்தல் திருத்தம் தேவை

### வலியுறுத்துகின்றார் சிறிபால டி சில்வா

கொழும்பு, செப்.2
எதிர்வரும் ஓராண்டு காலப் பகுதிக்குள் தேர்தல் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

புதிய நாடாளுமன்றில் கன்னி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் திருத்தச் சட்டமானது அனைத்துத் தொகுதிகளிலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யும் வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை அடுத்து தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பில் அமைச்சரவையில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டிருந்தபோதும், பல முரண்பாடான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதால் அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனினும் புதிய நாடாளுமன்றில் தேர்தல் திருத்தச் சட்டம் குறித்த யோசனை முன்வைக்கப்படும் என்று அரசு தெரிவித்திருந்தது. (ற)

## சு.க. எதிர்காலம் பெரும் ஆபத்தில்

### உன்னிப்பாக அவதானிக்கின்றாராம் மகிந்த

கொழும்பு, செப்.2
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அது தொடர்பில் தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுவது தொடர்பில் வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று தெரிவித்துள்ள மஹிந்த அமைச்சுப் பதவி குறித்து சமலிடம் எவரும் தொடர்பு கொண்டு பேசவில்லை என்றும் தெரிவித் துள்ளார்.

எதிரணியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு ஆர்வம் கொண் டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை குழப்ப முயற்சிக்க வேண்டாம்

### கிழக்கு முதலமைச்சர் கோரிக்கை

திருகோணமலை, செப்.2
கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒற்றுமையாக வாழும் நிலையைக் குழப்ப முயற்சிக்க.வேண்டாம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செயினுலாப் தீன் நஸீர் அஹமட் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அமெரிக்க அரசின் 3.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியால் அபிவிருத்தி செய்யப்படவிருக்கும் 8 பாடசாலைகள் தொடர்பில் இனரீதியான பார்வையில் கருத்துக்கள் பரிமாறப்படுவது கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒற்றுமையாக வாழும் நிலையைக் குழப்புவதற்கும் நல்லாட்சியை கூறு போடவும் எடுக்கும் முயற்சியாகும்.


இது பற்றிய உண்மைகளை வெளியிட வேண்டியது எனது கடமையாகும். அமெரிக்க அரசு 2007ஆம் ஆண்டு இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்கள் தற்காலிகமாக ஒதுங்கும் இடங்களாகிய பாடசாலைகளை அவர்களைப் போசிக்கும் வகையில் அடிப்படை வசதிகளைக் கொண்டதாக அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தது.

இதன் முதல் கட்டமாக 2007 ஆம் ஆண்டு 11 பாடசாலை களும் இரண்டாவது கட்டமாக 2012 ஆம் ஆண்டின் முற்பகுதியில் 8 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இவ்விரு திட்டங்களிலும் மொத்தமாக 19 பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் 11 தமிழ் பாடசாலைகளும் 8 முஸ்லிம் பாடசாலைகளும் உள்ளடக்கப்படுள்ளன.

தமிழ் பாடசாலைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 5.2 மில்லியன் டொலர்களாகும். முஸ்லிம் பாடசாலைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 3.4 மில்லியன் டொலர்களாகும். – என்றுள்ளது. (ற)





# 15 ஆம் திருவிழா

## அருள்மழை பொழிவாய் வேலவனே

நல்லையில் உறைந்திடும் நாயகனே
நலம் தருவாய் உமை பாலகனே
அல்லலுறும் நின் அடியவர்க்கு
அருள்மழை பொழிவாய் வேலவனே

நானிலம் தன்னில் மானிடர்கள்
நல்வழி வாழ்ந்திட வழிகாட்டு
போதையில் உழலும் மாந்தர்களின் பேதமை
நீக்கியே அருள்கூட்டு

இன்றைய இளையோர் வாழ்வியலின்
ஈனநிலைதனைக் களைந்து நல்ல
பண்டைய விழுமியப் பண்பாடு
பேணிடவே என்றும் வழிகாட்டு

நெற்றியில் விபூதி அணியாது
நீள்முடி தனையும் கொண்டிங்கே
உடல் ஒட்டிய ஆடைகள் தம்முடனே
உலா வருவோரின் நிலை மாற்று

பெற்றவர், உற்றவர், பெரியோர்கள்
பேணிடும் உறவுகள்தனை மதித்து
நித்தமும்நின்னடி தொழுதேத்தி
நீணிலம் வாழ வழிகாட்டு

*திருமதி கோ.கருணானந்தன்*

## அழகு நகர் பதியுறை பெருமாளே

மதியும் நதியும் வைத்த சிரசினன் மகனாய்
திருவுடை நங்கை திருமால் தம் மருகனாய்
பிரமனின் சகி கலைமகள் மருமகனாய்
திருவுற்று நின்ற வேலனவன் அலங்காரக் கந்தனாய்
அழகுடனே அருள் பொழியும் வள்ளல் பெருமானாய்
நானிலத்தோர் உமை வாழ்த்த தேவரவர்
நாவுக்கினியவனை நயமுடன் தாம்போற்ற
வள்ளி தெய்வயானை சமேதராய் வலம் வரும் நாயகனே
வளம் கொழிக்கும் அழகுநகர் பதியுறை பெருமாளே.

*சிவஸ்ரீ. க.ஜெயராமக் குருக்கள்.*

## வான்மழை போல் வரம் தருவான் நல்லூரான்

வாடிக்கை வேடிக்கைகள் ஆலயத்தில் வேண்டாம்
வடிவேலன் புகழ்பாடி வணங்கிடு நாளும்
விடிகின்ற பொழுதினில் வேலவனின் நாமம் ஓது
விலகி ஓடும் எமை வாட்டும் துன்பங்களெல்லாம்
படியேறி வள்ளி மணாளனைப் பணிந்தேற்று
பண்ணிய பாவங்கள் நீங்கி புண்ணியங்கள் சேரும்
மடிப்பிச்சை ஏற்போர்க்கு மனம்நிறைய அள்ளிக்கொடு
வாடியபயிருக்கு வான்மழைபோல் வரம் தருவான் நல்லூரான்

*யாழ். ஜெயம்தாசன்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தில் பொறுப்பு அதிகரிக்கும். திடீர் பிரயாணம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மனைவி வழியில் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய பதவிக்கான முயற்சியில் ஈடுபடுவர்.

**இடபம்:** உறவினர் வருகையால் கலகலப்பு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், ஆதாயமும் கூடும். குடும்பத் தேவையை ஆடம்பர முறையில் நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வீடு தேடி வரும்

**மிதுனம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீடு தேவைப்படும்; இலாபம் உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும்.

**கடகம்:** மறைமுக எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும்; ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைபிடித்து சேமிப்புக்கு வழிவகுப்பர்.

**சிங்கம்:** குடும்ப நலனில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் பெற நேரிடலாம்.

**கன்னி:** மற்றவர் விடயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் பெருகும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.

**துலாம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். உறவினர்களுக்கு இயன்ற உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** எவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**தனுசு:** மறைமுக எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். உடல்நலத்தில் ஆரோக்கியம் மேம்படும் மருத்துவச்செலவு குறையும். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**மகரம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறி வளர்ச்சி உண்டாகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைப்பயன் கிடைக்கும்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். புதிதாக சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும். மாணவர்கள் வகுப்பில் முன்னிலை வகிப்பர்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் செயல்பட்டு நற்பெயர் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

# பட்டையைக் கிளப்பும் 'தனி ஒருவன்'




ஜெயம் ரவி நடிப்பில் கடந்த வாரம் வெளிவந்த தனி ஒருவன் படம் இரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

மேலும், இந்தப் படத்துக்கு இன்று வரை எந்த ஒரு எதிரான விமர்சனமும் வரவில்லை. இதனால், கடந்த மூன்று நாள்களில் தமிழகம் முழுவதும் இந்தப் படத்துக்கு நல்ல வசூல் கிடைத்துள்ளது. தற்போது சென்னை பாக்ஸ் ஆபிஸ் வசூலைப் பொறுத்தவரை. தனி ஒருவன் திரைப்படம் 3 நாள்களில் 1 கோடிக்கு மேல் வசூல் செய்துள்ளது. தமிழ் சினி மாவைப் பொறுத்தவரை ஜெயம் ரவியின் இதுவரையான திரைப்பயணத்தில் இந்தப்படம்தான் மிகப்பெரிய வசூல் ஈட்டிக் கொடுத்த படம்.







சத்தியம் பண்ணு இனிமேல் எங்க வீட்டு பூச்செடிய சாப்புட மாட்டேன்னு...



google map – பாத்துக்கிட்டே வண்டி ஓட்டிட்டு வந்தா இப்படி தான் ஆகும்.



நாங்க எல்லாம் ரொம்ப பிசி வீட்டுக்குள்ள சிக்னலே இல்ல




சிந்தித்த பின் சிரியுங்க...
தெரியாத கணக்குக்கு நண்பன் துணை

# பதிலுக்கு பதில் தருவாள் பத்தினி



நீண்ட நாள்களாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிறிய தகராறு நிலவி வந்தது. ஒரு நாள் தகராறு பெரிதாகி ஒருவரோடு ஒருவர் பேசுவதை நிறுத்திவிட்டனர்.

சிறிது நாள்களின் பின்னர் கணவன் தொழில் விடயமாக அதிகாலை 5 மணிக்கு புறப்பட வேண்டியிருந்தது. இதனை மனைவியிடம் நேரடியாகச் சொல்ல சுயமரியாதை இடம் தரவில்லை. இதனால் அதிகாலை 5 மணிக்கு எழுப்பிவிடு என ஒருதாளில் எழுதி மனைவியின் தலையணையின் கீழ் வைத்துவிட்டு மனைவி காலையில் எழுப்பி விடுவாள் என்ற நம்பிக்கையில் தூங்கிவிட்டான். காலையில் எழுந்து நேரத்தை பார்த்தால் மணி 7. பயங்கர கோபத்தோடு மனைவியைப் பார்த்தான். ஏன் என்னை எழுப்பிவிடவில்லை என எரிச்சலுடன் கேட்டான். மனைவி அமைதியாக கணவனின் தலையணையை காட்டினாள். அதன்கீழ் ஒரு தாளில் மனைவி எழுதிவைத்திருந்தாள் மணி 5 ஆகிவிட்டது எழுந்திருங்கள் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள்களை ஒழிப்பதில் அதிகாரிகளிடையே ஒற்றுமையில்லை

## ஜனாதிபதியிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப் 2
போதைப்பொருள் ஒழிப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இல்லை என்று அதிகாரிகளால் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தேசிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
நாட்டுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகவுள்ள போதைப்பொருள் பாவனையை முற்றாக களைந்தெறிவதற்கு அமைச்சுக்களும் நிறுவனங்களும் தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் சரியான முறையிலும் திருப்திகரமானமுறையிலும்மேற்கொள்ள வேண்டும் என்று அதன் போது ஜனாதிபதி தெரிவித்தார்.
அமைச்சுக்களும் நிறுவனங்களும் போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்டத்தை முன்னெடுக்கும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் செயற்திட்டங்களின் முன்மொழிவுகள் தொடர்பாகவும் செயற்திட்டத்தில் காணப்படும் வளங்களின் பற்றாக்குறைகள் தொடர்பாகவும் விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளைப் பணித்தார்.
நாட்டில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களைத் தடுப்பதற்காக சோதனைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் சட்டச் சிக்கல்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. போதைப் பொருள் ஒழிப்புக்குஅனைவரும் ஒன்றுபட்டுசெயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.
கலந்துரையாடலில் போதைப் பொருள் ஒழிப்பு செயற்திட்டத்தில் ஈடுபடும்போது நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் மற்றும் அதுதொடர்பான பயிற்சிகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. தவிர போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்டங்கள் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு அவர்களது பணியினை மேலும் ஆர்வத்துடன் மேற்கொள்வதற்கு அவசியமான திட்டமொன்றை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-4)

# கசப்புணர்வை நீக்குவதற்கு மொழி மட்டுமே வழியாகும்

## மட்டு., அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ்மா தெரிவிப்பு

கடந்த காலத்தில் ஏற்பட்ட இனங்களுக்கிடையேயான கசப்புணர்வுகளை நீக்குவதற்கு உள்ள ஒரேயொரு வழி மொழி மட்டுமேயாகும்.அவற்றை கற்பதன் மூலம் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவை பலப்படுத்த முடியும். – இவ்வாறு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ்மா அதிபர் யு.கே. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் சிங்கள பொலிஸாருக்கு தமிழ் மொழியை கற்பிக்கும் செயற்பாட்டின் கீழ் 11ஆவது தொகுதி பொலிஸாருக்கான தமிழ் மொழி பயிற்சி ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை மட்டக்களப்பு,கல்லடியில்உள்ளபொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமானது. அந்தநிகழ்வில்உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
பொலிஸார் தமது கடமைகளைச் சரிவர மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இன்று இந்த நாட்டில் உள்ள பொலிஸாருக்கு மொழி அறிவு உடனடித் தேவையாகவுள்ளது. மொழியறிவு இல்லாவிட்டால் அவர் சரியான பொலிஸ் அதிகாரியாக இருப்பதற்கு தகுதியற்றவராகவே கருத வேண்டும். தமிழ் மொழி மூலம் பயிற்சிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் அந்த மொழி மூலமே அந்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். புரிந்துணர்வை ஏற் படுத்து வதற்கும் இந்தசந்தர்ப்பத்தைபயன்படுத்திக் கொள்ள வேண்டும். – என்றார். (ற)

### கும்பாபிஷேகம்

வரணி வடக்கு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயமகாகும்பாபிஷேக பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை 6.05 தொடக்கம் 7 வரையான சுப முகூர்த்தத்தில் நடைபெற உள்ளது. கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு சிவாகம கிரியா கலாநிதி சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும். (ற-122)

# ரயில் மோதியதில் 3 பசுமாடுகள் சாவு

தென்மராட்சி செப்.2
மிருசுவில் உசனைச் சேர்ந்த இளம் விவசாயி ஒருவரின் மூன்று பசுமாடுகள் ரயில் மோதி உயிரிழந்துள்ளன. இந்தச் சம்பவம் மிருசுவிலில் இடம்பெற்றது.
காலையில் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிட்டபோது அவை பனம்பழங்களை நாடிச் சென்றபோதே ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளன.
எழுதுமட்டுவாழ் கரம்பகம் சந்திக்கும் உசன் சந்திக்கும் இடைப்பட்ட இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் பகுதியில் உள்ள வயல்வெளியை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட 60க்கு மேற்பட்ட மாடுகள் ரயில் சேவை ஆரம்பித்து ஒரு வருடத்தில் ரயில்களால் மோதுண்டு உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ரயில்வே திணைக்களத்தினரால் கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு ஒரு வார காலமாக ஒலி பெருக்கி மூலம் பளை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை அறிவிக்கப்பட் டிருந்தது.
இந்தநிலையில் தென்மராட்சி பிரதேசத்தில் கரம்பகம் சந்தி தொடக்கம் உசன் சந்தி வரையும் சாவகச்சேரி நகர் தொடக்கம் நாவற்குளி வரையான வயல்வெளி காணப்படும் இடங்களில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி ரயில் சேவை ஆரம் பிக்கப்பட்டபின்னர் இதுவரை 200க்கு மேற்பட்ட மாடுகள் ரெயில் மோதி உயிரிழந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# திருட்டு மின்சாரம்: ரூபா 1,22,000 அபராதம்

வலி.வடக்கு, செப்.2
ஏழாலைப் பகுதியில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற இருவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மின்சார சபையினர் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த இருவரும் சிக்கிக் கொண்டுள்ளனர்.
இதில் ஒரு வீட்டில் இருந்து மற்றொரு வீட்டுக்கு மின்சாரம் பெற்றவர்களுக்கு பத்தாயிரம் ரூபாவும், மின்மானியில் மாற்றம் செய்து திருட்டு மின்சாரம் பெற்ற ஒவருக்கு ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரம் ரூபாவும் தண்டமாகவும் மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டமாகவும் மதிப்பிடப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. (ற-86)

# கிணற்றில் தவறி விழுந்து மாணவன் சாவு

வவுனியா, செப்.2
வவுனியா கொந்தக்காரன்குளத்தை சேர்ந்த மாணவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான். அந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.
அப்பகுதியில் உள்ள குளத்தில் மீன்களை பிடித்து வந்து வீட்டில் உள்ள கிணற்றில் குறித்த மீன்களை விட்ட சமயமே சிறுவன் தவறி கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளான். செல்லநாயகம் மதுசன் (வயது–13) எனும் வவுனியா ஓமந்தை மத்திய மகாவித்தியாலத்தில் கல்வி பயிலும் மாணவனே உயிரிழந்தவனாவான்.(ற-402)

# களஞ்சியசாலையில் களவாடியோர் கைது

கொழும்பு, செப்.2
பேலியகொட–நீர்கொழும்பு பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள அரிசி மற்றும் டின்மீன் களஞ்சியசாலையின் கூரையை பிரித்து கடந்த இரு மாதகாலமாக பொருள்களைக் களவாடியதாக கூறப்படும் 20 பேரையும் அதைக் கொள்வனவு செய்து விற்றதாக கூறப்படும் வியாபாரிகள் இருவரையும் சந்தேகத்தின் பேரில் இன்று பொலிஸார் கைது செய்துள் ளனர்.
குறித்த களஞ்சியசாலையில் இருந்து ஆயிரம் மூடை அரிசி மற்றும் 200 டின்மீன் என்பன களவடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.2
நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்தி நாதன் கலந்து கொள்வதுடன் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீட பீடாதிபதி சபா. வாசுதேவக் குருக்கள், யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகி யோரர் நிகழ்த்தவுள்ளனர். (ற-ரி2)

# மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.2
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம், ஹெல்த்திலங்கா நிறுவனம் மற்றும் யாழ்.மாநகர சபையின் சுகாதாரப்பிரிவு ஆகியவை இணைந்து வினாக்குறியும்(?) முற்றுப்புள்ளியும்(.) எனும் தலைப்பில் நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட போதைப்பொருள் மற்றும் மதுவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை இன்று தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை, வரையான பத்துநாள்களும் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 8மணி வரை நல்லூர் சுகாதாரப் பணிமனையில் நடைபெறவுள்ளது.
இந்த விழிப்புணர்வு நடவடிக்கையின்போது கண்காட்சி, நாடக ஆற்றுகை, தனிமனித ஆற்றுகை என்பன இடம்பெறவுள்ளன.
இந்தக் காலத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி2)


**மணமகன் தேவை**
இந்து,1974 ,06,29 இல் பிறந்த,மிருகசீரிடம்(2ஆம் பாதம்) நட்சத்திரம்,கிரகபாவம் 78, 8 இல் செவ்வாய் (தோசம் அற்ற) நேரம் 5.53 P.m இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 077 175 4578

**வேலையாள்கள் தேவை**
இல.171, கே.கே.எஸ் வீதியில் (சத்திரச்சந்திக்கு அருகில்) உள்ள புடைவைக்கடைக்கு வேலையாள்கள் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு : 021 222 8383

**தேவை**
பங்களா இரத்தினநிதிக்குப் பொறுப்பாக வழி நடத்திச் செல்ல சகல பொறுப்புக்களையும் ஏற்க முகாமையாளர் தேவை.
நேர்முகத் தேர்வில் சகலதும் உறுதி செய்யப்படும்(தமிழ், சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
(62597) (12.15.16) அரவிந்தன் :077 313 3057

**தேவை**
யாழ் நகரில் உள்ள பலசரக்குக் கடைக்கு முன் அனுபவம் உள்ள
1 சிட்டை எழுதுநர் }
1 விற்பனையாளர் } ஆண் தேவை.
தொடர்பு : 077 459 8248

**வீடு வாடகைக்கு**
கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு:
077 633 7307,021 205 3622

**பணிப்பெண் தேவை**
யாழ்.நகரில் இருக்கும் 4பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு சமைக்கவும் வீட்டைப்பராமரிக்கவும் 50 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 074 8999

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி உமாவதி ரவீகரன்
(B.com P.G.D.E)
அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற் துறையில் 10 ஆவது அணியின் முதுகல்விமாணி M.Ed. (2nd Upper Class) பட்டம் பெற்றதைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.




10.30, 2.30, 6.30
10.30, 2.30, 6.30, 9.30
10.30, 2.30, 6.30, 9.30
10.30 2.30, 6.30, 9.30
சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30
திருகோணமலை Tel 026 2222221


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டல மாநாடு

யாழ்ப்பாணம் , செப்.2

யெகோவாவின் சாட்சிகளின் மண்டல மாநாடு, இயேசுவை போல் நடந்து கொள்ளுங்கள் என்ற தொனிப்பொருளில் 4,5,6 ஆம் திகதிகளில் காலை 9.20 தொடக்கம் மாலை 4.50 வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் முதல் நாள் நிகழ்வாக மு.ப. 11.45 மணிக்கு ஞானம் என்னும் பொக்கிஷம் அவருக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது எனும் தலைப்பில் உரையும், பிற்பகல் 3.20 மணிக்கு இயேசுவையே எஜமானராகவும் , கிறிஸ்துவாகவும் கடவுள் நியமித்தார் என்ற நாடகம் பகுதி 1 இடம்பெறும். இரண்டாம் நாள் நிகழ்வாக காலையில் மூன்று தொடர் உரைகளும், பி.ப. 3.20 மணிக்கு இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன் 'ஓடியோ' நாடகம் இடம்பெறும். மூன்றாம் நாள் நிகழ்வாக மு.ப. 11.20 மணிக்கு இயேசு கிறிஸ்து உலகத்தை ஜெயிப்பவர் எப்போது? எப்படி ? என்ற தலைப்பில் உரையும், நாடகம் பகுதி 2 இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி4)


41 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கந்தசாமி பரமேஸ்வரி (நகோமி)



பிறப்பு 03.03.1944

இறப்பு 28.07.2015

கடந்த 28.07.2015 செவ்வாய்க்கிழமை திருப்பாதம் அடைந்த எமது தாயாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், அஞ்சலிப்பிரசுரத்தின் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளும் (05.09.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய வசிப்பிடம்
இல.93, கலேண்ஸ்லேன், திருகோணமலை.

நிரந்தர முகவரி
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

077 361 1115
077 495 3392

குடும்பத்தினர்.
S.கலைமதி, S.சுகிர்தினி
S.தர்மினி, K.செந்தூரன்



மரண அறிவித்தல்

செல்வராஜா உதயகுமார் (ரஞ்சன் - சுவிஸ்)



பிறப்பு 28.08.1968 இறப்பு 31.08.2015

பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா உதயகுமார் 31.08.2015 திங்கட்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் புஸ்பராணி (லண்டன்) தம்பதியர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயன் - சின்னப்பிள்ளை, கணபதி - அழகம்மா தம்பதியர்களின் பேரனும் கீர்த்தா வின் அன்புக் கணவரும் கஜன், சுவீத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : ஐயன் மகாலிங்கம் குடும்பத்தினர், ஐ.தேவராஜா, து.இராசமணி, இ.சரஸ்வதி.
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
0775263104, 0757624437 (e2770,11,15,16)



மரண அறிவித்தல்

திருமதி கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம்
(முன்னாள் பணியாளர் - யாழ். ப.நோ.கூ. சங்கம்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம் 31.08.2015 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் யோசப் மற்றும் ஆனாச்சி பாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராயப்பு சுவக்கீனாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், அலெக்ஸ் அமலரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் Dr.யோய் டனீசியஸ், ஜெனீபர் டினோசா(ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி/ ஆசிரிய மாணவி - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), ஜொஸ்லின் டயனிசியா, ஜொய்லின் டியோனிசியா, ஜெனனி டிலக்ஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.தர்மினியின் அன்பு மாமியாரும் அன்ரன் பாலராஜ், றோஸ்.பெலிசிஸ்ரர், குணகுந்தா, மொனிக்காராணி, மெயிலி றோஸ் கிறாசியா, சில்வெஸ்ரர், ஞானதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இமெல்டா யூட், சாமுவேல் செல்வரட்ணம் லீனஸ், விக்ரர் ஜெயதாஸ், தர்மினி, யசிந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.200, குருசோ வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (02.09.2015) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு தூய மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து தூய மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 200, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5447, 077 942 2970

தகவல் :-
குடும்பத்தினர்.


# போதையில் தினமும் கூக்குரலிட்டு அச்சுறுத்திய இளைஞர்கள் சிக்கினர்

## சாவகச்சேரி, டச்சு வீதிப் பகுதியில் மறைந்திருந்து பிடித்தனர் பொலிஸார்

தென்மராட்சி, செப்.2

இரவுவேளைகளில் கூக்குரலிட்டு மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கி வந்த இளைஞர்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். இந் தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி டச்சு வீதியில் நடந் துள்ளது.

இந்த வீதியின் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் தெருவிளக்குகள் நீண்ட நாள்களாக ஒளிராது காணப்படுகின்றன. அதை சாக்காகக் கொண்டு மாலை முதல் இரவு வரை அங்குள்ள கண்டுவில் குளத்தில் இளைஞர்கள் மது அருந்தி வந்துள்ளனர். அதுமட்டுமல்லாது போதை ஏறி முடிந்ததும் வீடு செல்லும் சமயம் கூக்குரலிட்டு மக்களை அச்சமூட்டுவதையும் அவர்கள் தமது பொழுது போக்காகக் கொண்டிருந்துள் ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். அதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் வாகனத்தை மறைவாக நிறுத்தி விட்டு குறித்த இளைஞர்களுக்காகக் காத்திருந்தனர். இளைஞர்களும் வழமை போன்று தமக்குப் போதையேற்றி விட்டு இரவு 10 மணியளவில் கூக்குரலிட்டவாறு வீடுகளுக்குப் புறப்பட்டுள்ளனர். அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்த பொலிஸார் இளைஞர்களின் கூக்குரல் சத்தம் கேட்டு உசாரடைந்தனர்.

கூக்குரலிட்டவாறு இளைஞர்கள் பொலிஸார் காத்திருந்த பகுதிக்கு வந்ததும் அவர்களை மடக்கிப் பிடித்தனர். தலைக்கவசம் அணியாது ஒவ்வொரு மோட்டார் சைக்கிள்களி லும் மூன்று, நான்கு பேர் என்று போதையில் வந்த இளைஞர்கள் பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினர். அவர்கள் அனைவரையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர. (ற)

# அருள்நெறி விழாவின் 15ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் பதினைந்தாம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பி.ப 3 மணிமுதல் பி.ப 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி.ஹேமலோஜினி தலைமை வகிக்கவுள் ளார். பிரதம விருந்தினராக யாழ்ப் பாணப் பிரதேச செயலர் திருமதி தெ.சுகுணரதி கலந்துகொள்ள வுள்ளார்.

நிகழ்வில் ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்கள் குழு நடனம் – மத்திய பிரிவு, ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலையினரின் வில்லிசை– மத்தியபிரிவு, தாவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களிப் நாடகம் – கீழ்ப்பிரிவு, தென் மட்டுவில் வேரற்கணி அற நெறிப் பாடசாலை மாணவர்கள் சி.அபர்ணா, சி.உமாகாந்தன் ஆகியோரின் தனி நடனம், இலக்கண சுவாமி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தே.ஜோசிகா, த.பூர் விகா, வ.தனுஷ ஸ்ரீகன், த.தமிழினி, இ.கபிலா, க.டயானா ஆகியோரின் பேச்சு, சைவசமய விருத்திசங்க அற நெறிப் பாடசாலைமாணவிசுவைஸ்ணவியின் பேச்சு போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன. (ற-10)

# தெய்வீக இசைப்பேருரை

யாழ்ப்பாணம், செப்.2

நல்லூர் சைவ மகா சபையின் ... பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசை பேருரையில் பதினைந்தாம் நாளான இன்று 'சூராதியவுணர் தோற்றம்' இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் பி.ப 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# யாழ்.மாவட்ட டெங்கு மீளாய்வுக் கூட்டம்

தென்மராட்சி, செப்.2

யாழ்.மாவட்ட டெங்கு மீளாய்வுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதில் தொற்றுநோய் கட்டுப்பாட்டு பொறுப்பதிகாரி, அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள், பூச்சியியலாளர், மாவட்ட மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர், அனைத்து மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார கல்வி அலுவலர், டெங்கு செறிவு கூடிய பகுதியாக இனங்காணப்பட்ட பிரிவு பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# இளைஞரைத் தாக்கிவிட்டு தங்கச் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், செப் 2

யாழில் இருந்து இணுவிலில் உள்ள வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு 8மணியளவில்தமது மோட்டார்சைக்கிளில் சென்றவரைத் தாக்கிய கும்பல் தங்கச் சங்கிலி,மற்றும் கைத் தொலைபேசி என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

யாழில் உள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் இணுவிலைச் சேர்ந்த சோ.கிருஸ்ணராம் (வயது 27)என்பவர் வர்த்தக நிலையத்தின் பணி முடித்து வீடு நோக்கிப் பயணித்த வேளையில் மூன்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் சுற்றிவளைத்த கும்பல் ஒன்று அவரை பலமாகத் தாக்கியுள்ளது .

குறித்த தாக்குதலின்போது கிருஸ்ணராம் வீழ்ந்தவேளையில் அவரின் 2பவுன் தங்கச்சங்கிலியையும் கைத் தொலைபேசியையும் அபகரித்த தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் தாக்குதலுக்கு உள்ளானவர் யாழ். பொலிஸில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததோடு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-101)

# மன்னார் முஸ்லிம் மக்கள் தமது பூர்வீக இடங்களில் குடியேறுங்கள்

## வட க்கு அமைச்சர் பா. டெனிஸ்வரன் கோரிக்கை

மன்னார், செப்.2

மன்னார் மாவட்டத்தில் கடந்த போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் மன்னாரில் உள்ள தமது பூர்வீக இடங்களில் விரைவாக குடியேறுங்கள் என வட மாகாண கிராமிய அமைச்சர் பா. டெனிஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

புத்தளம் தில்லையடி முஹாஜிரின் அரபுக்கலூரிக்குச் சென்றிருந்த வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அங்கு சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களை விரைவாக மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியமருமாறு அழைப்பு விடுக்கின்றேன். வடக்கு மாகாணத்தின் அனைத்து மக்களுக்கும் இனம் என்பதை கடந்து நாம் அனைவரும் வடக்கு மக்கள் என்னும் ஓர் பார்வையிலே சேவையாற்றுகின்றேன்.

வெறுமனே பேச்சில் மாத்திரமல்ல இன ஒற்றுமை என்பது அது நமது செயற்பாட்டிலும் இருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (த-5)

# வீதியைக் கடந்த சிறுவனை மோதியது மோ. சைக்கிள்

தென்மராட்சி செப்.2

வீதியைக்கடக்க முயன்ற சிறுவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மட்டுவில் வடக்கில் நடந்துள்ளது.

பாடசாலை உபகரணம் வாங்க பேர்த்தியுடன் கடைக்குச் சென்ற வேளையில் வீதியைக் கடக்க முற்பட்டபோதே இந்த விபத்து நடந்துள்ளது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த சந்திரலிங்கம் சஞ்ஜீவன் (வயது-6) என்னும் சிறுவனே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளான். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலையங்களுக்கு 10 ஆயிரம் ரூபா

கரணவாய், செப். 2

வடக்கு மாகாண சபையின் மூலதன நன்கொடை நிதியின் மூலம் கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள 85 சனசமூக நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கும் நிலையிலுள்ள சனசமூக நிலையங் களுக்கே இந்த நிதி வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக சுமார் 46 சனசமூக நிலையங்களுக்கான காசோலைகள் நேற்று கரவெட்டிப் பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நன்கொடை நிதியைப் பெற்றுக் கொள்ளாத நிலைய நிர்வாகிகள் சகல ஆவணங்களையும் சமர்ப்பித்து எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளர் கனகதுரை அறிவித்துள்ளார். (ற–108)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு அபராதம்

கிளிநொச்சி, செப்.2

கசிப்பு ஒரு போத்தல் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று.

கிளிநொச்சி திருநகர் வடக்கு பகுதியில் சட்ட விரோதமான முறை யில் கசிப்பு 1 போத்தல் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது குற்றவாளி தானே குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் 6 மாதம் கடூழிய சிறைத் தண்டனை வழங்குமாறும் உத்தர விட்டார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வகாப்தீன். (ற–21,ரி)

## சிறுமிகள் மீது துஷ்பிரயோக முயற்சி: இருவர் கைது

திருகோணமலை, செப்.2

திருகோணமலை மற்றும் பொகவந்தலாவை ஆகிய பகுதிகளில் இரு சிறுமிகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மகாதிவுல்வெல பகுதியில் 14 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற சந்தேகநபர் ஒருவரை மொறவெல பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை இன்று திருகோணமலை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பொகவந்தலாவையில் 11 வயது மாணவியை வான் ஒன்றுக்குள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற 54 வயதான ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாணவியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே குறித்த சந்தேகபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சீர்கேடுகள் குறித்து மாதர் சங்கத்தில் பேசியதால் தாக்கப்பட்டனர் பெண்கள்!

## கைதடி மத்தியில் சம்பவம்

தென்மராட்சி, செப்.2

பிரதேசத்தில் நடைபெற்றுவரும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக மாதர் சங்கக் கூட்டத்தில் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்ட இரு பெண்கள், கூட்டம் முடிந்த பின்னர் வெளியில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். காயங்களுக்கு உள்ளான இரு பெண்களும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைதடி மத்தியில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றபோது பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு கட்டுப்படுத்த வேண்டுமென இரு பெண்களும் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். ஊருக்கு நல்ல பெயர் கிடைக்கவேண்டுமாயின் பெண்களாகிய நாங்கள் சமூகச் சீர்கெடு இடம்பெறாமல் பாதுகாப்பதுடன் அவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தால் உரிய தரப்புக்கு அறிவித்து தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தியுள் ளனர்.

கூட்டம் முடிந்து வெளியே வந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த பெண் உட்பட நான்குபேர் மண்டபவாசலில் வைத்து இரு பெண்களையும் 'வன்னியிலிருந்து வந்து எங்களை திருத்த முற்படுகிறீர்களா?' என்றும், தரக்குறைவான வார்த்தைகளைப் பிரயோகித்ததுடன் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்துக்காக வந்திருந்த பெண்கள் அனைவரும் இரு பெண்களையும் தாக்கும்போது தடுக்க முயற்சிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலைக்கவசம் மற்றும் கொட்டன்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் யெளலி (வயது–30) கணேசன் மகேஸ்வரி (வயது–56) ஆகி யோரே தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர். (ற–9)

## விபத்தில் இருவர் காயம்

மட்டக்களப்பு, செப்.2

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச்சென்ற மட்டக்களப்பு டிப்போவிற்கு சொந்தமான இலங்கை போக்குவரத்துச்சபை பஸ், டீசல் நிரப்புவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் வண்டியின் பின்பாக மோதியது. இதனால் தனியார் பஸ் அதற்கு முன் நிறுத்தி இருந்த டிப்பர் வாகனத்தில் மோதியது.

இந்த விபத்துக் காரணமாக இ.போ.ச பஸ்ஸில் பயணித்த இருவர் காயமடைந்து ஆரையம்பதி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் காரணமாக இ.போ.ச. பஸ் மற்றும் தனியார் ப்ஸ் வண்டி பலத்த சேதமடைந்துள்ளதுடன் சில மணிநேரம் போக்குவரத்தும் தடைப்பட்டது. காத்ததான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், செப்.2

மோட்டார் சைக்கிள் – தனியார் பஸ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்த மற்றவர் வைத்தியசாலையில் இன்னும் மயக்க நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்பாகக் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்த விபத்து இடம்பெற்றது. அதில் கல்மடுநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த தியாகராசா பிரசாந்தன் (வயது –20) என்பவரே உயிரிழந்தார். அவருடன் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த சண்முக வடிவேல் அஜந்தன் என்பவர் காயமடைந்தார்.

விபத்தையடுத்து இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையிலேயே பிரசாந்தன் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்தார். இவருக்குகல்வியியற் கல்லூரியில் கற்கையை மேற்கொள்ள அனுமதி கிடைத்திருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ற–4)

## பிராந்திய சுகாதார பணிமனை திறப்பு விழா

வவுனியா, செப்.2

வவுனியா மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை நாளை வியாழக் கிழமை மு.ப. 10 மணிக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கத்தால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனின் வழிகாட்டலில் இந்தப் பணிமனை நிர்மாணிக்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. (ற)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.2

பன்னாலை தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியிறக்கத்துடன் நிறைவடையவுள்ளது. உற்சவத்தில் 12ஆம் திகதி சனிக்கிழமை தேர் இடம்பெறவுள்ளது. (ற–10)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.2

வள முன்னேற்றத்துக்கும் ஆளணித் திரட்டலுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் தனிமனித அபிவிருத்தியும் தலைமைத்துவமும் என்னும் தொனிப் பொருளில் முழுநாள் பயிற்சி செயலமர்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 6ஆம் திகதி தியாகி அறக்கொடை நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்தச் செயலமர்வில் தனிமனித மற்றும் சமூக வாழ்க்கையில் வெற்றிகரமாகத் திகழ்வதற்குரிய ஆளுமையை விருத்தி செய்தல், நிறுவனங்கள் சார்ந்த செயற்பாடுகளை முன்னேற்றகரமாக முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான பரந்துபட்ட எண்ணக்கருக்களை உள்ளடக்கியதாக பேராசிரியர் சிறி கந்தையா விரி வுரையாற்றவுள்ளார்.

இந்த விரிவுரை பேராசிரியரின் கடந்த 20 ஆண்டுகால உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் திறன் சார் விருத்தியில்பங்கேற்ற அனுபவங்களையும் பிரச்சினைத் தீர்விற்கான வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக அமையும் எனவும் செயலமர்வானது நிறுவன இலக்கு அமைப்பு வினைத்திறனான தகவல் பரிமாற்றம், அர்ப்பணிப்பு, சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல், குழுவேலை நேர்மறை எண்ணங்கள், திட்டமிடலும் ஒழுங்குபடுத் தலும், பொருத்தமான சூழலை முன்நகர்த்தல் என பலதரப்பட்ட விடயங்களை கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பயனடைய முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–10)

## போலி நாணயத் தாள்களுடன் ஓட்டமாவடியில் ஒருவர் கைது

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிர தேசத்தில் போலி நாணயத்தாள் களுடன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என்று வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

குறித்த நபர் மீராவோடையிலுள்ள கடை ஒன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 500 ரூபா போலி நாணயத்தாளைக் கொடுத்து பொருள்கள் வாங்க முற்பட்ட வேளை அவர் கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருகோணமலை மூதூர் நடுத்தீவு பிரதேசத் தைச் சேர்ந்த ஒருவரே கைது செய் யப் பட்டுளார். இவரிடமிருந்து 12 போலியான ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் களும், 15 போலி ஆயிரம் ரூபா நாணயத் தாள்களும் 15 ஐந்நூறு ரூபா நாணயத்தாள்களும் மீட்கப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைக்கு உட் படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## வீரசிங்கம் ஆ.வி. நுழைவாயில் திறப்பு விழா

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் இன்று காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் 20 வருடங்களாக ஆசிரியராகவும், கனிஷ்ட பிரிவுத் தலைவராகவும் கடமையாற்றிய திருமதி மகாலட்சுமி பத்மநாதன் மற்றும் அருணாசலம் பத்மநாதன் ஆகியோரின் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப வித்தியலாய அதிபர் கா.கந்தசாமி தலை மையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மீசாலை மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல் விப் பணிப்பாளரும் வித்தியாலய பழைய மாணவனுமான கு.சிவானந்தம் கலந்து கொண்டு நுழைவாயிலைத் திறந்து வைக்கவுள்ளார். (ற–9)


**பெயர் மாற்றம்**

இல - 15, சங்கிலியன் வீதி, நல்லூரில் வசிக்கும் கோபாலபிள்ளை தேவயோகன் ஆகிய நான் எனது பெயரை **கோபாலபிள்ளை தவயோகம்** என மாற்றிக் கொள்கின்றேன். இன்று தொடக்கம் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயராகிய **கோபாலபிள்ளை தவயோகம்** என பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே சகல ஆவணங்களிலும் ஒப்பமிடுவேன் எனவும் அறியத்தருகின்றேன்.

No - 15, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

கோபாலபிள்ளை தவயோகம்.

**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**கூறுவிலை கோரல்**

எமது சங்கத்தின் பராமரிப்பில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு 12.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலைகளை சமர்ப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

பொதுமுகாமையாளர்.

(அ18572) (15.14)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**WALK -IN – INTERVIEW**

Walk in interview for appointments to the following posts, which is scheduled to be held on 2nd September 2015, has been postponed to 6th September 2015 due to unavoidable circumstances.

Posts of Temporary Lecturer/Temporary Tutor/Temporary Instructor in Linguistics/ English Literature/English Language Teaching/ /Tamil / Translation Studies/ Christian Civilization/ Geography

All the qualified candidates for the above posts are requested to be present for the walk–in –interview at **9.00 a.m on 6th September 2015 (Sunday)** at the Board Room of the University of Jaffna

**Registrar**
University of Jaffna
**01.09.2015**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

பாரம்பரிய சித்த ஆயுள்வேத பரம்பரைக்குரியவரும்,வடக்குகிழக்கு மாகாண முன்னாள் சுதேச மருத்துவப் பணிப்பாளராகக் கடமையாற்றியவரும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி அதிபராக இருந்தவருமான சுதுமலையைச் சேர்ந்த

**Dr.பூ. உ.ரோமகேஸ்வரன்**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததை நினைந்து துயரடைகின்றோம்.சித்த ஆயுள்வேத மருத்துவத்தை சிறந்த முறையில் முன்னெடுத்த ஒரு சிறந்த சுதேச வைத்தியரை நாம் இழந்து விட்டோம். அவரது பிரிவால் வேதனைப்படும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலை த் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றோம்

Dr. ஜெ. ஜெயலன்,Dr. திருமதி ச.ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை
தாய்மை பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை நாச்சிமார் கோவிலடி,
K.K.S வீதி,யாழ்ப்பாணம்.

## இதய அஞ்சலிகள்

எனது நண்பர் Dr. சுரேந்திரன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை) அவர்களது அன்பு வளர்ப்புத் தாயார்

**குணரத்தினம் பராசக்தி**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியுமடைந்தோம். என் நண்பருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அன்னாரது பிரிவினை தாங்கும் சக்தியையும் அவரது ஆன்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

அன்பு நண்பன் Dr.ஜெயலன்,
Dr.Mrs.ச.ஜெயலன்
சுஜீவா வைத்தியசாலை (நாச்சிமார் கோவிலடி) யாழ்ப்பாணம்.

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08.09.1954

மறைவு
01.09.2007

திதி: சங்கடஹரசதுர்த்தி

**அமரர் சின்னத்துரை சிவபாதம்**

(முன்னாள் வாடிக்கைசேவை முகாமையாளர் - இலங்கை வங்கி)

ஆண்டுகள் எட்டு ஆயிற்று
தேய்ந்து போனது காலம்தான்
வளர்ந்து போனது உம் நினைவுதான்
வேண்டும் வரங்கள் தந்து அருள் புரியும்
எம் வேலன் திருவடி நிழல் என்றும் காவல்

பொன்னம்பலம் வீதி,
காரைநகர். குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.09.1924

மறைவு
08.09.2009

திருமதி
**கனகம்மா செல்லத்துரை**

திதி: சதுர்த்தி
(02.09.2015)

எம் குடும்பத்தின் மூத்த குலவிளக்காய்
எமக்கெல்லாம் ஒளி தந்து நல்வழி காட்டிய
எம் தீபம் அணைந்து ஆறாண்டுகள் கடந்தாலும்
எம் நினைவினிலே என்றும் எம்மோடு வாழ்ந்து
எமை வழிநடத்திச் செல்வீரம்மா
மாறாது உம் நினைவு ஆறாது எம் நெஞ்சம்.

'தாய் அகம்'
பழைய வீதி, கோப்பாய்
தெற்கு, கோப்பாய். குடும்பத்தினர்.

## பிரதேச செயலகங்கள் அனைத்திலும் பிறப்பு, இறப்பு,விவாக பதிவு சான்றிதழ் பெறலாம்

யாழ்ப்பாணம் , செப்.2

யாழ்.மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

2014 ஆம் ஆண்டு வரையிலான மாவட்டத்தின் சகல பிறப்பு , இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் எல்.ஜி.என் வலையமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே யாழ் மாவட்டத்தில் வதியும் பொதுமக்கள், சான்றிதழ்களை யாழ். மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் , பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.– என்றார். (ற–ரி4)

## நினைவஞ்சலி

19ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு



தோற்றம்
01.08.1930

மறைவு
21.08.1996

அந்தோனிப்பிள்ளை பாக்கியரட்ணம்



தோற்றம்
24.12.1919

மறைவு
02.09.2013

பேதுரு அந்தோனிப்பிள்ளை

வானுலகம் சென்றாலும் எமக்கு வழித்துணையாக இருக்கும் எம் தெய்வங்களே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா ஐயா என்றழைத்து மகிழ நீங்கள் இல்லையே!
நிலைத்து விட்ட உங்கள் அன்பால் ஆண்டுகள் பல கழிந்தாலும் உங்கள் நினைவுகள் எம்முள்ளத்தில் என்றுமே நிலைத்திருக்கும்.
ஆண்டவர் சந்நிதியில் இளைப்பாறுவீர்களாக.

துயரத்துடன் பிள்ளைகள்.
திருமதி ஏ.வி.சில்வெஸ்ரர்.
மன்னார்.

## விழிநீர் சொரியும் ஐந்தாண்டு நினைவலைகள்




**அமரர் சந்தணம் ஆச்சாரி சவுந்தரராஜன் ஆச்சாரி**

(உரிமையாளர் - துர்க்கா நகைப்பூங்கா)

மண்ணில்
12.10.1954

விண்ணில்
28.08.2010

திதி: அபரபக்ஷ சதுர்த்தி (02.09.2015)



*நிறைந்து நிற்கும் நினைவுகள்....*

உங்கள் உயிர்ச் சொட்டுகளின் குமுறல்.......
காலங்கள் மட்டுமே கரைந்தன
நினைவுகளல்ல.......
நொடி கடந்தாலும் வலிக்கிறது வாழ்க்கை வரை....
உயிரணுக்களில் நினைவென்ற ஒன்றுவரை
மறந்து போகாத நினைவு....
அந்த மென்சிரிப்பு....
மெலிதான புன்னகை...
அதிகமில்லா பேச்சு....
இனி இல்லையென அறிந்தும்
எதிர்பார்க்கும் மனசு ???...
வாழ்வின் சகல வசந்தங்களையும்
எமக்குக் காட்டி
வராமலே போனது எமது உயிர்
நிமிர்ந்து நின்று சொல்வோம் எமது வாழ்க்கை
உங்கள் உணர்வுகளும் நினைவுகளும்தான்
எமது வாழ்வடங்கிப் போகும்
கடைசிக் கணங்களிலும்
உங்கள் நினைவுகள் மட்டும் நிறைந்து நிற்கும்.....

**குடும்பத்தினர்.**

38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் கண்விழிக்க உதவும் கட்டில்



நம்மில் பலர் காலையில் நேரத்துக்கு எழும்புவதற்காக அலாரம் வைத்துவிட்டு பின்னர் அலாரம் அடிக்கும்போது அதனை நிறுத்திவிட்டு தொடர்ந்து தூங்குவதும் உண்டு. இவ்வாறானவர்களுக்கு உதவக்கூடிய வகையில் அவர்களை தானாகவே எழுப்பிவிடும் கட்டில் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. High Voltage Ejector Bed எனும் இந்த கட்டில் உயர் மின் அழுத்தத்தில் செயற்படுகின்றது. காலையில் நித்திரைவிட்டு எழுந்திருக்கவேண்டிய நேரத்தை குறிப்பிட்டால் போதும் சரியான நேரத்துக்கு உங்களை நித்திரையில் இருந்து எழுப்பிவிடும். சடுதியான முறையில் நித்திரையில் இருந்து எழுப்புவதால் உடனடியாக மீண்டும் நித்திரை செய்யும் மனநிலையை இல்லாமல் செய்து இந்தக் கட்டில்.

# எபோலா நோய்க்கான தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு

அண்மைய காலங்களில் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட எபோலா நோய்க்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 100 சதவீதம் வினைத்திறன் கொண்ட VSVdZEBOV எனப்படும் இந்த தடுப்பு மருந்தைக் கென்யா நாட்டில் உள்ள 4,123 வரையிலான நோயாளிகளில் வெற்றிகரமாக பரீசித்துப் பார்க்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் அதி உச்ச நோய்த்தாக்கத்துக்கு உள்ளானவர்களாகும். எனினும் அனைவரும் பூரண குணமடைந்திருந்தனர். அதன் பின்னர் மற்றுமொரு குழு குறித்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளான 3,528 பேருக்குத் தடுப்பு மருந்தை செலுத்தியுள்ளனர். இவர்களில் 16 பேரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் 6 நாள்களில் குணமடைந்திருந்ததாக தெரிவிக் கப்பட்டுள்ளது.



# சாதனை படைத்தது Angry Birds 2




Rovio நிறுவனம் நேற்றைய தினம் Angry Birds 2 கேமினை அன்ரோயிட் சாதனங்களுக்காக அறிமுகம் செய்திருந்தது. இந்த கேம் அறிமுகம் செய்யப்பட்டு 12 மணித்தியால நேரத்தில் சுமார் ஒரு மில்லியன் தரவிறக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சாதனை புரிந்துள்ளது. இதில் முன்னைய பதிப்பை விடவும் சவாலான கட்டங்கள் உள்ளடக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட கிராபிக்ஸ் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன. முற்றுமுழுதாக இலவசமாகக் கிடைக்கும் இக் கேமானது கேம் பிரியர்களை வெகுவாகக்கவர்ந்து வருவதால் இது மேலும் பல மில்லியன் தரவிறக்கங்களை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சாதகமான முடிவுகளை மு.கா. தலைமை எடுக்கும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் நம்பிக்கை

திருகோணமலை, செப்.2

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் எவரையும் பாதிக்காத வகையில் சாதகமான முடிவுகளை எடுக்குமென்பதை நம்புகின்றோம் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி மத்தியகுழு உறுப்பினர்களுக்கான கூட்டம் காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். அவர்கள் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் எமக்கு வாக்களித்துள்ளனர். அவர்களை உதாசீனம் செய்யமுடியாது. அவர்களுக்கு நடக்கின்ற அநியாயங்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய பலமுடைய ஓர் அரசியல் அதிகார பலத்தைக் காத்தான்குடியில் எதிர்பார்க்கின்றனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கடந்த வாரம் நான் சந்தித்தபோது கூறியிருந்தேன்.

50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்த மாவட்டத்திலும் காத்தான்குடியிலும் எமது கட்சி பெற்றதுடன், முஸ்லிம் காங்கிரஸின் வாக்கு வங்கியையும் அதிகரிக்கச் செய்து இந்த மாவட்டத்துக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் பெற்றுக் கொடுத்துள்ளது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இதன் மூலம் எமக்குசாதகமானநிலைமை தோன்றியுள்ளது. – என்றார்.(ற)

# ஆரம்பப் பிரிவு பாடசாலைக்கு அடிக்கல்

புத்தளம், செப்.2

புத்தளம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடப்பு ஆண்டிமுனை ஊற்றடிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள சிறி கிருஷ்ணா ஆரம்பப் பிரிவு பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

வடமேல் மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட 5.6 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக் கல்லை வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம்.ரீ.எம்.தாஹீர் நட்டார். இந்த நிகழ்வில் உடப்பு இந்து ஆலய பரிபாலன சபைத்தலைவர் பெ.வீரபத்திரன், முந்தல் பிரதேச செயலக பரிபாலனப் பிரிவு அதிகாரி ஜானக பெர்னாந்து, அதிபர் க.தொண்டமான், உடப்பு பொலிஸ் அதிகாரி உட்பட எனைய பலரும் கலந்து கொண்டனர்.

(ற)





உயர்தர பரீட்சையை முடித்து விட்டீர்களா?

எங்களுடன் இணைந்து ஆங்கிலம் கற்க வாருங்கள்

தற்போது பதிவு செய்யலாம்!

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும் பிள்ளைகளுக்கு (6-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000.

70 நக்கா வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830–1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600


இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகிலேயே மிக அழகான சிலந்தி ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் கடந்த மாதம் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு பீகாக் ஸ்பைடர் (மயில் சிலந்தி) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. 3 முதல் 5 மி.மீ. அளவுவரை நீளமாக இருக்கும் இந்தச் சிலந்தியின் முகம் நீல நிறமாக உள்ளது. (ஐ)



## திகில் திரைப்பட இயக்குநர் வெஸ் கிரவின் சாவு

வொஷிங்டன்,செப்.2


அமெரிக்காவின் திகில் திரைப்பட இயக்குநர் மூளைப் புற்றுநோயினால் தமது 76 வயதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார் என அமரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இவர் தனது முதல் திரைப்படமான "தலாஸ்ட் ஹவுஸ் ஒன் த லெப்ட்"க்கு இயக்கம், திரைக்கதை வசனம், எடிட்டிங் போன்றவற்றைச் செய்திருந்தார். 1984 இல் வெளியான "எ நைட் மார் ஒன் எல்ம் ஸ்ட்ரீட்" திரைப்படம், 100 மில்லியன் டொலர் வசூலைக் குவித்தது. இவர் தற்போது தொலைக்காட்சி திகில் தொடர்களை இயக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ–ரி4)

# இந்தியா–பாக்.பதற்றம் தனிய பேச்சே ஒரேவழி

## அமெரிக்கா கருத்து

வொஷிங்டன்,செப்.2

இந்தியா – பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நிலவி வரும் பதற்றத்தைத் தணிக்க பேச்சு நடத்துவது மட்டுமே ஒரே தீர்வு என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் மார்க் சி டோனர் அளித்த பேட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும் தங்களுக்கான உறவைப் புதுப்பித்து கொள்ள, இரு நாடுகளும் முயற்சி செய்ய வேண்டும் என்றார். ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகள் இடையேயான எல்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு பேச்சு மூலமே தீர்வு காண முடியும் என அமெரிக்கா நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆக்கப்பூர்வமான பேச்சு நடைபெறுவதை அமெரிக்கா ஊக்கப்படுத்தும் என்று கூறியுள்ள மார்க், ஏனைய நாடுகளின் தலையீடு இல்லாமல் பதற்றத்தைத் தணிக்கும் நடவடிக்கையில் இரு நாடுகளும் ஈடுபட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.



கடந்த வாரம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலான பேச்சு நடைபெற இருந்து பின்னர் திடீரென ரத்துச் செய்யப்பட்டது. காஷ்மீர் பிரிவினைவாதிகளுடன் பேச்சு நடத்தப்படும் என பாகிஸ்தான் அறிவித்ததே பேச்சு வார்த்தை ரத்துச் செய்யப்பட்டதற்கு காரணம். இந்த நிலையில் இந்தியா – பாகிஸ்தான் இரு நாடுகளும் பிரச்சினைகளைப் பேச்சு மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ஐ)

## அகதிகளின் மீள் குடியேற்றம் ஆஸ்திரேலிய அரசு மறுப்பு

சிட்னி,செப்.2

கடந்த வருடம் செப்ரெம்பர் மாத ஒப்பந்தத்தின் அடிப்படையில், நவ்ரு தீவில் நிராகரிக்கப்பட்ட அகதிகளை, கம்போடியா நாட்டுக்கு குடியமர்த்த ஆஸ்திரேலியா பணம் செலுத்தி வருகிறது. நான்கு பேர் மட்டுமே, நவ்ரு தீவை விட்டுப் போக முன்வந்த நிலையில், கம்போடிய அரசின் ஊடகப் பேச்சாளர், நாட்டினுள் எவரையும் அனுமதிக்கும் திட்டம் இல்லை என கண்டிப்பாகக் கூறியதாக, கம்போடிய ஊடகங்கள் அறிவித்துள்ளன. ஆஸ்திரேலியா, 40 மில்லியன் டொலர் உதவி உட்பட அகதிகள் குறித்த ஒப்பந்தத்துக்காக 55 மில்லியன் ஆஸ்திரேலிய டொலரை ஒதுக்கியுள்ளது என ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. கம்போடியாவின் உள்துறை அமைச்சகப் பேச்சாளர் கெயு சொபேக் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் "அகதிகள் இங்கு சந்தோசமாக வாழ்கிறார்கள்,ஆனால் நவ்ருவிலிருந்து மேலும் அகதிகளை மீள் குடியேற்றும் திட்டம் எமக்கு இல்லை, இருப்பவர்களைப் பராமரிப்பதே போதுமானது" எனத் தெரிவித் துள்ளார்.

கம்போடியாவில் அகதிகள் தொடர்பான உண்மை அறிக்கை நவ்ருவினரின் அகதிகள் சேவைக்கு ஒரு ஊக்குவிப்பாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகும் அகதிகளை, நாட்டுக்குள் அனுமதிக்காமல், அதற்கு பதிலாக பப்புவா நியூ கினி நவ்ரூ மற்றும் மனுஸ் போன்ற தீவு நாடுகளில், சில வசதிகளுடன் காவலில் வைத்துள்ளனர். கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் சபை, ஆஸ்திரேலியா வுக்கு உதவி செய்யும் கம்போடியா வின் மீள் குடியேற்ற முயற்சிக்கு எதிராக விமர்சித்துள்ளது. அகதி களின் கைவிடப்பட சூழ்நிலைகள் தொடர்பாக மனித உரிமை குழுக்கள் ஆஸ்திரேலியா குற்றம் சாட்டியுள்ளது. (ஐ–ரி4)

## தமிழகத்தின் அடுத்த முதல்வர் யார்?

சென்னை,செப்.2

தமிழகத்தில் 28 மாவட்டங்களில், 80 சட்டப்பேரவைத் தொகுதிகளில் கடந்தவாரம் 3 ஆயிரத்து 320 பேரிடம் கருத்து கணிப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அதில், சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு 34.1 சதவீதம் பேர் வாக்களிப்பதாகத் தெரிவித்துள்ளனர். தி.மு.க.வுக்கு 32.6 சதவீதம் பேர் வாக்களிப்போம் எனக் கூறியுள்ளனர். தே.மு.தி.க.வுக்கு 4 சதவீதம் பேரும், பா.ம.க.வுக்கு 3 சதவீதம் பேரும், பா.ஜ.கவுக்கு 2.9 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதன் மூலம் சட்டப்பேரவை தேர்தலில் மீண்டும் அதிமுக வெற்றி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த முதல்வராகும் வாய்ப்பு யாருக்கு என்பதில் ஜெயலலிதா முதலிடத்தையும், ஸ்டாலின் இரண்டாவது இடத்தையும், கருணாநிதி 3 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (ஐ)

# அசாமில் வெள்ளம்

### 4 லட்சம் பேர் பாதிப்பு

புதுடில்லி,செப்.2

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் வெள்ளப் பாதிப்பு மிகவும் தீவிரமடைந்துள்ளது. இந்த வெள்ளத்தினால் ஏராளமான நகரங்களும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இது பற்றி அசாம் மாநில பேரிடர் நிவாரண ஆணையம் கூறியிருப்பதாவது, தேமாஜி, திப்ருகார், தின்சுகியா மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பு மிகவும் மோசமாகவுள்ளது.



கடந்த இரண்டு நாள்களாக சுமார் 700 கிராமங்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4.84 லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## வெனிசூலா சிறையில் பயங்கர தீ விபத்து

### 17 கைதிகள் உடல் கருகி சாவு

வெனிசூலாவில் உள்ள சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வடக்கு வெனிசூலாவின் காரபோபா மாநிலத்தில் உள்ள டோகுயிட்டோ சிறைச்சலையில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் 9 ஆண்கள், 8 பெண்கள் என 17 பேர் இறந்ததாகவும், 11 பேர் படுகாயமடைந்ததாகவும் அரச வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் வேலன்சியாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தீ விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கும் அதிகமாக கைதிகளை அடைத்து வைத்திருக்கும் வெனிசூலா சிறைச்சாலைகளில் அடிக்கடி கைதிகள் சாவடைகின்றனர். சிறைச்சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தவில்லை என மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியப் பிரதமர் பதவி விலக மறுப்பு



கோலாலம்பூர்,செப்.2
மலேசியாவின் அழிவுக்கு ஒரு போதும் துணை நிற்க மாட்டேன் அத்துடன்நான்பதவிவிலகப்போவது மில்லை என அந்த நாட்டு பிரதமர் நஜீப் ரசாக் தெரிவித்துள்ளார். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான மலேசியாவில், பிரதமர் நஜீப் ரசாக் மீது,பலஆயிரம்கோடிரூபாய்ஊழல் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவர் பதவி விலக வலியுறுத்தி, மலே சிய தலைநகர் கோலாலம் பூரில் பெர்சிஎன்றசமூகஅமைப்புப்போராட் டம் நடத்தியது. இந்த நிலையில் நேற்று முன் தினம் மலேசியாவின், 58 ஆவது சுதந்திர தின விழாவை யொட்டி, நஜீப் ரசாக் உரையாற்றி யுள்ளார். மலேசியா, பல தலைவர் களின் தியாகத்தில் உருவானது. எமது முன் னோர்கள், மக்கள் அமைதியுடன், சுதந்திரமாக வாழ, உயிர்த் தியாகம் செய்துள்ளனர். அப்படிப் பாடுபட்டு உருவாக்கிய தேசத்தை, உள்நாட்டு சக்திகளோ அல்லது அந்நியரோ சுலபமாக நுழைந்து, அழிக்க விடமாட்டோம். எம்மிடம் ஒற்றுமை இல்லை யென் றால், எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. போராட்டத்தால், பொது அமைதி சீர் குலைந்தது. அதனால், பொதுமக்கள் தான் பாதிக் கப்பட்டனர். ஜனநாயக நாட்டில், கருத்துக்களை வெளியிட, போராட் டம் சரியான வழி அல்ல. மக்கள் அமைதி காக்க வேண்டும். நான் பதவி விலக மாட்டேன். அரசின் செயற்பாடுகளை, மக்கள், வாக்குகள் மூலம் தீர்மானிக்கட்டும் எனத் தெரி வித்துள்ளார். (ஐ)

# பணயக் கைதிகள் உயிருடன் எரிப்பு

## ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூரச் செயல்



பாக்தாத், செப்.2
ஈராக்கில் 4 பேரை ஐ.எஸ். தீவிர வாதிகள்உயிருடன்எரித்துக்கொலை செய்து, அதன் வீடியோக் காட் சியை இணையத்தளத்தில் வெளி யிட்டுள்ளனர். அந்தக் குறிப்பிட்ட வீடியோவில் 4 பேர் இரும்புச் சங் கிலியால் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில், எரித்துக் கொல்லப்படும் காட்சி இடம்பெற்றுள்ளது. அந்த வீடியோ வில் தோன்றும் முகமூடி அணிந்த தீவிரவாதி ஒருவர் ஈராக் அரச படையினர் எங்கள் அமைப்பைச் சேர்ந்த 4பேரைஉயிருடன்கொளுத் தினர். அதற்குப் பழி வாங்கவே இப்போது 4 பேர் எரித்துக் கொல் லப்படுகின்றனர் எனத் தெரிவித் துள்ளார்.
மேலும், இந்த வீடியோ வானது தலைநகர் பாக்தாத்திலி ருந்து 400 கிலோ மீற்றர் தொலை வில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள ருட்பா நகரில் எடுக்கப்பட்டதாக வீடியோ வில் தோன்றும் தீவிரவாதி தெரி வித்துள்ளார். (ஐ)



நேபாளத்தில் உள்ள ஹொங்கானா கிராமத்தில் இளைஞர்கள் தண்ணீரில் வீசப்பட்ட ஆட்டைத் துரத்தி தண்ணீரில் மூழ்கடித்துச் சாகடிப்பதை திருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர். இந்த விழா 900 வருடங்கள் பழமையானதெனக் கூறும் இந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்ட இனத்தவரால் மட்டுமே இது ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த வருடத்துக்கான விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஐ)

## ஈரானில் உளவு பார்த்த இருவருக்குச் சிறை



டெஹ்ரான்,செப்.2
அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடு களுக்காக ஈரானில் உளவு பார்த்த 2 பேரை ஈரான் அதிகாரிகள் சிறைப் பிடித்தனர். அவர்கள் மீதான விசா ரணை அங்குள்ள புரட்சிகர நீதிமன் றில் நடை பெற்று வந்தது. தேசிய பாதுகாப்புக் குற்றங்களை விசா ரித்து வரும் இந்த நீதிமன்றம், உளவு பார்த்த இருவருக்கும் தலா 10 வரு டங்கள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்தத் தகவலை ஈரான் நீதித்துறைச் செய்தித் தொடர் பாளர் கோல முசேன் மோசேனி எஜெய் வெளியிட்டுள்ளார் எனினும் அந்த இருவ ரின் பெயரையும் அவர் வெளியிடவில்லை. (ஐ)

## உக்ரைனில் குண்டுவெடிப்பு



கீவ்,செப்.2
உக்ரைன் நாட்டின் நாடாளும[illegible]ச் கட்டடத்துக்கு வெளியே [illegible]று சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெ[illegible]ந்த தால் அந்தப் பகுதியே புகை[illegible]ன் டலமாகக் காட்சியளித்தது. [illegible]ரி வினை வாத பிராந்தியங்க[illegible]கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் [illegible]ட முன்வரைவுக்கு எதிர்ப்புத் [illegible]ரி வித்து நேற்று முன்தினம் நா[illegible]ளு மன்றுக்கு வெளியே ஏராளமா[illegible]ர் போராட்டத்தில் ஈடுபட்டனர். [illegible]து காப்புக் காகப் பொலிஸார் ம[illegible]ம் தேசிய பாதுகாப்பு படையினர் [illegible]த் தப்பட்டிருந்தனர். அப்போது, [illegible]ட டக்காரர்களின் பகுதியில் இ[illegible]ந்து பாது காப்புப் படையினரை [illegible]கி வெடிகுண்டு வீசப்பட்டுள்ளது. [illegible]டு வெடிப்பின் போது போராட்[illegible]ல் ஈடுபட்டிருந்தவர்கள், பொலி[illegible]ர் பத்திரிகையாளர்கள் எனப் [illegible]ர் படுகாயமடைந்தனர். இதைய[illegible]டு இரு தரப்பினருக்குமிடையே [illegible]ல் ஏற்பட்டது. [illegible])

# கணவரின் மீசை பிடிக்காததால் நீதிமன்றம் சென்றார் மனைவி



அல்ஜீயர்ஸ்,செப்.2
கணவரின் மீசை பிடிக் காததால் அவரிடமிருந்து விவாகரத்துப் பெற் றுத்தரும் படி தென் னாப்பிரிக்க நாடு களில் ஒன்றான அல்ஜீரியாவைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ள சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.
கடந்த மூன்று மாதங்களுக்கு முன் னர் திருமணமான அந்த இளம் பெண், இது தொடர்பாக தலைநகர் அல்ஜீயர்ஸ் நகரில் உள்ள நீதி மன்றில் நீதிவான் முன்னிலையில் வாக்குமூலம் அளித்துள்ளார். திரு மணத்துக்குப் பின்னர் மீசையை எடுத்து விடுவதாக அவர் அளித்த வாக் குறுதியை நம்பியே அவரைக் கணவராக ஏற்றுக் கொண் டேன். ஆனால், மூன்று மாதங்கள் ஆகியும் இன்னமும் அவர் மீசையை எடுக்கவில்லை. தற்போது, மீசையை இழக்க விருப்பமில்லை என்றும் அவர் கூறிவருகிறார்.
பயமுறுத்தும் அவரது மீசையைச் சகித்துக்கொண்டு என்னால் அவ ருடன் வாழவே முடியாது. எனவே, அவரிடம் இருந்து எனக்கு விவா கரத்துப் பெற்றுத் தாருங்கள் என நீதிவானிடம் அந்த இளம்பெண் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)

# ஆசிரியருக்கு பதிலடி கொடுத்த மாணவன்

ஜோர்தான்,செப்.2
ஜோர்தான் நாட்டில் பட்டம் வாங்க வந்த மாணவன் தனது ஆசிரியரின் முகத்தில் எச்சில் துப்பிய வீடியோ இணையத்தில் பரவி வருகிறது. ஜோர் தானில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டமளிப்பு விழா நடை பெற்றது, அந்த விழாவில் மாணவர் கள் அனைவரும் வரிசை யாக வந்து சிறப்பு விருந்தினரின் கையால் பட் டங்களை வாங்கிச் சென்றனர். அப்போது, மாணவர் ஒருவர் விழா மேடையில் அமர்ந் திருந்த தனது ஆசிரி யரின் முகத்தில் எச் சிலைத் துப்பியுள்ளார். விசாரணையில், அந்த ஆசிரியர் படித்து முடித்து பட்டம் வாங் கினால் எனது முகத் தில் துப்புமாறு எனக்கு கனவே தெரிவித்ததை மனதில் வைத்திருந்த அந்த மாணவன், பட்டம் வாங்கி விட்டதால் ஆசிரி யரின் முகத்தில் துப்பியுள்ளான் எனத் தெரிய வந்தது.
இருப்பினும் மாணவனின் ஒழுங் கீனமான இந்தச் செயல் கண்டிக் தக்கது எனக்கூறிய பல்கலைக்கழக நிர்வாகம், அந்த மாணவனின் இளங் கலைப் பட்டத்தை ரத்து செய்ய உயர் கல்வித்துறை அமைச்சகத் துக்கு பரிந்துரை செய்துள்ளது. தற்போது இது குறித்து உயர் கல்வித் துறை விசாரணை நடத்திவருகிறது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் காணப்போகும் நாரந்தனை கிழக்கு ஞானவைரவர்

திருவுருவங்கள் இறைவனைநினைவு கூர்ந்து மனதால் கிரகிப்பதற்குத்துணை நிற்பதோடு அமையாது இறைவனின் பெருமைகளை அறிவதற்கும் கருவிகளாய் அமைகின்றன. இதன் பின்னணியில் இந்து சமயத்திலுள்ள தெய்வ வடிவங்களின் பெருமையும் உண்மையும் உணரப்படுகிறது. காத்தல் கடவுளாகிய விஷ்ணு காலத்தின் தேவைக்கேற்ப பல அவதாரங்களை எடுத்தருளியுள்ளார். படைத்தல் கடவுளாகிய பிரமனை தெய்வமாகப் போற்றாத காரணத்தினால் அவருக்கு எவ்வித அவதாரமும் கிடையாது. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப ஆன்மாக்களைக் காத்தருளும் பொருட்டு அவரது அம்சமாக வைரவரும், வீரபத்திரக் கடவுளும் விளங்குகின்றனர். வைரவக் கடவுளை பைரவர் என்று அழைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

சிவனின் அம்சமாக விளங்கும் வைரவப் பெருமானுக்கு ஈழத்தின் பல பாகங்களிலும் ஆலயங்கள் காணப்படுகின்றன. ஞானத்தின் வடிவமான வைரவப் பெருமானை ஞான வைரவர் என்ற திருநாமத்தோடு எழுந்தருளியுள்ள ஆலயமாக நாரந்தனை கிழக்கு ஞான வைரவர் ஆலயம் காணப்படுகிறது. யாழ். குடாநாட்டின் வடபாலமைந்த சப்த தீவுகளுள் லைடன் தீவு மிகவும் பரந்தது. வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு வளமையும் செழுமையும் கொண்ட பிரதேசமாக விளங்கியலைடன்தீவிவுக்குவடபால், ஊர்காவற்றுறை அமைந்துள்ளது. ஊர்காவற்றுறையில் கிழக்குப் பக்கத்தில் நாரந்தனை எனும் அழகிய கிராமம் அமைந்துள்ளது.

நாரந்தனை என்னும் பெயருக்கான காரணம் ஈழ வரலாற்றோடு தொடர்புடையது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் யாழ்ப்பாண அரசு பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அதில் ஒரு பகுதி தீவுகள் அனைத்தையும் உள்ளடக்கிக் காணப்பட்டிருந்தது. ஊர்காவற்றுறையில் நாற்படையும் வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஊர்ப்புறக் காவற்படைத் தளபதியாக நாராயணன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். நாராயணன் தானையும் அவரது ஆட்சியும் நிலைபெற்றிருந்த இடமே நாரந்தனை என வழங்கி வருகின்றதென ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். நாரந்தனை வரலாற்றுப் பழைமை மிக்க இடமென்பதை தொல்லியற் சான்றுகள் பல நிரூபித்துள்ளன. இந்தத் தொல்லியற் சான்றுகள் மூலம் இந்தப் பகுதியில் சோழர் ஆட்சியும் சோழர்களின் வணிக நடவடிக்கையும் நிலைபெற்றிருந்தன என்பதை அறியமுடிகின்றது.

இத்தகைய வரலாற்றுப் புகழ் மிக்க நாரந்தனை கிராமத்திலே வாழ்ந்த பெருங்குடி மக்கள் நில புலன்களோடு வசதியாக வாழ்ந்தனர். அத்தோடு தமது சந்ததியினரும் கல்விச் செல்வத்தைப் பெற பலவழிகளிலும் முயற்சி செய்துள்ளனர். போக்குவரத்து வசதியற்ற காலத் திலும் கால்நடையாகச் சென்று கல்வி கற்று பேரும் புகழுடனும் வாழ்ந்த பலர் நாரந்தனைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய பெருமக்களுள் ஒருவராகத் காசிநாதர் நாக லிங்கம் என்பவர் விளங்கியுள்ளார். பண வசதியும் நிறைந்த நில புலன் களும் கொண்ட இப்பெரியார் தொலை நோக்குப் பார்வையுடன் செயற்பட்டுள்ளார். இவர் தனது புதல்வர்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கிய தோடமையாது திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கமைய சிங்கப் பூர்ச் சீமைக்கும் அனுப்பி வைத்தார்.

காசிநாதர் நாகலிங்கம் என்ற பெரியாரது எண்ணத்தின் பிர காரம் உருவாகிய கோயிலே நாரந் தனை கிழக்கு ஞானவைரவர் கோயி லாக விளங்குகின்றது. இந்தக் கோயில் காசிநாதர் நாகலிங்கம் அவர்களுடைய சொந்தக் காணியில் 19 ஆம்நூற்றாண்டின் பிற் பகுதியில் சிறு குடிசைக் கோயிலாக அமைக்கப்பட்டது. வைரவப் பெருமானின் அடையாளச் சின்னமான இரும்பிலாலான சூலத்தை இந்தக் குடிசைக் கோயிலில் நிறுவி தமது குலதெய்வமாக வைரவரை வழி பட்டு வந்துள்ளார்.

இந்தப் பெரியார் தனது தலைமுடியை நீக்கி மொட்டையடித்து உருத்திராட்சம் அணிந்து நெற்றியிலே விபூதி தரித்து காதிலே கடுக்கண் பூட்டி தெய்வாம்சம் பொருந்தியவராக விளங்கியுள்ளார். இந்தக் கோயில் அமைந்துள்ள வளவிலே அக்காலத்தில் ஆலமரமொன்று காணப்பட்டது. நாரந்தனை கிழக்கு ஞானவைரவப் பெருமானின் அற்புதங்களிலொன்றான ஒருசம்பவம் இந்த ஆலமரத்தோடு தொடர்புபட்டு செவி வழிக்கதையாகக் காணப்படுகிறது.

கோயில் வளவிலே காணப்பட்ட ஆலமரத்தின் கீழ் வழிப்போக்கர் ஒருவர் இரவு தங்கி இருந்தார். அவர் தங்கிய வேளையில் கோயிலைச் சுற்றியுள்ள பகுதியை ஏதோ ஒரு விதத்தில் அசுத்தப்படுத்தியதாகவும் பின் அவர் வீடு சென்று வேளையில் கட்டு ஏற்பட்டு சிரமப்பட்டுள்ளார். தனது தவறை உணர்ந்த வழிப்போக்கர் ஞானவைரவர் எழுந்தருளியிருந்த சுற்றாடலை அசுத்தப் படுத்தியதன் விளைவு இதென உணர்ந்து மனம் வருந்தி பொங்கல் வைத்து முறைப்படி பரிகாரம் செய்து நன்மை பெற்றதாகச் செவி வழிக் கதை நிலவுகின்றது.

ஓலைக்குடிசையாகக் காணப்பட்ட ஞானவைரவர் கோயில், இந்தக் கோயிலை ஆரம்பித்த காசிநாதர் நாகலிங்கம் பரம்பரையினரால் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளதை அவதானிக்க முடியும். குடிசைக் கோயிலாக இருந்த இந்தக் கோயில் சுண்ணாம்புக் கட்டடமாக மாறி பின்னர் கற்கோயிலாக மாற் றம் பெற்றது. இதன் பின்னர் இந்தக் கோயிலில் நித்திய பூசைகள் தவறாமல் இடம்பெற்றன. இந்த ஊர் மக்கள் மட்டுமன்றி அயல் கிராமங்களில் உள்ளவர்களும் ஞான வைரவப் பெருமானை பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வந்தனர்.

இந்த ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில் மிகக் கிட்டிய தூரத்தில் நாரந்தனை சரவணைக் கர்ணந் தோட்டத்து சிவசுப்பிரமணிய கோயில் அமைந்திருப்பதும் ஞானவைரவ கோயிலின் வளத்தையும் செல் வாக்கையும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

காலம் காலமாக சிவசுப்பிரமணிய கோயிலின் பூசகர் தான் ஞான வைரவர் கோயிலிலும் பூசை செய்வது மரபாக இருந்து வந்துள்ளது.

இந்த ஆலயத்தில் வருடாவருடம் சித்திரைக் கஞ்சியும் ஆனிப் பொங்கலும் பக்தி சிரத்தையுடன் இடம் பெறும். அத்தோடு நாரந்தனை வடக்கிலே அமைந்துள்ள தான்தோன்றி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின்போது வேட்டைத் திருவிழாவன்று நாரந்தனைகிழக்கு ஞானவைரவர் ஆலயத்துக்கும் எழுந்தருளுவார். இந்தத் தினத்திலே பல்வேறு கிராமங்களில் இருந்து பக்தர்கள் பெருவாரியாக வந்து ஒருசேர அன்னையையும் வைரவப் பெருமானையும் தரிசித்துச் செல்வர். ஞானவைரவர் ஆலயத்தின் விழாக்களின் போது இந்த ஆலயத்தின் ஸ்தாபகரின் பரம்பரையினரும் புலம்பெயர்ந்து வாழும் இந்த ஊர் மக்களும் நாரந்தனை சென்று தாம் காலம் காலமாக வணங்கி வழிபாடியற்றிய தோடமையாது தமக்கு வாழ்வளித்த ஞான வைரவுப் பெருமானை வழிபாடியற்றி மகிழ்வர்.

இவ்வாறு சகல வழிகளிலும் வளர்ச்சியடைந்து பேரும் புகழும் அருளும் ஓங்கிய காலத்தில் உள்நாட்டு போரின் காரணமாக ஈழத்திலுள்ள சைவக் கோயில்களுக்கு ஏற்பட்ட அழிவுநிலை இந்தக் கோயிலுக்கும் ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டு சித்திரைத்திங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர நேரிட்டது. இந்தக் காரணத்தினால் வைரவப் பெருமானின் நித்திய பூசைகளிலும் பராமரிப்பிலும் பின்னடைவு ஏற்பட்டது. ஆயினும் வைரவப் பெருமானின் திருவருள் காரணமாக ஒரு சிலர் அயலிலே தங்கி இடம் பெயராது வாழ்ந்தனர். இந்த ஆலயத்தை ஸ்தாபித்தவரின் பேரனாகிய இராமலிங்கம் துரைசாமி என்பவரும் அவரது உறவினர்கள் ஒரு சிலரும் தாங்கவொண்ணா துன்பங்களை அனுபவித்த போதிலும் நாரந்தனையிலே தங்கியிருந்தனர். இவர் களது உதவியால் இந்த ஆலயம் பராமரிக்கப்பட்டது. ஆயினும் இந்தக் காலத்தில் ஏற்பட்ட இராணுவ நட வடிக்கையின்போது ஞான வைரவர் கோயில் சேதமாக்கப்பட்டதோடுபராமரிக்கவும்ஆளின்றிக் காணப்பட்டது.

ஆயினும் இந்த ஆலயத்தின் ஸ்தாபகரின் பரம்பரையினரது முயற்சியால் 2003 ஆம் ஆண்டு இந்தக் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு அதே ஆண்டு ஐப்பசி மாதம் புனர்பூச நட்சத்திரத்திலே இந்த ஆலய மகாகும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. இதன் பின்னர் காலத்துக்குக் காலம் பல்வேறு புனருத்தாரண வேலைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இடைப்பட்ட காலத்தில் இந்து சமய கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட ஒரு சிறு தொகைப்பண உதவியுடன் திறந்த வெளியாக இருந்த கோயிலுக்கு இரு பக்கமும் மதில்சுவர் கட்டப்பட்டுள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப மின்சார வசதி மற்றும் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டு கோயிலுக்குத் தேவையான பூமரங்களும் ஏனைய மரங்களும் நடப்பட்டு கோயில் அழகு படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தைப் பராமரித்து வருகின்றவர்களின்முயற்சியாலும்கோயிலின் அயலில் உள்ள கோயிலின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவர்களது முயற்சியாலும் பல்வேறு புனருத்தாரணப் பணிகள் இடம் பெற்று இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரமும் ஸப்தமி திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# பாரம்பரிய நம்பிக்கையை வென்ற ரத்மல் பேபி சவர்க்காரம் அறிமுகம்

உங்கள் மழலையை கிருமிகளிடமிருந்து முற்றாகப் பாதுகாக்கும் ரத்மல் பேபி சவர்க்காரம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரியமாகவே குழந்தைகளை குளிப்பாட்டும்போது கிருமிகளை முற்றாக அழிப்பதற்கு தண்ணீருடன் செவ்வரத்தம் பூச்சாறு கலக்கப்பட்டதுடன் சிறார்களை அந்த தண்ணீரில் குளிப்பாட்டுவதை தாய்மார்கள் வழக்கமாக கொண்டிருந்தனர். கிருமிகளை அழிக்கும் ஆற்றலை செவ்வரத்தம் பூகொண்டிருப்பதாக எமது முன்னோர்கள் அறிந்திருந்தமையே அதற்கு காரணமாகும்.

அந்த பாரம்பரிய அறிவை புதிய தொழில்நுட்பத்துடன் கலந்து ரத்மல் பேபி சவர்க்கார உற்பத்திகளை தயாரித்து விநியோகிப்பது, மருத்துவதாவரங்கள் தொடர்பாக நீண்ட காலமாகவே ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்ற 'நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் – பென்டா பேபி' உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறு வனமாகும்.




இலங்கையில் முதலாவது தனியார் தாவர ஆய்வுகூடத்தை அமைத்த நிறுவனமாக விளங்குகின்ற நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம், பாரம்பரியமாகவே முன்னெடுக்கப்படுகின்ற மருத்துவ சேர்க்கைகளை புதிய தொழில்நுட்பத்துடன் கலந்து இந்த தயாரிப்புக்களை மேற்கொள்கின்றது.

அதன் ஒருகட்டமாக சிறுவர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கிருமிகளை அழிப்பதற்கான செவ்வரத்தம் பூ பேபி சவர்க்காரத்தை தயாரித்துள்ளது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் கலா நிதி நிமல் புண்யசிறி, நீண்ட கால மாகவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் செவ்வரத்தம் பூவில் காணப்படும் கிருமிகளை அழிக் கும் தன்மை யானது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார். அத்துடன் செவ்வரத்தம் பூ பேபி சவர்க்காரத்துக்கு சந்தையில் அதிக கேள்வி நிலவுவதாக தெரிவித்த நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத் தின் விற்பனை ஆலோசகர் பிரியந்த பெரேரா, மிருக எண்ணெய் அடங் காத செவ்வரத்தம் பூ பேபி சவர்க்காரம் இலங் கையில் அறி முகமாகும் முத லாவது செவ்வரத்தம், பூச்சாறு அடங்கிய சவர்க்காரம் என குறிப்பிட்டதுடன் செவ்வரத்தம் பூ பேபி கிறீம் உற்பத்திகள் வெகு விரைவில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும் எனக் கூறினார்.

(த)

## விகாரமகாதேவி பூங்காவில் வைபை

கொழும்பு, விகாரமகாதேவி பூங்காவில் வைபை வலயத்தை எற்படுத்துவதற்கு கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு மாநகரசபையின் மேயர் எம்.எப்.எம்.முஸம்மில் தலைமையில், இந்த வைபை வலயம், நாளை வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

குறித்த வைபை வலயத்தை ஸ்ரீ லங்கா டெலிகொமின் உதவியுடன் விரிவுபடுத்தி அதன் பின்னர் மக்கள் பாவனைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே கோட்டை ரயில் நிலையம், கோட்டை பொது மற்றும் தனியார் பஸ் நிலையம், மிதக்கும் சந்தை, கொழும்பு சட்டக்கல்லூரி, கொழும்பு பொதுநூலகம், தெஹிவளை மிருகக்காட்சிசாலை, கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் கொழும்பு பொலிஸ் தலைமையகம், காலி முகத்திடல், பத்தரமுல்லை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் கொழும்பு நூதனசாலை ஆகியவற்றில் வைபை வலயம் உரு வாக்கப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் 26 வைபை வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் கோணாவளை வீதியின் அவலம் எவரது கண்களுக்கும் தெரியவில்லையா?

மாதகல் கிழக்கு கோணாவளை வீதியின் ஒருபகுதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்துகின்ற மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாதகல் பிரதான வீதியிலுள்ள வேலுப்பிள்ளை கடையடியில் இருந்து ஆரம்பமாகும் இந்த வீதி கீரிமலை பிரதான வீதியைச் சென்றடைகின்றது. சுமார் முக்கால் கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியின் ஒரு பகுதி ஏற்கனவே புனரமைக்கப்பட்டு விட்டது. ஆனால் கீரிமலை வீதியிலிருந்து சுமார் 200 மீற்றர் நீளமான மேற்படி வீதியின் ஒரு பகுதி புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

மழைக் காலங்களில் வீதியின் புனரமைக்கப்படாத பகுதியூடாகவே வெள்ள நீர் பாய்ந்து செல்வது வழக்கமாகையால் வீதி சேறும், சகதியுமாகக் காணப்படுவதால் மக்கள் இதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் போர் காரணமாக இடம் பெயர்ந்து சென்ற மக்கள் கீரிமலை வீதியை ஒட்டிய பிரதேசத்தில் பெருமளவு குடியமர்ந்துள்ளதால் இந்த வீதியே அவர்களின் பாவனைக்குரிய பிரதான வீதியாக மாறியுள்ளது. இந்த நிலையில் வீதியின் ஒருபகுதி புனரமைக்கப்படாது மோசமான நிலையில் காணப்படுவதால் மக்கள் அன்றாடம் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் மக்களுக்குப் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கிச் செல்கின்ற அரசியல் வாதிகளின் கண்களில் இந்த வீதியின் புனரமைக்கப்படாத பகுதி தெரியாமல் இருப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஆனால் அவர்கள் இதில் எவ்வித அக்கறையும் எடுக்காமல் இருப்பது தான் இந்தப்பகுதி மக்களுக்கு கடும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் பதவியில் இருந்த பிரதேச சபையினராவது இந்த வீதியைப் புனரமைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்களும் அக்கறை காட்டவில்லை. நாடாளுமன்றத் தேர்தலும் முடிந்து விட்டது. ஏற்கனவே மாகாணசபைத் தேர்தலிலும் மக்கள் வாக்களித்து பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து விட்டார்கள். இனிமேல் எதிர்வரும் நவம்பர் மாதம் உள்ளூராட்சிச் சபைகளுக்குரிய தேர்தல்களும் இடம்பெறவுள்ளன.

தேர்தல் காலங்களில் மட்டுமே மக்களைத் தேடி வருகின்ற அரசியல் வாதிகள் அந்த மக்களின் தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதுதான் நியாயமாகும்.

மாரிகாலம் ஆரம்பித்து கோணாவளை வீதியால் பயணிக்கும் மக்கள் துயரங்களை எதிர்கொள்ளும் முன்னர் இந்த வீதியின் புனரமைக்கப்படாத பகுதி புனரமைக்கப்பட வேண்டுமென்பதே இந்தப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

***பா.பரமேஸ்வரன்,*** மாதகல்.

# ம(ா)னப் பதிவுகள்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. இனிமை, எளிமை, நீர்மை, தொன்மை, தாய்மை, தூய்மை, திருமை, இயற்மை, தனிமை போன்ற பதினாறு பண்புகளைக் கொண்டது தமிழ் மொழி. தமிழின் சிறப்பை உணர்த்த பேராசிரியர் ஜோர்ஜ் அவன்கார்ட் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையையே ஆரம்பித்தார். இத்தகைய அருமை பெருமைகளைக் கொண்ட தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியமானது இன்று சீர்குலைந்து சிறுமைப்படுவதைக் காண மனம் துடிக்கிறது.

21ஆம் நூற்றாண்டு நவீன யுகத்தில் தொழில் நுட்பவளர்ச்சி காரணமாக புதுமைகள் பல படைத்து பெருமைப்படுகின்றோம். ஆனால் ஒரு பண்பாட்டை, ஏனைய இனங்களால் போற்றப்பட்ட தமிழ் பாரம்பரிய கலாசாரங்களைத் தூக்கி எறிந்துவிட்டு புதுப்புது அநாகரிக கலாசாரங்களை உருவாக்குவது நியாயமா?

முக்கியமாக ஆரம்ப காலங்களில் திருமணம், பூப்புனித நீராட்டு ஆகிய சடங்குகளில் எல்லாம் மங்கலகரமான பண்பாட்டு உடையணிந்த தோழியர் புடைசூழ மணப்பெண் அழைத்து வரப்பட்டாள். ஆனால் அண்மைக் காலங்களில் அந்தப் பண்பாடு தொலைந்து வருகிறது. தமிழ்ப் பண்பாட்டில் நடத்தப்படும் இந்தச் சடங்குகளில் மணப்பெண்களை முகத்தை மூடி முக்காடிட்ட நிலையிலும், அழைத்து வரும் தோழியரோ அரைகுறை உடையுடனும் நடனமாடியபடியும் வருகின்றனர்.

பெற்றோரே முழுவதும் மறைத்த கோலத்தில் பெண்ணை அழைத்துவர, அரைகுறை உடையணிந்த




மாற்றார் பெண்கள் மணமகளை அழைத்து பயன்படுத்துவது நியாயமானதா? பழைமையும், பதுமையும் கலக்கிறதா? மண்டபம் நிறைந்த சனத்திரளுக்கு மத்தியில் தாய்க்குலம் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு தமிழ்க் கலாசாரம் நிலைகெட்டு வருகிறது. இதற்குப் பதிலாக பரத ஆற்றுகைகளை நடத்தினால் நன்றாக இருப்பதோடு கலைகளை வளர்க்கும் வாய்ப்பாகவும் அமையும்.

தமிழ்ப் பெரியோர்களே! சமயப் பெரியோர்களே! அறப்பெரியோர்களே! தங்களுக்கே இது சமர்ப்பணம்!

***– திருமதி பஞ்சலிங்கம்.***

## கேலிச் சித்திரம்




*நன்றி: லங்காதீப*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி மீதான நம்பிக்கை நிலைநிறுத்தப்படுவது அவசியம்

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தையடுத்து ஜனாதிபதி ஊடகப்பிரிவிலிருந்து விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையில், மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டாவது தடவையாகவும் போட்டியிடவேண்டும் எனக் கிண்ணியா மக்கள் வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. கிண்ணியாவுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை விடுத்திருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில், அகதிகளாக வாழும் மக்களுக்கு மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வதற்கான நில உரிமைச் சான்றிதழ்களை வழங்கியமை, புதிய அமைச்சரவை நியமன இழுபறி போன்றவற்றின் மீது ஊடகங்களின் கவனம் பெரிதாகக் குவிந்திருந்த காரணத்தால் ஜனாதிபதியை மீண்டும் போட்டியிடுமாறு மக்கள் கோரிக்கைவிடுப்பதாக வெளியான செய்தி தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையின் அரசியல்சாசனப்படி - குறிப்பாக, கடந்த ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தத்திற்கு அமைவாக ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகள் போட்டியிடுவதற்கு உரிமையுள்ளது. அதனை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், ஜனவரி 9ஆம் திகதியன்று பதவி யேற்ற பின்னர் கண்டிக்கு மேற்கொண்ட முதலாவது பயணத்தின்போது ஜனாதிபதி தாம் இரண்டாவது தடவையாகப் போட்டியிடப்போவதில்லை எனப் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஏற்கனவே எளிமைக்கும் - தாழ்மைக்கும் இலக்கணமாகப் பார்க்கப்பட்ட ஜனாதிபதி சிறிசேனவின் இந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் ஜனாதிபதி சிறிசேன மீது முன்னெப்போதுமில்லாத மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை வரையறைக்கு உட்படுத்தும் சரத்து உட்பட அதிகாரங்களைக் குறைக்கும் சரத்துகளைத் தாங்கிய 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னின்று செயற்பட்டமை ஜனாதிபதிக்கு மேலும் கௌரவத்தைக் கொணர்ந்தது.

இந்நிலையில், இரண்டாவது தடவையாகப் போட்டியிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்தனர் என்ற செய்தியை முன்னிலைப்படுத்துவது எந்த நோக்கத்தை அடைவதற்காக என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களை வென்றபோதும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்குப் போதுமான ஆசனங்களை அது பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில், தேர்தல் பிரசாரக் காலத்தில் கூறியதுபோன்றே தேசிய அரசை நிறுவுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திட்டிருந்தன. ஆனால், அமைச்சரவையில் எந்தக் கட்சிக்கு எத்தனை அமைச்சுகளை ஒதுக்குவது, முக்கிய அமைச்சுகளைத் தமக்குப் பெற்றுக்கொள்வது ஆகிய விடயங்களில் காணப்பட்ட இழுபறி காரணமாக அமைச்சரவை நியமனம் தாமதமாகித் தள்ளிப்போயிருக்கின்றது.

இதற்கிடையில், கருத்து வெளியிட்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைத்திராத நிலையில் அரசை அமைப்பதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி தலையிடுவது தகும் எனக் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி சிறிசேன தேசிய அரசுக்கு உதவுவதான போர்வையில் தனது ஆதரவாளர்களை அமைச்சர்களாக்கி அதிகாரத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். நாட்டின் தலைவரென்ற வகையில் மக்களுக்கு மேலும் சுமைகளைக் கொடுக்காமல் இவ்வாண்டின் தொடக்கத்தில் மக்களுக்கு வழங்கிய நல்லாட்சி குறித்த நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்துவது முக்கியமாகும்.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் வாய்ச் சம்பிரதாயம் வாக்காளரிடம் பலிக்காதே....

இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்றுக்காலை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமாகியது. அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடக்கி வைத்தார். சபை முதல்வராக ஐக்கிய தேசியக் கட்சியின் லக்ஷ்மன் கிரியெல்லவும், அரச கொறடாவாக அதே கட்சியைச் சேர்ந்த கயந்த கருணாதிலகவும் பதவி ஏற்றனர்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகராக கருஜெயசூரிய நியமிக்கப்பட்டார். பிரதிச் சபாநாயகராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திலங்க சுமதிபால பதவி ஏற்றார்.

குழுக்களின் பிரதித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

8ஆவது நாடாளுமன்றின் கன்னி அமர்வில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகரை வாழ்த்திப் பேசுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்--

கடந்த சில வருடங்களாக நாடாளுமன்றத்தின் பெருமை இல்லாமற் செய்யப்பட்டிருந்தது. புதிய சபாநாயகருடன் முழுமையாக ஒத்துழைக்கத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும்--

புதிய நாடாளுமன்றம் தனது அமர்வின் போது பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. ஜனநாயகம், பன்மைத்துவம், சமத்துவம், சமவாய்ப்பு மற்றும் நீதியை மீள நிலைநாட்ட வகை செய்யும் புதிய யாப்பு இயற்றப்பட வேண்டும். இது அடிப்படைத் தேவையாகும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசியற் சூழமைவில், எதிர்த் தரப்புக்கு உள்ளேயே ஒரு எதிர்க்கட்சி உருவாகலாம் என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார 8ஆவது நாடாளுமன்ற முதல் அமர்வில் கருத்துத் தெரிவித்து இருப்பதும் சுட்டிக்காட்டக்கூடிய ஒன்றாகும். அதேவேளை, தமது சகாக்கள் தேசிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு உடன்பாடாக இல்லை என்றும் வாசுதேவ நாணயக்கார தகவல் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமர திஸாநாயக்க, --பொதுமக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்தோடு, பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இலக்கை அடைய புதிய நாடாளுமன்றம் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஓகஸ்ட் பதினேழில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு 2 வாரங்கள் பூர்த்தி அடைந்த போதிலும்--

அமையப்போகும் நாடாளுமன்றில் அமைச்சுக்கள் குறித்தும் அவற்றின் பொறுப்புக்களை வகிக்கப் போகின்றவர்கள் எவரெவர் என்பது குறித்தும் பூடகமாகவேனும் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. யாவும் மூடுமந்திரமாகவே புதைந்துள்ளன!

அதே வகை சார்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்குக் கிடைக்கப்போகின்றது என்பதை அறியமுடியாத குழப்பகரமான நிலைமை நீண்டு விரிகிறது. அதனால் வாக்காளர்கள் சப்புக் கொட்டுகின்றனர்!


பார்த்தீர்களா? மக்கள் சேவைக்கென வாக்குக் கேட்ட வேட்பாளர்கள், பதவிகளுக்காகப் போட்டி போட்டுக்கொண்டு ஆலாய்ப் பறப்பதும்--

அதனைத் தீர்க்க முடியாது அரச தலைவர்கள் அல்லாடுவதும் தெள்ளெனத் தெரிகின்றது.

இந்த நிலையில், சம்பந்தன், வாசுதேவ நாணயக்கார, அநுரகுமர திஸாநாயக்க ஆகியோர் புதிய அரசு பயணிக்க வேண்டிய போக்கைத் தொட்டுக் காட்டியுள்ளனர்.

ஒன்றை மட்டும் அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பெரும் எதிர்பார்ப்புடன், தங்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பிய வாக்காளப் பெருமக்கள் ஏமாளிகள் அல்லர்!

வெறும் வாய்ச் சம்பிரதாயம் அவர்களிடம் பலிக்காது என்பதை உங்கள் நெஞ்சங்களில் ஊன்றிப் பதித்துக் கொள்ளுங்கள்....



# காணாமற்போகச் செய்யப்படுதலுக்கு எதிராக மன்னாரில் எழுந்த குரல்கள்

● கஜகுகன்

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் காணாமற் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள டிலாசாங்கிட்ஸ் கெம்பஸ் பாடசாலையில் காணாமற் போகச் செய்யப்படுவதற்கு எதிரான சர்வதேச தினம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் இடம் பெற்றது.

காலை வேளையில் ஆரம்பமான நிகழ்வுக்கு வடக்கு, கிழக்கு உள்ளடங்கிய எட்டு மாவட்டங்களில் இருந்து கணவர்மாரை இழந்த மனைவியரும் பிள்ளைகளை இழந்த பெற்றோரும், சகோதரர்களை இழந்த உடன் பிறப்புக்களும் என பெருந் தொகையானோர் வருகை தந்திருந்தனர்.

இரண்டு நிமிட அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. அகவணக்கத்தை தொடர்ந்து ஒரு பாடல் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இந்தப் பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அந்த கட்டடத்தில் கூடியிருந்த மக்களின் கண்களில் இருந்து கண்ணீர் மல்கியது.

தொடர்ந்து சுடரேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. முதலில் சிவில் சமூகப் பேச்சாளரும் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான அருட்பணி எழில் இராஜேந்திரன் சுடரை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர் அருட்பணி இமானுவேல் செபமாலை, மாகாண சபை உறுப்பினர் சிராய்வா, அருட்பணி தமிழ்நேசன் அடிகளார், இந்து சமய குரு ஸ்ரீ பாஸ்கரன் ஐயா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து தீபச்சுடர் ஏற்றும் வைபவம் நடைபெற்றது. காணாமற் போகச் செய்யப்படுவதற்கு எதிரான சங்கங்களில் இருந்து வருகை தந்த மாவட்ட உறுப்பினர்கள் தீபச் சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வழிபாடுகள் இடம் பெற்றன. இந்துசமய வழிபாட்டை இந்து சமயக்குரு ஸ்ரீபாஸ்கரன் ஐயாவும், கிறிஸ்தவ மத வழிபாட்டை தமிழ்நேசன் அடிகளாரும் நடத்தி வைத்தனர்.

வரவேற்புரையை மார்ட்டீன் டயஸ் நிகழ்த்தினார். தலைமை உரையை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி இம்மானுவேல் செபமாலை நிகழ்த்தினார். அவர் அங்கு உரையாற்றுகையில்,

> காணாமற் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியம் என வற்புறுத்தியதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியப்படுத்தும் மனுவைக் கையளித்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றும், இவர்களிடம் வழங்கும் வாக்கு மூலங்கள் பிரயோசனம் அற்ற தெனவும், உள்நாட்டு விசாரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு வழங்கி வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

காணாமல் போகச் செய்யப்பட்டோரின் சங்கத்தின் மாகாணத் தலைவி திருமதி உதயச்சந்திரா தனது உரையில், நாங்கள் இன்று கைவிடப்பட்டவர்களாக மாற்றப்பட் டுள்ளோம் என்றும், எங்கள் கண்களில் இருந்து வெளிவருவதற்கு இனி கண்ணீர் இல்லை எனவும், அனைத்தும் வற்றிவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கும் வாய்ப்பு ஒன்று கிடைத்ததாகவும் காணாமற் செய்யப்பட்டோரின் தொடர்பில் தான் கதைத்த போது ரணில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்பதற்கு வரவில்லை எனவும் வாக்குகளைப் பெறுவதற்குத்தான் வருகை தந்ததாகவும் கூறினார். 33 வருடங்களின் பின் விடுதலையாகி வந்துள்ள 73 வயதுடைய முதியவர் ஒருவரைத் தான் சந்தித்ததாகவும் அவர் முன்னைய சம்பவங்கள் குறித்து தனக்கு ஞாபகம் இல்லையெனக் கூறியதுடன், எனது பிள்ளையின் படத்தை காட்டியபோது அவர்கள் நல்லா இருக்கிறார்கள். உன்னிடம் வருவார்கள் எனக்கூறி அழத் தொடங்கினார்.

அரங்கில் கூடியிருந்தவர்கள் தங்களின் பிள்ளைகளின் படங்களைக் கையில் பிடித்தவாறு அழ ஆரம்பித்தார்கள். இதன் காரணமாக நிகழ்வு தாமதம் அடைந்தது. பின்னர் ஏற்பாட்டாளர்கள் ஒருவாறு மக்களுக்கு ஆறுதல் கூறி மீண்டும் நிகழ்வை ஆரம்பித்தனர்.

ஏற்கனவே ஒலிபரப்பாகிய பாடலை ஒலிபரப்புவதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போது அவர்கள் தலையசைக்க "அப்பாவை கூட்டி வாங்க யேசப்பா" என்ற பாடல் ஒலிபரப்பப்பட்டது. பாடல் இடம்பெற்ற நேரத்தில் மக்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிவில் சமூகப் பேச்சாளரும், ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான எழில் ராஜேந்திரன் தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க ஆதரவு வழங்குவார்கள் எனக் கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு நடக்குமா என்பது கேள்விக்குறியே. போர்க் குற்றவாளியான முன்னாள் இராணுவத் தளபதிக்கு பீல்ட் மார்ஷல் பட்டம் வழங்கப்பட்டமை இதற்குச் சான்றாக உள்ளது. மேலும் ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு இராணுவத்தின் முக்கிய அதிகாரி பதவி வழங்கப்பட்டு அவர் காப்பாற்றப்படுகின்றார் எனவும் தெரிவித்தார்.

ஆர்ஜன்ரீனாவில் காணப்பட்டது போன்று அதாவது காணாமல் ஆக்கப்படுபவர்களை கண்டறிவதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை போன்று இங்கும் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சிறுவர்களின் கைவண்ணத்தில் உருவான சித்திரங்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து காணாமல் போகச் செய்யப்பட்டோரின் பெற்றோர்கள், உறவினர்கள் கையொப்பமிட்ட மனு ஒன்று ஜனாதிபதி மைத்திரி பால சிறி சேனவிடம் வழங்கு வதற்காக மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி இம்மானுவேல் செபமாலை அவர்களிடம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனை வரும் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக விசாரிக்க சர்வதேச விசாரணை வேண்டும் என வற்புறுத்தியதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியப்படுத்தும் வகையில் மனுவைக் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

# தேசிய அரசு இன்று பதவி ஏற்கும் தீர்மானம்

## நாடாளுமன்றில் ரணில் தாக்கல் செய்வார்


செப்ரெம்பர் 2 ஆம் திகதியான இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 64 ஆவது வருடாந்த மாநாடு பொலன்னறுவ கடுருவெல என்ற இடத்தில் நடைபெறவிருக்கின்றது. அதனால் அன்றைய தினம் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறமாட்டாது. அந்தக் கட்சியின் சகல உறுப்பினர்களும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர். நாளை செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிறந்ததினம். அன்று அவருக்கு 64 வயதாகிறார்.

வியாழக்கிழமையன்று தேசிய அரசு அமைக்கப்படுவதற்கான தீர்மானத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முன்மொழிவார். 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் இது நடைபெறவிருக்கின்றது. அதே சமயம் அமைச்சுகளின் பணிகளில் உதவி புரிவதற்கான குழுக்களை நியமிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் பிரதமர் முன்மொழிவார் என்று தெரிகின்றது. இப்பொழுது நடைமுறையிலுள்ள ஆலோசனைக் குழுக்களைப்போலன்றி இந்தப் புதிய குழுக்கள் அமைச்சுக்கள் வினைத்திறனுடன் பணி புரிவதில் உதவி புரிவனவாக இருக்கும். அதேசமயம் இந்தக் குழுக்கள் அமைச்சுக்களின் செயற்பாடுகளை மிகக் கவனமாக அவதானித்து குறைபாடுகள் இருப்பின் அவைகள் பற்றி அறிவிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கும்.

இந்த வகையில் அமைச்சர்களின் பணிகள் மீது நாடாளுமன்றத்தின் கட்டுப்பாடு இருப்பதை உறுதி செய்வதுடன் மக்கள் பிரதிநிதிகள் சபை நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதையும் உறுதி செய்ய பிரதமர் ரணில் விரும்புகிறார்.

இந்தத் தீர்மானத்தின் தன்மையைக்கருத்தில் கொண்டு அது சபையின் அங்கீகாரத்துக்கு விடப்படுவதற்கு முன்னதாக அதன் மீது விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று ஜனதா விமுக்தி பெரமுன கேட்டுள்ளது. இது குறித்து அக்கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க கூறும்போது அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும்பிரதிஅமைச்சர்கள் 40பேராகவும் மட்டுமே இருக்க வேண்டும் என்று வரையறுக்கும் வகையிலான 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நாம் நிறைவேற்றினோம். ஆனால் வரியிறுப்பாளர்களின் பெரும் செலவில் பெரிய அமைச்சர் அவையொன்று இருக்க வேண்டிய அவசியம் எமக்குப் புரியவில்லை என்றார். இது மக்கள் நலனுக்காகவல்ல சுதந்திரக்கட்சி மற்றும் ஐ.தே.கவின் அரசியல் வாதிகளுக்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடு என்றார் அவர்.

தேர்தலின் பின்னர் இலங்கையில் தேசிய அரசு ஒன்று ஏற்படப்போவதாக பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் எந்தப் பிரிவுக்கு எத்தனை பதவி – எவருக்கு எந்தப் பதவி என்பவை குறித்து இரகசிய பேச்சுக்கள் திரைமறைவில் இடம்பெற்று வந்துள்ளன. அதில் முடிவுகள் எடுப்பதும் பெரும் சிக்கலாக இருந்துள்ளது. ஜனாதிபதி சிறிசேன தலைமையில் நடந்த கூட்டமொன்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தங்களுக்கு சரிநிகர் சமாந்தர பங்கு வழங்கப்பட வேண்டும். உறுதியான நிலையில் தங்கள் கட்சி இருக்கிறது என்றும் வாதிட்டிருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை விளக்கியதுடன் அவசியம் ஏற்படின் தனித்த முறையில் தங்களால் அரசமைக்கக்கூடிய நிலைமை



இருக்கிறது என்றும் வாதிட்டுள்ளார். தனது ஏமாற்றத்தை வெளியிட தவறிவிட்டாலும் தனது நிலைப்பாட்டைஅவர்கண்ணியமானமுறையில் அங்கு வெளியிட்டதாக தெரிய வந்தது. அதிக உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஐ.தே.கவால் உதவி புரிய விரும்பும் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு அரசை நிறுவ முடியும் என்று ரணில் அங்கு தெரிவித்ததாகத் தெரிகின்றது. இந்த நிலைமையில் ஐ.தே.க. அதிக உறுப்பினர்களை வென்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்தக் கட்சிக்கு முன்னுரிமை இருப்பதைக் குறிப்பிட்டு இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

> ராஜபக்ச கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கி மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் கேட்டுள்ளார். தாம் இப் போது பயன்படுத்தி வரும் விஜய ராம மாவத்தையிலுள்ள வீடு ராஜபக்சவுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.



*சுதந்திரக்கட்சி மத்திய குழு கூட்டம்*

கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் கள் சத்தியப் பிரமாண வைபவத்துக்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டமொன்று சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் பெயரை அவர் வெளியிடுவார் என்று பலரும் எதிர்பார்த்திருந்த போதிலும் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் தேசிய அரசு ஒன்று நிறுவப்படும்போது உறுப்பினர்கள் அதற்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்த அவர் தவறவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் யாராய் இருக்க வேண்டுமென்பது குறித்து நீண்ட விவாதம் இடம்பெற்றது. எதிர்க்கட்சிக் கொறடா தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. கட்சியின் தலைவர் இது குறித்து முடிவெடுத்து அதனை மத்திய குழு அங்கீகரிக்க வேண்டும் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தற்காலிக பொது செயலாளர் திசாநாயக்கவும் ஆலோசனை முன்வைத்தார்கள். இவை குறித்து சுதந்திரக்கட்சித் தலைவர்கள் கூட்டாக ஒரு தீர்மானம் எடுப்பார்கள் என்று அறிவிப்பது நல்லது என்று எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

ஆனால் அறிவித்தல் தலைவர் சிறிசேனவினாலேயே விடுக்கப்பட வேண்டும் என்று சந்திரிகா வலியுறுத்தினார். அதன்படி அறிவித்தல் விடுக்கப்பட்டு எதிர்க்கட்சி கொறடாவாக தயாசிறி ஜயசேகரவின் பெயர் அறிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் செயற்படுவது தார்மீக ரீதியில் கட்சிக்கு சரியில்லை என்று மத்திய குழு உறுப்பினர்கள் பலர் கருத்து கொண்டிருந்தாலும் கட்சி ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால் அவைகளை வெளியிடுவதில் தயக்கம் காட்டினார்கள். தேசிய அரசிலும் இருந்து கொண்டு எதிர்க்கட்சியிலும் பணி புரிவதென்பது நகைப்புக்கிடமானது என்று ஓர் உறுப்பினர் தெரிவித்தார். அவர் மகிந்தவின் ஆதரவாளர்.

**மகிந்த – சிறிசேன சந்திப்பு**

கடந்த திங்கட்கிழமை சிறிசேனவும் மகிந்தவும் ஒரு குறுகிய கால சந்திப்பில் ஈடுபட்டார்கள். அந்தச் சமயம் இருவருக்கும் இடையில் சில விடயங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது. அந்தச் சமயம் தம்மீதும் தமது குடும்பத்தின் மீதும் விசாரணைகள் என்ற முறையில் இடம்பெற்றுவரும் இடையூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி சிறிசேனவிடம் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார். சிறிசேன இரண்டாவது முறையும் போட்டியிடுவதில்லையென்று அறிவித்திருப்பதால் கட்சியின் எதிர்கால நிலை என்னவாகும் என்று ராஜபக்ச கேட்டுள்ளார். போட்டியிட மாட்டேன் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஜனாதிபதி பதவியைத்தான் குறிப்பிட்டேன் என்று சிறிசேன பதிலளித்தார். ஜனாதிபதி முறை மாற்றப்படவிருப்பதால் தாம் அரசியலில் தொடர்ந்து இருப்பார் என்று குறிப்பிட்டுள்ளார். ராஜபக்ச கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கி மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்றும் கேட்டுள்ளார். தாம் இப்போது பயன்படுத்தி வரும் விஜய ராம மாவத்தையிலுள்ள வீடு ராஜபக்சவுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். அரசமைப்பு விதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வீடு மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது விதியாகும்.


இந்த நிலைமையில் ஐக்கிய மக்கள் முன்னணியின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. மகாஜன எக்சாத் பெரமுனவின் தலைவரும் ம.தே.முன்னணி பங்காளிக்கட்சிகள் ஒன்றின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன கூறுகையில்;

சுதந்திரக்கட்சி என்ன செய்யப் போகிறது என்பதில்தான் எல்லாம் தங்கியுள்ளது. இப்போதுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் முன்னணியைத் தான் அதன் 95 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதிநிதித்துவம் செய்திருக்கிறார்கள் என்றார். இந்த நிலைமை இப்படியே இருக்க ஒரு மாதகாலத்துக்குள் உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை நடத்தி முடிக்கவும் புதிய தேசிய அரசு விரும்புகிறது.

தேசிய அரசில் இணைந்து கொள்ள 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்திருப்பதாக சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் திசாநாயக்க தெரிவித்துள்ளார். இதன்படி ஏனைய 25 பேர் எதிர்த்தரப்பில் அமர்வார்கள். அவர்களின் தலைவரை ஜனாதிபதி சிறிசேன அறிவிப்பார். அவர்களைத் தவிர எதிர்க்கட்சியில் 16 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் ஜே.வி.பியிலிருந்து 6 பேரும் இருப்பர். தேசிய அரசில் பணியாற்றுவதற்கான தனது ஆள்களையும் ஜனாதிபதி தெரிவு செய்துள்ளார். புதுமாதிரியான இந்த அரசு ஜனாதிபதியின் கீழ் இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே செயற்படும். அந்தவகையில் இதன் செயற்பாடு எவ்வாறு இருக்கும் என்பது இனிமேல் தான் தெரியவரும். இரண்டு கட்சிகள் ஆட்சி அமைப்பதற்காக தேர்தலில் போட்டியிட்டு விட்டு இப்போது தேசிய நலனுக்காக தேசிய அரசொன்றை அமைக்க முன்வந்திருப்பதானது விசித்திரமாக தோன்றினாலும் அதன் பெறுபேறுகள் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் அவதானிக்கப்படும் என்பது தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் சுரக்கும் உணவுகள்



போன்று ஆலம் விழுதின் துளிர் மற்றும், விதையை அரைத்து காலையில் மட்டும் பாலில் கலந்து குடித்து வரத் தாய் பால் பெருகும். குழந்தை பெற்ற பெண்களுக்கு வெள்ளைப் பூண்டை நல்லெண்ணெயில் வதக்கி அதனுடன் கருப்பட்டியும் கலந்து சாப்பிடக் கொடுத்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். உடலில் உள்ள தேவையற்ற கழிவுகளை வெளியேற்றவும் வெள்ளைப் பூண்டு உதவுகிறது. கருப்பட்டியில் உள்ள இரும்புச்சத்து தாய்ப் பால் வழியாக குழந்தைகளுக்குப் போய்ச் சேர்கிறது. மேலும் பசும் பாலில் பூண்டு சேர்த்து அரைத்து காய்ச்சிக் குடித்தால் பால் அதிகம் சுரக்கும்.

குழந்தைகளுக்கான அனைத்து விதமான ஊட்டச்சத்துக்களும் தாய்ப்பாலில் இருந்து தான் கிடைக்கின்றன. இதனால் தான் 6 மாதங்கள் வரை குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். சத்தான உணவுகளைஉட்கொள்ளாததால் சில பெண்களுக்கு தாய்ப் பால் சுரப்பதில் பாதிப்பு ஏற்படும். தாய்ப்பால் சுரக்காத பெண்கள் வீட்டிலேயே எளிதான மருத்துவ முறைகளை மேற்கொள்ளலாம். அதிமதுரம் பொடியைச் சிறிதளவு சர்க்கரை கலந்து 2 முறை பாலுடன் குடித்து வந்தால் தாய்ப்பால் பெருகும். அருகம்புல் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் தாய்ப் பால் பெருகும். முருங்கைக்கீரையை லேசாகத் தண்ணீர் விட்டு வேக வைத்து அதைத் தாளித்துச் சாப்பிட்டால் தாய்ப் பால் அதிகரிக்கும். முருங்கை இலையும் பாசிப்பருப்பும் சேர்த்துச் சாப்பிட்டால் தாய் பால் அதிகம் சுரக்கும். அதே

## நாளை

ஆவணி-17
வியாழக்கிழமை
03.09.2015
திதி:
பஞ்சமி பி.ப. 1.36
நட்சத்திரம்: அச்சுவினி
மு.ப.9.02
சுபநேரம்:
07.35-09.05 வரை
இராகுகாலம்:
01.35-03.05 வரை

## எழுங்கள்! விழியுங்கள்!!

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரி யாமல் போகட்டும். உனது உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும். ஆனால் நீ, உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணு வளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு. மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

எழுங்கள், விழியுங்கள் என்ற அச்சமற்ற செய்தியை அறை கூவிச் சொல்வதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். இந்தப் பணியில் நீங்கள் என்னுடைய உதவியாளர்களாக இருங்கள்.

தொடர்ந்து மனதில் புனிதமான எண்ணங்களையே சிந்தியுங்கள். எவருக்காவது உங்களால் சிறு நன்மையாவது செய்ய முடியுமா என்று எண்ணி உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 550 | 650 | 600 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 350 | 400 | 500 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 700 | 600 |
| பாரை | 600 | 600 | 600 | 600 | 800 | 400 |
| சுறா | 600 | 500 | - | 650 | 600 | - |
| சீலா | 350 | 400 | 300 | 400 | 400 | 300 |
| விளை | 700 | 450 | 500 | 500 | 600 | 350 |
| சூரல் | 350 | 400 | 350 | 400 | 400 | - |
| கும்பிளா | 450 | 400 | 400 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 550 | 800 | 300 | 500 | - | - |
| ஒரா | 400 | 400 | 350 | 400 | - | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 400 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | - | 400 | 150 | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 400 | 200 | 250 |
| திருக்கை | 150 | 400 | 300 | 300 | 250 | 150 |
| பாலை | 400 | 350 | 600 | 500 | - | - |
| வாளை | 100 | 200 | - | 350 | 200 | 200 |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 50 | - |
| மதனம் | 150 | 300 | 300 | 280 | - | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | - | 30 | 60 | 80 | 80 | 50 | 30 |
| கத்தரி | 100 | 80 | 100 | 80 | 80-90 | 60 | 80 | 40 |
| கரட் | 90 | 100 | 160 | 100 | 100-150 | 140 | 120 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40-50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 50 | 40 | 60 | 40 | 80-90 | 30 | 100 | 35 |
| பாகல் | 80 | 100 | 80 | 80 | 120-140 | 120 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100-120 | - | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 100 | 100-110 | 130 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80 | 80 | 70-100 | 120 | 100 | 60-70 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 30 | 60 | 60 | 30 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80 | 70-80 | 40 | 100 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 70 | 60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 25 | 20 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 30 | 40 | 10-15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 180 | 120 | 120-140 | 120 | 120 | 100 |
| புடோல் | 40 | 50 | 40 | 30 | 50-60 | 40 | 80 | 35 |
| கோவா | 80 | 80 | 60 | 70 | 70-80 | 80 | 100 | 40 |
| வெண்டி | 40 | 40 | 30 | 40 | 60-70 | 60 | 60 | 25 |
| போஞ்சி | 160 | 150 | 160 | 160 | 160 | 200 | 180 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 80 | 80 | 100 | 100 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50 | 50-60 | 40 | 35-45 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 90-120 | 90 | 90-100 | 90 |
| தேசிக்காய் | 80 | 100 | 140 | 70 | 70 | 140 | 140 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 140 | 140-160 | 120 | 150 | 70 |
| இராசவள்ளி | 250 | - | - | 160 | 90-100 | - | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 160 | 60 | 100 | 100 | 120 | 80-90 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | 6 |
| | | | | 4 | | | | |
| 9 | | 6 | | | | 3 | 2 | |
| 3 | 1 | | 5 | | | 8 | | |
| | | | | 1 | | | | |
| | 7 | | | | 2 | | | 4 |
| | | | | | | 6 | | 7 |
| 7 | | | 8 | 6 | 5 | | | |
| | 5 | | 2 | | 7 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 5 | 9 | 2 | 7 | 3 | 6 |
| 6 | 3 | 5 | 8 | 7 | 1 | 2 | 9 | 4 |
| 2 | 9 | 7 | 3 | 6 | 4 | 5 | 1 | 8 |
| 7 | 2 | 4 | 9 | 1 | 5 | 6 | 8 | 3 |
| 1 | 6 | 3 | 4 | 8 | 7 | 9 | 5 | 2 |
| 9 | 5 | 8 | 2 | 3 | 6 | 4 | 7 | 1 |
| 4 | 1 | 2 | 7 | 5 | 3 | 8 | 6 | 9 |
| 3 | 7 | 9 | 6 | 2 | 8 | 1 | 4 | 5 |
| 5 | 8 | 6 | 1 | 4 | 9 | 3 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# R ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

### ஆளும் குணமுடையவர்கள்

'R என்ற எழுத்தில் பெயர் தொடங்குவோர் அன்பும், அறிவும், ஆற்றலும், இயல்புத்தன்மையும், ஈகைக் குணமும் கொண்டவர்கள். இந்த எழுத்தில் சூரியக்கதிர்கள் பட்டு வலதுபுறம் திருப்பப்படுவதால் கற்பனையும், தன்னைப் பேணுதலும், கனிவான பேச்சும், பிரபலங்களைத் தனது செயற்கையால் மடக்கும் திறனும் இருக்கும். சேவைப் பணிகளில் வலிய முன் வந்து தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். கலைகளில் மிகப்பெரிய நாட்டமும், பெண்களின் பேரில் மதிப்பும், மரியாதையும், குழந்தைகள் மேல் பிரியமும் வைத்திருப்பர். நல்ல சிந்தனைவாதியான இவர்களுக்கு நீர் சம்பந்தமான நோய் வரலாம். தீர்க்கமான முடிவுகளை உடனே எடுக்க இயலாது. புதிதாக வருபவர்களை நன்கு உபசரித்து அன்னியோன்யமாகி, உடன்பிறந்தவரைப் போல அன்பை பொழிந்து விடுவர். இயற்கையின் இனிய புத்திரர்களான இவர்கள் பஞ்சபூதங்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்துவர். கலைத்துறை, திரைப்படம், பத்திரிகை, புத்தகம், விவசாயம், அரசுப் பணிகள், ஆன்மிகம் போன்றவைகளால் அதிகமான பொருள் வரவு கிடைக்கும்.

குடும்ப நிகழ்வுகளில் சற்று பட்டும் படாமலும் இருப்பர். உறவினர்களிடம் தமது உள்ளத்து எண்ணங்களைத் தெரிவிக்க சங்கடப்படுவர். அதிக உழைப்பினால் உயர்வுண்டு என்பதை பேச்சில் மட்டுமின்றி செயலிலும் காட்டுவர். பிறர் மனதை அறிந்து அதற்கேற்ப செயல்படுவதால் நண்பர்களை அதிகமாகப் பெற்றிருப்பர். எதுவும் தன்னால் முடியும் என்பதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டுவர். பல நண்பர்கள் இவர்களுக்கு உதவக் காத்துக்கிடப்பார்கள். சிலருக்கு ஆட்சிக் கட்டிலில் அமரும் வாய்ப்புக் கிடைக்கும். கண்ணியமான உங்கள் நற்குணத்தால், நாடு போற்றும் அளவுக்கு புகழும், பொருளும் மத்திம வயதில் கிடைக்கும். இவர்களிடம் ஆலோசனை கேட்ப் பெரும் கூட்டமே வரும். ஆனால், இவர்கள் தான் அடுத்தவர் ஆலோசனையைக் கேட்க மாட்டார்கள். ஆழ்நிலை, தவம், தியானம், மேலுலகு, மருத்துவம், பிரணா யாமம், அமானுஷ்ய சக்தி இவற்றில் மனம் அடிக்கடி லயிக்கும். சிலர் அரசியலில் எதிர்பாராத விதமாக புகுந்து கலக்குவர்.

தம்மை நம்பியவர்களை ஒருநாளும் கைவிட் டுச் செல்ல மாட்டார்கள். சாதாரணமாக நடக்க வேண்டியதைக் கூட, யோசனை என்ற பெயரில் நாள்கணக்கில் கிடப்பில் போட்டு விடுவதுண்டு. இவர்களின் கற்பனையில் உதித்த நிகழ்வுகள், நிஜமாகவே நாட்டில் நடக்கும்பொழுது மிகவும் மகிழ்வார்கள். இவர்களின் உயர்வுக்கு, A,C,T,I ஆகிய முதல் எழுத்தில் பெயர் அமைந்தோர் உறுதுணையாக இருப்பர். சப்தமில்லாத பேச்சு, நளினமான நடை, இனிய குரல் வளம், மனிதநேயம் போன்றவைகளால் எங்கும், எப்பொழுதும் இவர்கள் விரும்பப்படுவர். 9, 18, 27 திகதிகளில் பிறந்தவர்களுடனும், இவ்வெண்ணில் பெயர் எண் அமைந்தோரிடமும் முன் ஜாக்கிரதையாக இருப்பது பின் விளைவுகளை ஏற்படுத்தாமல் பாதுகாத்துக் கொள்ள உதவும். உங்களுக்கு தேவையில்லாத விடயங்களில் மூக்கை நுழைக்காமல் இருந்தால் பிரச்னைகளிலிருந்து தப்பலாம்.



# கோபம்இல்லாத மனைவி தேவையா..?




குடும்பத்தில் கணவன், மனைவி இடையே சண்டை, தகராறு ஏற்பட்டு பல குடும்பங்கள் பிரிந்து விடுகின்றன. முடிவில் மனைவி தான் கோபம் கொண்டவளாக இருந்தாள் என்று பெரும்பாலான கணவன்மார் தெரிவிக்கின்றனர். குடும்பத்தில் மனைவிகள் கோபம் அடைய, கணவர்மாரும் சில நேரங்களில் காரணமாகி விடுகின்றனர். மனைவிக்கு கோபம் ஏற்படாமல், அவரிடம் இருந்து அன்பை மட்டும் பெற இதோ சில ஆலோசனைகள்:

★ மனைவி செய்யும் சிறு சிறு தவறுகளைச் சுட்டிக்காட்டி வாய்க்கு வந்தபடி திட்டாதீர்கள். தவறை நிதானமாக எடுத்துக் கூறுங்கள்.

★ மனைவியை பார்க்கும் போது புன்னகை செய்ய மறக்காதீர்கள். இதனால் கோபமாக இருக்கும் மனைவி கூட சில நேரங்களில் அதனை மறந்துவிட வாய்ப்புள்ளது.

★ முக்கிய வேலைகளில் ஈடுபடும் போது தொந்தரவு செய்வது போல மனைவியிடம் பேசி கொண்டே இருக்காதீர்கள். இதனால் மனைவி கோபமடைந்து, உங்களைத் திட்ட வாய்ப்பு உண்டு.

★ வேலைக்கு செல்லும் மனைவியாக இருந்தால், வேலை முடிந்து வரும்போது அவர்களின் அனுபவங்களை கேட்டு அறிந்து கொள்ளுங்கள். அதே போல நீங்களும் உங்கள் அனுபவங்களை, அவரிடம் பகிர்ந்து கொள்ள மறக்காதீர்கள்.

★ மனைவி செய்யும் சிறு உதவிகளுக்கும் அன்புடன் நன்றி கூறலாம். அதனை சற்று கொஞ்சலாக கூறினாலும் தவறில்லை. நீங்கள் செய்யும் தவறுகளுக்காக உடனே மன்னிப்பு கேட்டு கொள்ளுங்கள். இதன்மூலம் மனைவியிடம் கோபம் நீடிப்பதை தவிர்க்க முடியும்.

★ மனைவி செய்த தவறுகளை மனதில் வைத்து கொண்டு, அதனைக் குத்திக் காட்டிப் பேசக் கூடாது. மேலும் சம்பந்தமே இல்லாமல் மனைவியின் பெற்றோரையும், குடும்பத்தையும் திட்டக் கூடாது. இதனால் மனைவியின் மனதில் வெறுப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

★ வேலைக்குச் செல்லாத மனைவியாக இருந்தால், நேரம் கிடைக்கும் போது மனைவியை வெளி இடங்களுக்கு கூட்டிச் செல்ல மறக்க வேண்டாம்.

8. மனைவி விரும்பி ஏதாவது பொருள்களை கேட்கும்போது, பணம் இருந்தால் வாங்கி கொடுக்கலாம். இல்லா விட்டால் பணம் இல்லை என்றோ அல்லது குறிப்பிட்ட பொருள் இப்போது தேவையில்லை என்றோ சாந்தமாக மனைவியிடம் எடுத்து கூறலாம்.

★ கணவனும் மனைவியும் பேசும் போது பிடிவாதமாக பேசாமல், விட்டுக் கொடுத்துப் பேசுங்கள். மனைவியும் தனது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கத் தவறாதீர்கள்.

★ மனைவி செய்த சமையல், தோட்ட வேலைகள், [illegible] அலங்கரிப்பது உள்ளிட்ட பணிகளைப் பார்த்துக் குறை கண்டு பிடிக் காதீர்கள். நன்றாக இருப்பதாகக் கூறிவிட்டு, மாற்றத்தைப் பணிவாகத் தெரிவிக்கலாம்.

★ மற்றவர்களின் முன் மனைவியை கேவலமாகப் பார்ப்பது, பேசுவது, திட்டுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவதால், மனைவி தனிமை உணர்வு மேலிட தாய்வீட்டு நினைப்பு வந்து விடுகின்றது.

★ வீட்டில் இருக்கும் போது மனைவிக்கு சிறு சிறு உதவிகள் செய்வதன் மூலம், இருவருக்கும் இடையே உறவும் பலப்படும், அன்பும் பெருகும். கோபம் இருந்த இடம் தெரியாமல் போகும்.

### ஓர் ஆணிடம் பெண் எதிர்பார்ப்பது என்ன?

பெண்கள் இப்படி நடக்க வேண்டும் என்று ஆண்கள் எதிர்பார்ப்பது போல ஒவ்வொரு பெண்ணும், ஆணிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறாள். ஒவ்வொருவருக்கும் எதிர்பார்ப்புகள் வித்தியாசப்படும். ஆனால் அனைத்துப் பெண்களும் ஆண்களிடம் எதிர்பார்ப்பது அன்பும், பாசமும், நேசமும்தான். மகிழ்ச்சியான தருணத்தில் தலைகோதும் விரலும், சோக தருணத்தில் தலை சாய மடியும் தரும் ஆண் கிடைத்தால் ஒரு பெண் மகிழ்ச்சி அடைகிறாள். எதிர்பார்க்கும் தருணத்தில் ஏங்கச்செய்து, எதிர்பாராமல் முத்தமிடும் துணையிடம் பெண் மகிழ்ச்சியடைகிறாள். எது சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் ஆணை விட சில நேரங்களில், வாக்குவாதம் செய்து கோபப்படும் காதலனை கண்டு பெண் மகிழ்ச்சியடைகிறாள்.

ஊடல் நேர்ந்து பிரிந்த பின் சில நிமிடங்கள் கழித்து காதலன் போன் செய்யும் போது, பெண் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தான் விரும்பும் ஒரு விடயத்தைச் செய்து தன்னை சந்தோஷப்படுத்தும் ஆண் கிடைத்தால் ஒரு பெண் மகிழ்ச்சியடைகிறாள். தான் விரும்பாத ஒரு காரியத்தை காதலன் செய்து விட்டு அது சாதாரண விடயமாகவே இருந்தாலும், பின்பு அதற்காக வந்து மன்னிப்புக் கேட்கும் அந்தத் தருணம் பெண்களின் மகிழ்ச்சியில் ஒரு கர்வமும் கூடவே தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1.தண்ணீரில் பிறப்பான் தண்ணீரில் இறப்பான். அவன் யார்?

உப்பு

2.குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அவன் யார்?

கத்தரிக்காய்

3.காற்று நுழைந்ததும் கானம் பாடுகிறான். அவன் யார்?

புல்லாங்குழல்.

4.ஓட்டம் நின்றால் போதும் ஆட்டம் நின்று போகும். அது என்ன?

குருதி

5.தனித்து உண்ணமுடியாது என்றாலும் இது சேர்த்தால் தான் உணவுக்கு சுவை அது என்ன?

உப்பு

6.வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?

கத்தரிக்கோல்

## இரண்டு மனைவியர்




ஒருநாட்டில் ஒரு அரசர் இருந்தார். அவர் நீதி தவறாதவர். மிகவும் கண்டிப்பானவர். சிறிய குற்றம் என்றால் கூட மிகப்பெரிய தண்டனை வழங்குவார். அதுவும் திருட்டு என்றால் ஏற்றுக் கொள்ளவே மாட்டார். சிறு திருட்டு என்றாலும் சாவுத் தண்டனை விதித்து விடுவார். ஒருநாள் ஒரு திருடன் அரண்மனைக்குள் நுழைந்து திருட முற்பட்டான். அரசரே நேரில் கண்டு கையும் களவுமாக அவனைப் பிடித்து விட்டார். மறுநாள் அரசவையில் விசாரணை நடந்தது. குற்றவாளி திருட வந்தது உண்மை என்பதை ஒப்புக் கொண்டான். வழக்கம் போல் அரசர், உனக்கு சாவுத் தண்டனை விதிக்கிறேன் என்று தீர்ப்புச் சொல்லி விட்டு தளபதியைப் பார்த்து இவனை நடுத் தெருவில் நிறுத்தி தலையைத் தனியாகச் சீவி விடுங்கள் என்று கட்டளையிட்டார்.

குற்றவாளி தயங்கினான். சொல் என்றார் அரசர். அரசே! எனக்கு இரண்டு மனைவியர், பதி னாறு பிள்ளைகள். நான் போய் விட்டால் எனது குடும்பம் மிகவும் கஷ்டப் படும். கொஞ்சம் கருணை காட்டுங்கள் அரசே! என்றான் திருடன்.

உடனே அரசர் கொஞ்சம் கூட யோசிக்காது அவனை விடுதலை செய்திட உத்தரவு பிறப்பித்தார். குற்றவாளி அரசனை வணங்கி வெளியில் சென்றதும், ஆச்சரியம் தாங்காத மூத்த அமைச்சர். அரசே! ஏன் இப்படிச் செய்தீர்கள்? என்று கேட்க. இரண்டு மனைவியருடனும் பதினாறு பிள்ளைகளுடனும் இவன் வாழ்வது தான் இவன் செய்த குற்றததுக்குச் சரியான தண்டனை. சாவுத் தண்டனை சிறிது நேரத்தில் முடிந்துவிடும். அவன் ஆயுள் முழுவதும் கஷ்டப் படட்டும் என்று கூறிச் சிரித்தார் அரசர்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க





## ஜப்பானிய மொழி




இது ஜப்பானிய மற்றும் ஜப்பானிலிருந்து குடி பெயர்ந்த 130 மில்லியன் மக்களால் பேசப் படுகின்ற ஒரு மொழியாகும். ஜப்பானிய மொழியில் இது நிஹோங்கோ என்று அழைக்கப்படுகிறது. இது சிறப்பாக ஜப்பானில் மட்டுமே பேசப் பட்டு வருகின்ற போதும், ஜப்பானிலிருந்து இடம் பெயர்ந்து வேறு நாடுகளில் வசித்து வருபவர்களும் இந்த மொழியைப் பேசி வருகின்றனர். இந்த மொழி மூன்று வகையான வரி வடிவங்களைக் கொண்டது. இந்த மொழியில் அயல் மொழிகளிலிருந்து பெறப்பட்ட சொற்களின் தாக்கம் அதிகம் காணப்படுகிறது. முக்கியமாகக் கடந்த 1500 வருடங்களில் சீன மொழியில் இருந்து அதிகம் பெறப்பட்டுள்ளது அல்லது சீன மொழியை அடிப்படையாக கொண்டு சொற்கள் உருவாக்கப் பட்டுள்ளன எனலாம்.

## மழை




மழை வருது மழை வருது
நெல்லு அள்ளுங்க
முக்காப்படி அரிசி போட்டு
முறுக்குச் சுடுங்க
ஏரோட்டும் மாமனுக்கு
எண்ணி வையுங்க
சும்மா இருக்குற மாமனுக்கு
சூடு வையுங்க

## மன அழுத்தத்தை விரட்டுவது எப்படி?

வாழ்வின் போக்கு பிடிபடும் வரையில் அழுத்தங்களின் தாக்குதலுக்கு ஆளாகும் பலரும் ஆடிப்போய் விடுகிறார்கள். செய்த செயல் ஒன்றுக்கு எதிர்பார்த்த விளைவு ஏற்படாத போதும், எதிர்பாராத எதிர் விளைவுகள் ஏற்படும்போதும் மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். சிகிச்சை தேவைப்படும் அளவு மன அழுத்தத்தை முற்ற விடுபவர்களுக்கு சிகிச்சையே தீர்வு. ஆனால் அன்றாட வாழ்வில் நிகழும் சம்பவங்களால் ஏற்படும் பின்னடைவுகள், மன அழுத்தங்கள் ஆகியவற்றை சரி செய்ய சில வழிமுறைகள் உள்ளன. அவை என்னவென்று பார்க்கலாம்...

பூப்பூவாய்த் தூவும் வெந்நீர் சுவரின் கீழ் கண்மூடி நிற்பது போலவும், உங்கள் அழுத்தங்களும் பதட்டங்களும் அடித்துக் கொண்டு போவது போலவும் மனதுக்குள் ஒரு காட்சியை வரைந்து பார்க்கச் சொல்கிறார்கள் மனவியல் நிபுணர்கள்.





அமைதியான இடமொன்றில் ஏகாந்தமாய் நீங்கள் கண்மூடிப் படுத்திருப்பது போன்ற காட்சியையும் உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் அந்தக் காட்சியைத் துல்லியமாக உணர்வது அவசியம். அங்கு பார்வையில் படிகிற அம்சங்கள், கடற்கரையின் உப்பு வாசனை இவை அனைத்தையும் மனதில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியாக இருக்கும் போது நீங்கள் புன்னகைக்கிறீர்கள் என்பது எவ்வளவு உண்மையோ, புன்னகைக்கும் போதெல்லாம் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்பதும் உண்மை. நரம்புகளில் தொடங்கும் மெல்லதிர்வுகள் முகத்திலுள்ள தசைகளை அசைத்து, பாதுகாப்பான உணர்வை மூளைக்கும் கொண்டு செல்லும் அற்புதம் ஒவ்வொரு புன்னகையின் போதும் நிகழ்கிறது. புன்னகையின் சக்தி புரியவேண்டுமா? புன்னகைத்துத்தான் பாருங்களேன்.

நம்மை நாமே உற்சாகப் படுத்திக்கொள்ள சில வாசகங்களை மனதுக்குள் உருவாக்கிக் கொள்வது மேலை நாட்டினர் பாணி. எமது நாட்டில் அதற்குப் பஞ்சமே கிடையாது. எல்லாம் செய்யக்கூடும், நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எத்தனையோ வாசகங்கள், மனதுக்கு சக்தி தரும் மந்திரங்களாய் உள்ளன. மனதுக்குள்ளேயே அவற்றைப் பத்துப் பதினைந்து முறைகள் சொல்லும்போது பெரிய அளவில் மாற்றங்கள் தெரி யும்.


மனஅழுத்தத்தைத் தந்த சம்பவம், அதன் விளைவுகள், கையாள்வதற்குமேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், உடனடி நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒரு காகிதத்தில் எழுதுங்கள். மனதுக்குள்ளேயே பலவற்றையும் யோசிப்பதைவிட எழுதும்போது ஒரு புதிய தெளிவு பிறக்கிறது. அந்தத்தெளிவே மன அழுத்தத்திலிருந்து விடுபடும் சக்தியைக் கொடுக்கிறது. தெளிவாக எழுதிப்பார்க்கும்போது தீர்வை நோக்கிப் பலஅடிகள் வைத்தது போன்ற மன நிறைவை எளிதில் எட்ட முடிகிறது.

அழுத்தம் கொடுக்கும் பதட்டம் காரணமாக தடாலடியாய் சில தவறான முடிவுகளை எடுக்கக் தோன்றும். அந்த நேரப் பதட்டத்தில் எது தவறு எது சரி என்று சிந்திக்காமல் செயல்படுவது சேதங்களை வளர்க்கும். எனவே, மனம் பதட்டமாக இருக்கும்போது முடிவெடுப்பதைத் தள்ளிப்போடுங்கள். பத்துவரை மனதுக்குள்ளேயே எண்ணி விட்டு, சிறிது தூரம் உலவிவிட்டு, பதட்டம் தணியும்வரை பொறுமையாய் இருந்தால் ஆக்கபூர்வமான முடிவுகள் சாத்தியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டு மைத்திரிக்கு செங்கம்பள வரவேற்பு

## சந்திரிகா, சோபிததேரர், இந்திய, அமெரிக்க தூதுவர்களும் நிகழ்வில் பங்கேற்பு



கொழும்பு, செப்.2
நாடாளுமன்றத்தின் வைபவ ரீதியான அமர்வை ஆரம்பித்து வைப்பதற்காக நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.
எட்டாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.
பொதுத்தேர்தலில் வெற்றிவாகை சூடிக்கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர். புதிதாக சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் சிலர் ஆசனத்தில் அமர்ந்த படியே சபையை மேலும் கீழுமாக விழி மூலம் சுற்றிப்பார்த்துக் கொண்



டிருந்தனர்.
நேற்றை சபை அமர்வின்போது உறுப்பினர்களுக்கு உரியவகையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், சிரேஷ்ட உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு விருப்பமான ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். அடுத்து வரும் நாட்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனம் உரிய வகையில் ஒதுக்கப்படும்.

### மஹிந்தவைக்கண்டு எழுந்துநின்ற எம்.பிக்கள்

இதில் குறிப்பாக இலங்கை அரசியலில் எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர், பிரதமர், ஜனாதிபதியென அனைத்து உயர் பதவிகளையும் வகித்திருந்த மகிந்த ராஜபக்ச நேற்றைய சபை அமர்வில் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக கலந்து கொண்டிருந்தார். எதிர்க்கட்சி வரிசையில் முன் வரிசை ஆசனத்தில் அவர் அமர்ந்திருந்தார். இவ்வாறு அமர்ந்திருந்த அவர் தனது அருகில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகமவுடன் நீண்டநேரம் எதையோ பேசிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.
இந்நிலையில், சபையை ஒத்தி வைப்பதற்கு முன்னரே சபையிலிருந்து அவர் வெளியேறினார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச வெளியேறும்போது அவரைக் கண்ட எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். நாடாளுமன்றத்துக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள கீதா குமாரசிங்கவை கண்ட மகிந்த அவரிடம் சிரித்தபடியே எதையே கூறினார். அதன் பின்னர் கீதாவின் முகத்தில் புன்னகை பூ மலர்ந்தது.
இலங்கையில் ஜனாதிபதி பதவி வகித்த எவரும் தாம் ஓய்வுபெற்ற பின்னர் பொதுத்தேர்தலில் களமிறங்கவில்லை. எனினும், மகிந்த ராஜபக்ச குருணாகலை மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### செல்வத்தின் முகத்தில் 'அப்படியொரு' சிரிப்பு

கன்னி அமர்வின், ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக சபாநாயகர் தேர்வு இடம்பெற்றது. அதன் பின்னர் உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் நடைபெற்றது. கட்சித் தலைவர்கள் உரையாற்றிய பின்னர் பிரதி சபாநாயகர், குழுக் களின் பிரதித் தலைவர் ஆகிய பதவிகளுக்குரிய உறுப்பினர்கள் தேர்வு இடம்பெற்றது.
இதன்போது குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனின் பெயரை சக நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் முன் மொழிந்தார். இதனை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல வழி மொழிந்தார்.
குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர். செல்வம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என சபாநாயகர் அறிவித்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் முகத்தில் புன்னகை பூப்பதை காணக்கூடியதாக இருந்து. இதற்கிடையில் அநுரகுமார திஸாநாயக்க, சுனில் ஹந்துனெத்தி ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிரித்தபடியே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வத்துக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பதிலுக்கு சைகை மூலம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்.

### மனோவை நோக்கி ஓடிய 'அடைக்கலம்'

அதன்பின்னர், ஆளுந்தரப்பு பக்கத்தில் முன்வரி சையில் அமர்ந்திருந்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரான மனோ கணேசனுடன் பேசுவதற்காக எதிர்பக்கமிருந்து ஆளும்பக்கம் நோக்கி நகர்ந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம். அப்போது மனோ கணேசன் அவருக்கு கைலாகு கொடுத்து வாழ்த்தி வரவேற்றார். ஆளுந்தரப்பின் இரண்டாவது வரிசையில் இருந்து ஓடிவந்த நாடாளுமன்ற உறுப்பினர் இராதா கிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வத்தின் கைகளை இறுக்கப் பிடித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார். பின்னர் மூவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

### கன்னி அமர்விலேயே கம்மன்பில கலாட்டா

கட்சித் தலைவர்களுக்கு உரையாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்ட போது, புதிதாக தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான உதயகம்மன்பிலவுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
ஆரம்பத்தில் தேசிய அரசை மறைமுகமாக சாடிப் பேசிய அவர், ஒரு கட்டத்தில் தனது வழமையான பாணியில் இனவாதப்போக்கில் கருத்துகளை வெளியிடத் தொடங்கினார்.
இதனால் கடுப்பாகிய பிரதமர், இப்படி பேசவேண்டாம் என உரத்த குரலில் குறிப்பிட்டார். அப் போதும் கம்மன்பில அடங்கவில்லை. அதன் பின்னர் ஆளுந் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிடத் தொடங்கியதால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிட்டார் அவர்.
ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி தலைமையில் வைபவ ரீதியான நாடாளுமன்ற அமர்வை நடத்துவதற்காக பிற்பகல் 3 மணிவரை சபையை சபாநாயகர் கருஜயசூரிய ஒத்தி வைத்தார்.
இந்நிலையில், 2 மணியளவில் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வு நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. பெருமெடுப்பில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நாடாளுமன்றத்தைசூழ பாதுகாப்பும் பலப் படுத்தப்பட்டிருந்தது.
வரவேற்பு நிகழ்வில் ஆரம்பத்தில் சபாநாயகரால் தெரிவுசெய்யப் பட்ட கருஜயசூரியவுக்கு வரவேற் பளிக்கப்பட்டது. பாரியார் சகிதம் வருகை தந்த அவரை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வரவேற்றார். அதன் பின்னர் வருகை தந்த பிரதமரை இவர்கள் இருவரும் வரவேற்றனர்.
இதன்தொடர்ச்சியாக ஜனாதிபதியின் வரவு இடம் பெற்றது. மோட்டார் சைக்கிள், குதிரைப்படை அணி வகுப்புடன் வருகை தந்த ஜனாதிபதிக்கு இராணு வமரியாதை அளிக்கப்பட்டது. 21 மரியாதை வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.



### மஹிந்தவை நோக்கி வணக்கம் சொன்ன மைத்திரி

அதன்பின்னர் 3 மணிக்கு சபாநாயகர் தலைமையில் எட்டாவது நாடாளுமன்றத்தின் வைபவ ரீதியான அமர்வு ஆரம்பமானது. சபாநாயகர் சகிதம் ஜனாதிபதி சபைக்குள் பிரவேசிக்கும்போது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.
பிரதமரை நோக்கி இருக்ரம்கூப்பி வணக்கம் தெரி வித்தார் ஜனாதிபதி மைத்திரி. இதற்கு பிரதமரும் பதில் வணக்கம் தெரிவித்தார்.எதிரணி பக்கம் தனது பார்வையை செலுத்திய மைத்திரிபால சிறிசேன, மகிந்தவை நோக்கியும் இருகை கூப்பி வணக்கம் தெரிவித்தார். பதிலுக்கு மகிந்தவும் புன்முகத்துடன் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார்.
மைத்திரிபால சிறிசேன சபைக்குள் வரும்போது சபாநாயகர் கலரியில் பெருந்திரளான பிரமுகர்கள் குவிந்திருந்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அவரது சகோதரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் ஆகியோர் சபாநாயகர் கலரியில் அமர்ந்திருந்தனர்.
முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்தனர். அத்துடன், இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகளின் தூதுவர்களும் பிரசன்னமாகிருந்தனர். மாகாண முதல மைச்சர்கள், ஆளுநர்கள், அமைச்சுகளின் செயலாளர்களும் வருகை தந்திருந்தனர். சர்வ மத தலைவர்களும் பங்கேற்றிருந்தனர். சோபித தேரரும் கலந்து கொண்டிருந்தார்.குறிப்பாக நாடாளுமன்றத்துக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலர் தமது குடும்பத்தினரையும் அழைத்து வந்திருந்தனர்.
இந்நிலையில், சபாநாயகர் கதிரையில் அமர்ந்த ஜனாதிபதி, அரசின் கொள்கைகள் பற்றி விளக்கி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதனையடுத்து சபை அமர்வு நாளை காலை 9.30 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சித்

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுமென்ற அரசின் உறுதியளிப்பின் பின்னரே நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி யைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்வதற்கான தீர்மானத்துக்கு வந்ததாக அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன அதிக ஆசனங்களைப் பெற்றிருந்த நிலையில் இரு கட்சிகளும் தேசிய அரசில் இணைந்துள்ளன.

இந்த நிலையில் இந்த இரு கட்சிகளுக்கு அடுத்தபடியாக 16 ஆசனங்களுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூன்றாவது அணியாகவுள்ளது. அந்த வகையில் தற்போது நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட எதிர்க்கட்சி என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்குவதனால் கூட்டமைப்புக்கே எதிர்க்கட்சிப் பதவி வழங்கவேண்டும் எனத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் எதிர்க்கட்சித் தலைவர் குறித்து எதிர்பாராத முடிவு வரும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குப் புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுவதைத் தாம் வரவேற்பதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற நடவடிக்கைகள் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் நாளை நாடாளுமன்றம் ஆரம்பமானதும் சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவை அறிவிப்பார். இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்வர் என அரச உயர்மட்டத்திலிருந்து நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்தே அமைச்சரவையை அதிகரிப்பதற்கான பிரேரணையைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சபையில் சமர்ப்பிப்பார் எனவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்த முதலாவது தமிழ்த் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆவார். அவர் 1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி எதிர்க்கட்சித் தலைவராக பதவி ஏற்றார். 32 ஆண்டுகளின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்கும் இரண்டாவது தமிழ்த் தலைவர் இரா.சம்பந்தன் ஆவார். (த)

## கூட்டமைப்பின்

தெரிவு செய்யப்பட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரும் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தினர். குறித்த கலந்துரையாடலிலேயே மேற்படி தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கூட்டத்தில் இரா. சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற தீர் மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார். மேலும் கட்சியின் பிரதம கொறடாவாக தர்மலிங்கம் சித்தார்த்தனும், நாடாளு மன்றக் குழுச் செயலாளராக சி.சிறீதரனும், பேச்சாளராக எம்.ஏ.சுமந் திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-5)

## ஜனநாயகம்

கம் தம்மிக தஸநாயக்க தலைமையில் கூடியது. இதையடுத்து சபாநாயகரா கத் தெரிவுசெய்யப் பட்ட கரு ஜயசூரியவுக்குக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரி வித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் உயரிய சபைக்கு நீங்கள் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அரசியல் உரிமை, சபையைப் பிரதி நிதித்துவப்படுத்தும் உறுப் பினர்களின் உரிமை ஆகியவற்றைக் காப்பவராக நீங்கள் இருக்கின்றீர்கள். அரசியல் அனுபவம் மிக்க ஒருவர் சபை உறுப்பினர்களையும் நியாயமாக நடத்துவீர்கள் என எதிர்பார்க் கின்றேன்.

நாட்டின் முக்கியமான தருணத்தில் தான் நீங்கள் சபாநாயகராகப் பதவியேற்றுள்ளீர்கள். நீண்டகாலம் போர் இடம்பெற்று முரண்பாடுகள் காணப்பட்டன. போரால் நாம் துன்பப்பட்டோம்; பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம். அதை மீண்டும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வடக்கு-கிழக்கு மக்கள் நாட்டில் நீதி, இறைமையை நிலைநாட்டத்தான் ஜனவரி 8ஆம் திகதி தமது வாக்குகளை அளித்தனர். இந்த நாடாளுமன்றமானது முக்கிய விவாதத்தைக் கொண்டுள்ளது.

பல்வேறு பிரச்சினைகள் இங்கு இருக்கின்றன. புதிய ஆட்சியின்கீழ் ஜனநாயகம், சமத்துவம், நீதி என்பன நிலைநாட்டப்படவேண்டும். சகல மக்களும் உரிமை, இறைமை உடையவர்களாக இருக்கவேண்டும். இந்தப் பொறுப்புகளை நீங்கள் மதித்து செயற்படுவீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த இலக்குகளை அடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உங்களுக்கு முழு ஆதரவை வழங்கும்-என்றார்.

(த-சி)

## ஜெனிவாவில்

முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவு தேடும் பரப்புரைகளை ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுரகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, இலங்கைக்கு ஆதரவு தரும்படி, இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவும் மற்றும் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தப் பரப்புரைச் செயற்பாடுகளுக்காகப் பல்வேறு நாடுகளிலும் பணியாற்றும் இலங்கை இராஜதந்திரிகள் ஜெனிவாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் இருந்து மதுக்க விக்கிரம ஆராச்சி என்ற அதிகாரி இதற்காக ஜெனிவா சென்றுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு ஆதரவு தேடும் இலங்கை அரசுடன் இணைந்து தீர்மானத்தைக் கொண்டு வருவது தொடர்பாக ஆராயும் முதலாவது உபமாநாட்டை ஜெனிவாவில் எதிர்வரும் 17ஆம் திகதி நடத்த அமெரிக்கா ஏற்பாடு செய்துள்ளது. இந்த மாதம் 30 ஆம் திகதி, இலங்கை குறித்த விசாரணை அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

## சபாநாயகராக

லாவது அமர்வு நேற்றுக் காலை கூடிய போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினரும் பிரதித் தலைவருமான கரு ஜயசூரியவின் பெயர் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்பட்டது டன், நிமால் சிறிபால டி சில்வா அதனை வழிமொழிந்தார்.

பிரதிச் சபாநாயகராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரி வானார். முன்னாள் எதிர்க்கட் சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, திலங்கவின் பெயரை முன்மொழிந்தார்.

இந்த முன்மொழிவை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவ ரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான ரவூப் ஹக்கீம் வழி மொழிந்தார்.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சி யின் உறுப்பினர் ஒருவர் சபா நாயகராகவும், சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் உறுப்பினர் ஒரு வர் பிரதிச் சபாநாயகராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(த-10)

## நாடாளுமன்ற

போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பெயரை கூட்டமைப்பின் மற்றொரு உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் முன்மொழிய, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

இதேவேளை 2004 ஆண்டு நாடாளுமன்றத்தில் ஜே.வி.பியின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனும் 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றில் ஈ.பி.டி.பி கட்சியின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக பதவி வகித்தனர்.

இலங்கை நாடாளுமன்ற உயர் பதவிகளில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் பதவி மூன்றாவது என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

---

### மரண அறிவித்தல்

**சண்முகவடிவேலு பொன்னம்பலம்**
(ஓய்வுநிலை ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

தோற்றம் 10.10.1948 — மறைவு 01.09.2015

யாழ்ப்பாணம் அம்மன் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகவடிவேலு பொன்னம்பலம் 01.09.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் சண்முகவடிவேலு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி வேலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் (முன்னாள் அதிபர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் பிரணீதா (வைத்திய அதிகாரி, இரத்த வங்கி, யாழ். போதனா வைத்தியசாலை), சுதாஜினி (Post Graduate student, University of Oxford ) முருகேந்திரா ( Quality Assurance Analyst Millennium IT) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாகரன் (Research Associate, Newcastle University England) இன் அன்பு மாமனாரும் ஸ்ரீகாந்தா (ஓய்வுநிலை ஆசிரியர், புனித தோமஸ் கல்லூரி கொழும்பு), ஸ்ரீதரன் (முன்னாள் ஊழியர் இலங்கை போக்குவரத்துச் சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.09.2015 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் அம்மன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 3.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : 0094775960538 (முருகேந்திரா)

தகவல் : குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்

**முருகுப்பிள்ளை மனோகரன்**



கேசரி வீதி, தையிட்டி காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் காரைக்கால் சிவன் கோயிலடி இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப் பிள்ளை மனோகரன் நேற்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சொர்ணாம்பிகையின் அன்பு கணவரும் தர்சனின் அன்பு தந்தையும் மர்மயோகி, ஸ்ரீகரன், மங்களாதேவி, வசீகரன், ஞானேஸ் வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைக்கால் சிவன் கோயிலடி, இணுவில்.

தகவல் : தர்சன் (மகன்)

---

### மரண அறிவித்தல்

**அருளம்பலம் அருள்செல்வன்**



கொக்குவிலை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் அருள்செல்வன் பிரான்ஸில் 30.08.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் (வர்த்தகர்) - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் முருகையா - தவலட்சுமி தம்பதியரின் மருமகனும் லோஜிதாவின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் அஸ்வின், அன்பரசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்மோகன் (நோர்வே) அருள்நீதன் (பிரான்ஸ்), விஜித்தா (சுவிஸ்), சுஜாதா (கொக்குவில்) ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் குமுதா (நோர்வே), சுமதி (பிரான்ஸ்), பாலேந்திரா (சுவிஸ்), செல்வராஜா (கொக்குவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அக்ஷா, அபிலாஷன், அச்சன், அஸ்வின், அஸ்வர், அமிரா (நோர்வே), அபிரா, மாதுஷன், அபிஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஜேபினா, அச்சா, ஜங்காஜித், பவதாரகா, அருந்ததிக்கா (சுவிஸ்), துவாரகா (கொக்குவில்) ஆகியோரின் ஆசைமிகு மாமனும் சுகிர்தா (கொக்குவில்), கிருஷ்ணா (வவுனியா), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் ஜெகந்தா (கனடா), ஹேமா (இந்தியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 02.08.2015 புதன்கிழமை முதல் பார்வைக்கு (Le Funérarium, Carrefour Jean Moulin, 94190 Villeneuve - Saint - Georges) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (04.08.2015) அன்று (14.30 பிரான்ஸ் நேரப்படி) மணியளவில் (13, Avenue dela Fountaine saint - martin 94460 Valention) நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
கண்ணன் (அண்ணா) - 003369152059
மோகன் (அண்ணா) - 004799853636
சுஜாதா (தங்கை) - 0772189874.
சுமதி (அண்ணி) - 0033652396282

தகவல் :-
குடும்பத்தினர்.
மனோன்மணி வாசா,
ஆடியபாதம் வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**சின்னட்டி ஐயாத்துரை**
(மின் பொறிவலர் - இலங்கை மின்சார சபை)

மலர்வு 03.11.1959 — உதிர்வு 03.08.2015



அன்னாரின் ஆத்ம சாந்தி நிகழ்வு இன்று (02.09.2015) புதன்கிழமை "TCT" சொர்ணாம்பிகை மண்டபத்தில் மதியம் 12.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.03, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்

**தொம்மைப்பிள்ளை அமிர்த நாதர்**

சில்லாலை தெற்கைச் சேர்ந்த தொம்மைப்பிள்ளை அமிர்த நாதர் 01.09.2015 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இசபெல்ம்மா (செல்லம்மா) வின் அன்புக் கணவரும் ராசசிங்கம் புனிதம், புஸ்பம், பங்கிராஸ், யோக ராஜ், யோகராணி, றூபன் , றஞ்சன், றஞ்சினி, செல்வராணி, ராஜி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல் :
றஞ்சினி குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியா

னால் அவை உட்பட பரிசோதனை மேலும் வலுப்படுத்த சந்தேகநபர்களின் இரத்த மாதிரிகளையும் பரிசோதனைக்காக தனியார் இரசாயனப் பகுப்பாய்வு நிறுவனத்துக்கு அனுப்பி ஆய்வு மற்றும் மரபணுச் சோதனைகளை மேற்கொள்ள ஊர்காவற்றுறை நீதிமன்று குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கோரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போது அந்த வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் உள்ள 9 சந்தேகநபர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கடந்த தவணை நீதிமன்று உத்தரவிட்டிருந்தபடி, 9 சந்தேகநபர்களினதும் இரத்த மாதிரிகள் யாழ். சிறைச்சாலையில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரியினால் பெறப்பட்டது. அவை நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டதோடு அதனைப் பெற்றது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் சாட்சியம் பதிவு செய்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தொடர்பான முன்னேற்ற அறிக்கையையும் சமர்ப்பித்திருந்தனர். முன்னர் பெறப்பட்ட 9 சந்தேகநபர்களினதும் இரத்த மாதிரிகள், மாணவியின் இரத்த மாதிரி, மாணவியின் உடலில் இருந்து மீட்கப்பட்ட உரோமம், மாணவியின் உள்ளாடை உள்ளிட்ட தடயப் பொருள்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. உரோமம் மற்றும் தடயப்பொருள்களும் சந்தேகநபர்களின் இரத்த மாதிரிகளும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகின்றனவா என்ற மரபணுப் பரிசோதனை ஆய்வுக்காகவே குறித்த தனியார் நிறுவனத்துக்கு சான்றுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் உரோமம், உள்ளாடை என்பவற்றில் இருந்து மரபணு பரிசோதனையை மேற்கொள்ளக் கூடிய உபகரணங்கள் இல்லை என்று இரசாயனத் திணைக்களப் பணிப்பாளர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார். இதனால் குறித்த தடயப் பொருள்கள் மற்றும் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்காகத் தனியார் நிறுவனமான ஜீன்ரெக் எனும் இரசாயனப் பகுப்பாய்வு நிறுவனத்துக்கு அனுப்பி ஆய்வை மேற் கொள்ளக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிடம் அனுமதி கோரியதனால் நீதிமன்று அனுமதி வழங்கியது.

இந்தக் கூட்டு வன்புணர்வின் பின்னரான கொலையானது மனித குலத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதசெயல் என்று தெரிவித்த நீதிவான் லெனின் குமார், இந்த விசாரணை தெளிவாக இருக்க வேண்டும். விசாரணை துரிதப்படுத்தப்பட வேண்டும். வழக்குடன் தொடர்புடையவர்கள் தப்பிச் செல்லப் பொலிஸார் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது. அதற்கேற்றதாக விசாரணை நடத்த வேண்டும். தடயப்பொருள்கள் மாத்திரமல்ல வேறு பல வகைகளிலும் தேவையான விசா ரணைக ளை முன்னெடுத்து சாட்சியங்கள் மூலமாக இந்த வழக்கை வலுப்படுத்தக் கூடுமானளவுக்கு சகல வழிகளிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் கடுமையாக வலியுறுத்தினார்.

இவை தவிர வழக்கில் சந்தேகநபர்களாகக் கூறப்பட்டுள்ள 9 பேரில் 4 ஆம், 7 ஆம், 9 ஆம் சந்தேகநபர்களான சசிக்குமார், சசீந்திரன், கிரிசாந்தன் ஆகியோர் சார்பாக சரத் வல்கம என்ற சட்டத்தரணி முன்னிலையானார். பாதிக்கப்பட்ட மாணவி சார்பில் சிந்தக்க அமரசிங்க என்ற சட்டத்தரணி முன்னிலையாகியிருந்தார். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

**பெண் உதவியாளர் தேவை**

இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் கல்வி நிறுவனமொன்றுக்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. 03.09.2015 வியாழக்கிழமை காலை 8 - 11 இற்கு இடையில் நேரில் வரவும்
தொடர்பு : 077 73 93 232

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ் நகரப்பகுதியில் இயங்கும்
பெண்களுக்கான தையல்
நிலையத்திற்குசாறிசட்டைகள் வெட்டித்
தைக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு : 077 649 7251

**தவறிவிட்டது**

மயில்வாகனம் கேதீஸ்வரன் ஆகிய எனது 773343896V இலக்கம் கொண்ட தே.அ.அ. இன்சூரன்ஸ், ரக்ஸ், லேர்னஸ் பேமிட், சிறுதொகை பணம் அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் ஓட்டுமடச்சந்திக்கும் சிவலிங்கப் புளியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 0778152558, 0772840516

**வேலை வாய்ப்பு**

எமது Granton Group Company க்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும் ஆர்வமும் தன்னம்பிக்கையும், கொண்ட
★ மேற்பார்வையாளர் ★ முகாமைத்துவ பயிற்சியாளர்
★ சந்தைப்படுத்துனர் ★ அலுவலக உதவியாளர்
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
30 இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
★ வயதெல்லை 18 - 35 ★ அனுபவம் அவசியம்
★ தங்குமிட வசதி இலவசம்
கொடுப்பனவுகள் நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் பெற்றுக் கொள்ளமுடியும்
இல.225, 5ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 0774458134, 0779994807, 0114986066

USAID FROM THE AMERICAN PEOPLE
"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது

தொடர்புகளுக்கு:
இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144
மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்
(59259) (13.14.15)

**வாழ்க வளமுடன்**



யாழ் மாநகரசபை சைவ சமய விவகாரக்குழுவின் 2015 ஆம் ஆண்டிற்கான "யாழ் விருது" பெறும் பேராசிரியர் க.தேவராசா
(யாழ் பல்கலைக்கழகம்)
"இன்று போல் என்றும் வாழ்க"
வாழ்த்துவோர் : சிங்கம் பாமசி
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இன்று யாழ்.மாநகரசபையின் சைவசமயவிவகாரக் குழுவின் இவ்வாண்டிற்கான "யாழ் விருது" பெறும்
பேராசிரியர்
க. தேவராஜா (JP)
(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம், போசகர் - இணுவில் பொது நூலகம், திருநெறிய தமிழ்மறைக்கழகம்)
அவர்கள் பல சிறப்புக்களைப் பெற்று சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.
விநாயக அடியார்கள்
இணுவில் பொது நூலகத்தினர்.
திருநெறிய தமிழ் மறைக்கழகத்தினர்.
இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச

முன்வருமாறு இலங்கையின் புதிய அரசின் தலைவர்களை அந்தத் தீர்மானம் கேட்டுக்கொண்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் 34ஆவது அமர்வு நேற்றுக் காலை ஆரம்பமானது. இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சர்வதேச சமூகத் திடம் கோரிக்கை முன்வைக்கும் பிரேரணையை முன்மொழிந்தார். அதற்கு முன்னதாக, அவர் தனது உரையில், இலங்கையில் போரின் இறுதி நாள்களில் நடந்த குற்றங்கள் தொடர்பில் ஏற்கனவே பூர்வாங்க விசாரணை இடம்பெற்று முடிந்து அதன் அறிக்கை வெளி-வரவுள்ளது. அந்த அறிக்கை சம்பந்தமாக எடுக்க வேண்டியவைகள் என்ன என்பதிலேயே மயக்கமான நிலைமை இருக்கின்றது.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
ஐ.நா. அறிக்கை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும். அதனை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியுடன்தான் அனுப்பலாம். ஆனால் ரஷ்யா – சீனா போன்றவை தமது ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பாவித்து அதனைத் தடுத்துவிடுமோ என்ற பயம் உள்ளது. எனவே இந்த விடயத்தில் எப்படி? எவ்வாறு? யார் ? என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றது.
இலங்கை அரசிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டால் நீதி கிடைக்காது. இதற்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.
இதன்பின்னர் அவர் பிரேரணையைச் சமர்ப்பித்தார். இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையாகக் கருதப்படத்தக்கது என வட மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அந்தப் பிரேரணை சுட்டிக் காட்டியது. அதற்கூடாக இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அந்தப் பிரேரணை சுட்டிக்காட்டுகிறது.
மேலும், இலங்கை அரசின் படைகள் மற்றும் அதன் ஏனைய முகவர்களும் தமிழ் மக்கள் மீது, சர்வதேச குற்றங்கள் – மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் – சித்திரவதைகள் – வன்புணர்வுகள் – பலாத்காரமாக காணாமற்போகச் செய்யப்படுதல் – காணி அபகரிப்பு போன்றனவற்றை நடத்தியுள்ள நிலையில் அவற்றுக்குப் பொறுப்பானவர்களே அது குறித்து விசாரணை நடத்துவது நீதியைப் பரிகசிப்பது போன்று உள்ளதாகவும் பிரேரணை குறிப்பிடுகிறது. தனது வழக்கில் தானே நீதிபதியாக இருக்கக் கூடாது என்ற பிரபலமான நீதி வாசகத்தையும் பிரேரணை எடுத்துக் காட்டியிருக்கிறது.
சர்வதேசக் குற்றங்களை விசாரிக்கும் சட்டப் பரிணாமம் இலங்கைச் சட்டத்தில் இல்லை என்பதையும் பிரேரணை சுட்டிக்காட்டுகிறது. புதிதாக இலங்கை அரசு சட்டத்தை உருவாக்கினால்கூட, சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்பாக நடந்தவைகள் குறித்து விசாரணை நடத்த முடியாது என்பதும், சட்டம் இல்லையேல் குற்றமும் இல்லை என்கிற நடைமுறையையும் பிரேரணை எடுத்துக்கூறுகிறது.
சர்வதேச ஒப்பந்தங்கள் – சட்டங்களின் கீழ் சர்வதேசக் குற்றங்களாகக் கருதப்படுபவை இலங்கைச் சட்டங்களின் கீழ் அப்படிக் கருதப்படக் கூடியவை அல்ல என்பதால், சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணை ஒன்றை நடத்துவது நம்பகத்தன்மை வாய்ந்தது அல்ல என்றும் பிரேரணை கூறுகின்றது.
நீதியையும் – சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அரசுக்கு இருக்கக் கூடிய அரசியல் விருப்பமும் அரசியல் கலாசாரமும் தோல்வி கண்டுள்ளது என்பதுவும் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கு உதாரணமாகக் குற்றவாளிகளைத் தப்பிக்கவிடும் போக்கே இலங்கையின் புதிய கலாசாரமாக வளர்ந்துள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் சிறுபான்மையினர் தொடர்பான விடயங்களில் நீதி நிலைநாட்டுவதில் பாரபட்சம் நிகழ்ந்துள்ளதை இலங்கையின் உள்ளே உள்ளவர்களும் சர்வதேச அமைப்பினரும் ஏற்கனவே தெளிவாக எடுத்து விளக்கியுள்ளனர் என்று உதாரணங்களுடன் கூறும் பிரேரணை இவற்றின் காரணமாகவே உள்ளப் பொறிமுறை ஒன்றின் மீது நம்பிக்கையில்லை என்றும் குறிப்பிடுகிறது. இதன் காரணமாகவே சர்வதேச பொறிமுறையைக் கோருவதாக தனது பிரேரணையில் தெரிவித்துள் ளார்.
இந்தப் பிரேரணையை ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வழிமொழிந்தார். இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரம் தொடர்பில் அப்போது சட்டமாஅதிபர், பொலிஸ்மா அதிபர், நீதியரசர்களாக தமிழர்கள் இருந்தபோதே அது தொடர்பாக எவரும் தண்டிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் இலங்கையின் உள்ளகப் பொறிமுறையூடாக எப்படி நீதி வரும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.
தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இந்தப் பிரேரணை தொடர்பில் முன் அறிவித்தல் தரப்படவில்லை. எனவே கால அவகாசம் தந்த பின்னர் விவாதிக்கலாம் என்றார். இதனால் தேநீர் இடைவேளையின் பின்னர் பிரேரணை மீள எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இந்தப் பிரேரணையை தான் சார்ந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சி முழுமையாக ஆதரிப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால் தாங்கள் மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி இருப்பதன் காரணமாக, அந்தக் கட்சியின் கருத்தை அறியாமல் கருத்துச் சொல்ல முடியாது என்றார். அதேநேரம் பிரேரணையை எதிர்க்கவில்லை என்றும் தெரிவித்தார்.
இறுதியில் குறித்த பிரேரணை எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக, அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். (உ–5)

## சகல இனங்களும்

குரல் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டுமா அல்லது திருத்தங்களுக்கு உட்படுத்தப்படவேண்டுமா என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
8ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானபோது விசேட உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.
அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–
இலங்கை நாடாளுமன்றில் ஒரு பிரதான கட்சி 32 வருடங்களாகவும் மற்றொரு பிரதான கட்சி 31 வருடங்களாகவும் ஆட்சி செய்து வந்த நிலையில், இன்று (நேற்று) கூடியுள்ள புதிய நாடாளுமன்றம் இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.
போர்க் காலத்தில் தேசிய அரசின் தேவை காணப்பட்டபோதும், ஆளும் கட்சி எதிர்க்கட்சி அரசியலே முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஜனவரி 8 இல் நான் பதவியேற்ற பின்னர் சமரச தேசிய அரசு உருவாவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது.
இதுவரை இலங்கையர்கள் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணையும் விதமான அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க முடியாது போனது. புதிய ஆட்சியில் விருப்பு வாக்கு முறை இல்லாத தேர்தல் திருத்த சட்டம் கொண்டுவரப்படும். அதற்கான அடிப்படைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் போன்றவை ஒன்றிணைந்து இதனை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.
இலங்கை போன்று போரினால் பாதிப்புக்களைச் சந்தித்த பல நாடுகள் பொருளாதார ரீதியில் விரைவாக முன்னேற்றம் கண்டன. இலங்கையில் அவ்வாறானதொரு முன்னேற்றம் ஏற்படாமைக்கு இரண்டு கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை காணப்பட்டது. எனவேதான் சமரச தேசிய அரசு என்ற புதிய திட்டத்தை நாம் முனனெடுத்துள்ளோம்.
புதிய நாடாளுமன்றில் உருவாக்கப்படும் சமரச அரசின் ஒழுங்குப் பத்திரத் தயாரிப்பின்போது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்ட, மக்களின் அங்கீகாரம் கிடைத்த மைத்திரி ஆட்சி – நிலையான நாடு என்ற தொனிப்பொருள் அடிப்படையாக உள்ளது.
அத்துடன் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ள விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இலங்கையை அபிவிருத்தி செய்யும் போது, இயற்கை மீது கூடிய கவனம் செலுத்தப்படும். இயற்கைக்கு எதிரான அபிவிருத்திகளை முன்னெடுத்த உலக நாடுகள் இன்று எதிர்நோக்கியுள்ள விளைவுகளை நம்மால் காணக் கூடியதாக உள்ளது.
அவ்வாறான நிலையை தவிர்த்து, இயற்கையைப் பாதுகாத்துக் கொண்டு இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். நாம் உலக மயமாதலின் கீழ் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரம் மேலும் பலப் படுத்தப் படும். அரச சொத்துக்களை அபகரித்த நபர்களுக்குப் பாரபட்சமின்றி தண்டனைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நான் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.
உலகின் அனைத்து நாடுகளும் நமக்கு அவசியம். அவர்களிடம் இருந்து பரிமாறிக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறை உண்டு. அதனால் எமது வெளிவிவகாரக் கொள்கையில் வெளிப்படைத்தன்மை, நட்புறவு போன்றவை அடிப்படை அம்சங்களாக உள்ளன.
எனது அரசு இப்போதிலிருந்து ஆசிய நிலையத்தில் மத்திய நிலை வெளிவிவகாரக் கொள்கையை கடைபிடிப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தும். கடந்த காலங்களில் எமது வெளிவிவகார கொள்கை ஜெனிவா என்ற சொல்லுக்குள் முடக்கப்பட்டது.
ஜனவரி 8ஆம் திகதி நான் ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கை தொடர்பில் சர்வதேசத்தில் காணப்பட்ட அதிருப்தி நிலையைச் சாதகமாக்கிக் கொள்ள முடிகிறது. இந்த நிலையை எட்ட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கை, சமரசம், ஒத்துழைப்பு என்பன முக்கியம்.
கடந்த 7 மாதங்களுக்குள் இலங்கை சர்வதேசத்தின் நன்மதிப்பை வென்றுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நாட்டின் அபிமானம் மற்றும் நற்பெயருக்கு நன்மை ஏற்படும் விதத்தில் எமது அரசு செயற்பட்டுள்ளது.
இலங்கையில் தற்பொழுது நல்லாட்சியுடன் கூடிய சமரச அரசு ஏற்பட்டுள்ளதால் வெளிநாட்டிலுள்ள நிபுணத்துவம் பெற்றவர்கள் தமது தாய் நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். அவர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும். வெளிநாடு சென்றவர்கள் நாடு திரும்புவது தொடர்பில் ஆராய எமது அரசு விசேட பிரிவொன்றை ஏற்படுத்தும்–என்றார். (த)

## வடமாகாண

யொன்றை அவதானிக்க முடிந்ததாக 'உதயன்' பத்திரிகையின் சபைச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.
முதலமைச்சரால் முன்வைக் கப்படும் பிரேரணைகள் எதிர்ப்போ விமர்சனங்களோ இன்றி ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு வந்த நிலையே இதுவரையில் இருந்தது என்று கூறும் அவர், நேற்றையதினம் முதற்றடவையாக முதலமைச்சரினால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாகவும், கட்சித் தலைமையின் ஆலோசனை இன்றி அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாது என்று முதலமைச்சருக்குக் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கிறார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சமர்ப்பித்த பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் இணைத்துக் கொள்வதற்கு முதற்றடவையாக நேற்றைய தினம் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன், மாகாணசபை அமர்வில் முதலமைச்சருக்கும் அவைத் தலைவருக்கும் இடையில் மிகக் காரசாரமான விவாதம் நடைபெற்றுள்ளது.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர், அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்தின் அறையில், சபை நடவடிக்கைகள் ஒழுங்குக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கெடுத்து தனது பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.
சர்வதேச விசாரணையைக் கோரும் குறித்த் பிரேரணையை அவைத் தலைவரிடம் கையளித்து அதனை இன்றைய (நேற்றைய) அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார்.
இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சருடன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் அவைத் தலைவரின் அறையில் உடனிருந்தனர்.
திடீரென நிகழ்ச்சி நிரலில் இதனை உள்ளடக்க முடியாது என்று அவைத் தலைவர் குறிப்பிட்டதுடன், இந்த விடயம் தொடர்பில் கட்சித் தலைமையின் கருத்து அறியப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலமைச்சர், கட்சித் தலைமையின் அனுமதியுடனேயே சமர்ப்பிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.
சபை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்த பின்னரும், அவைத் தலைவரின் அறையில் நீண்ட நேரம் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதேபோன்று உறுப்பினர்கள் ஒன்றுகூடும் அறையிலும், ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும் மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினருமான அஸ்மினுக்கும் இடையில் கடும் தொனியில் வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது என்கிறார் எமது செய்தியாளர்.
எனினும் இறுதியில் அமைச்சர்கள் மூவரும் முதலமைச்சருக்கு ஆதரவாக இருந்ததன் காரணத்தால் பிரேரணையை விவாதத்திற்கு எடுப்பதற் குத் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
சபை ஆரம்பமாவதற்கு முன்னதாக இடம்பெற்ற இந்த இழுபறியின் வேகத்தை – விளைவை – சபை அமர்வின் போதும் உணர முடிந்தது என்றும் அவர் தெரிவிக்கிறார்.
யாழ்.மாநகரசபை தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி எழுப்பிய கேள்விகள் தொடர்பில் முதலமைச்சர் பதில் வழங்கும் போது, முதலமைச்சருக்கும் அவைத் தலைவருக்கும் இடையில் காரசாரமான கருத்து மோதல்கள் இடம்பெற்றது. இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்களில் ஒரு சிலர் அவைத் தலைவருக்கும் ஆதரவாகவும், ஒரு சில உறுப்பினர்கள் முதலமைச்சருக்குச் சார்பாகவும் கருத்துக்களை வெளிப்படுத்தினர்.
வழக்கமாக வடக்கு மாகாணசபை அமர்வுகளில் முதலமைச்சின் கருத்தை அவைத் தலைவரோ, அவைத் தலைவரின் கருத்தை முதலமைச்சரோ மறுதலித்துப் பேசுவதில்லை. அத்துடன் ஒருவர் தெரிவித்த கருத்தில் இருக்கும் தவறுகளை மற்றவர் சுட்டிக்காட்டும் பொழுது இருவரும் ஏற்றுக்கொண்டு செயற்படுவதே வழமையாக இருந்து வந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் மாகாணசபைச் செய்தியாளர், நேற்று வழமைக்கு மாறான செயற்பாடாக இருந்தமையும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இதன்போது செயற்பட்ட விதத்தையும் பார்க்கும் போது இரண்டு அணிகளாக கூட்டமைப்பு செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது என்கிறார் எமது செய்தியாளர். (உ)

## பெரும்பான்மையின

இதன்போது, விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் நியமனம் தொடர்பில் ஆரம்பத்திலேயே, அவைத் தலைவர் அறிவிப்பு விடுத்தார். இந்த விடயம் தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் பேசப்பட்ட விடயங்கள் அதன் பின் னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவித்தார்.
இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு மாகாண விவசாய அமைச் சர் பொ.ஐங்கரநேசன், ஆரம்பத்தில் 361 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதாக இருந்தது. பின்னர், 192 உத்தியோகத்தர்களே கமநலசேவைகள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார். அதில் 158 பெரும்பான்மையின உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.
இந்த நிலையில் இது தொடர்பில் எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக, யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்ட 35 பெரும்பான்மையின உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட 7 பெரும்பான்மையின உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். முல்லைத்தீவில் நியமிக்கப்பட்ட 49 பெரும்பான்மையின உத்தியோகத்தரில் ஒருவர் தவிர ஏனையோர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். வவுனியாவில் நியமிக்கப்பட்ட 40 பெரும்பான்மையின உத்தியோகத்தர்களில் 8 பேர் தவிர ஏனையோர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். மன்னாரில் நியமிக்கப்பட்ட 27 பெரும்பான்மையின உத்தியோகத்தர்களில் 19 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிலையில் 8 பேர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த நிலையில் உள்ளனர்.
இவ்வாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமையினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் நியமிப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் ஐங்கரநேசன் இதன் போது குறிப்பிட்டார். (த–5)

## நாடாளுமன்றில்

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர் தயா கமகே. ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டிருந்தார் அனோமா கமகே.இவர்கள் இருவரும் கணவன் மனைவி ஆவர்.
நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் இவர்கள் அருகருகே அமர்ந்திருந்ததுடன், ஒன்றாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்றனர்.
இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில், 35 ஆண்டுகளுக்கு முன்னர் கணவனும் மனைவியும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்தனர். ஐ.தே.கவின் சார்பில் ஹரிஸ்பத்துவ மற்றும் குண்டசாலைத் தொகுதிகளின் உறுப்பினர்களாக ஆர்.பி.விஜேசிறியும், திருமதி விஜேசிறியும் நாடாளுமன்றத்தில் இவ்வாறு அங்கம் வகித்திருந்தனர்.
இதேவேளை, நேற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்றவர்களில் அண்ணன் தம்பி, தந்தை– மகன், மாமன்– மருமகன் என உறவுமுறையுடைய பலரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## எம்.பியாக

யேற்றுக் கொண்டது இதுவே முதல் முறையாகும்.
நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின. அதற்கு முன்ன தாக, காலை 9.25 மணியளவி லேயே நாடாளுமன்றத்துக்கு வந்த மகிந்த ராஜபக்ச, முன்வரிசையில் இரண்டாவது ஆசனத் தில் அமர்ந்து கொண்டார்.
முதலாவது ஆசனத்தில் நிமால் சிறிபால டி சில்வா அமர்ந்திருந் தார். இதையடுத்து மகிந்த ராஜபக்சவும், அவருக்கு அருகே சரத் அமுனுகமவும் அமர்ந்தி ருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருக்கும் சிறப்பு வசதி வாய்ப்பு

## ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

கொழும்பு, செப். 2
மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாக நியமனம் பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தமுறை பொதுத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டங்களையும் வென்றெடுத்துள்ள அரசியல் கட்சிகளுக்கு அந்த மாவட்டங்களில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர் பதவிகள் வழங்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அந்த யோசனைக்கு அமைய, ஐக்கிய தேசிய முன்னணிக்கு 11 மாவட்டங்களிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 8 மாவட்டங்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு 3 மாவட்டங்களிலும் அபிவிருத்திக் குழுக்களுக்கான தலைவர் பதவிகள் கிடைக்கின்றன. இந்தமுறை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி கொழும்பு, கம்பகா, கேகாலை, கண்டி, மாத்தளை, நுவெரலியா, பொலன்னறுவை, பதுளை, புத் தளம், திகாமடுல்ல மற்றும் திருகோணமலை ஆகிய 11 மாவட்டங்களில் வெற்றிபெற்றிருந்ததோடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய 8 மாவட்டங்களில் வெற்றி பெற்றிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களில் வெற்றி பெற்றிருந்தது. இதற்கு முன்னர் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர் பதவிகள் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-22)

# இலங்கையில் ஜனநாயக மாற்றத்துக்கு ஆஸி. ஆதரவு

கொழும்பு, செப். 2
இலங்கையில் ஜனநாயக மாற்றத்துக்கு ஆதரவளிக்கப்படும் என ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.
ஆஸ்திரேலியத் தூதுவர் ரொபின் மூடி இதனைத் தெரிவித்துள்ளார்.
மனித உரிமைகளை மேம்படுத்துதல், குற்றச்செயல்களுக்கு பொறுப்புக் கூறுதல் உள்ளிட்ட அர்த்தபூர்வமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.
லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
இரண்டு நாடுகளுக்கும் இடையில் மிக நெருங்கிய நட்பு காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர் கல்வி, சட்டவிரோத ஆள்கடத் தலைத் தடுத்தல், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் சிறந்த உறவுகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)

# தமிழ் மொழிக் கற்கைக்கு 192 பொலிஸார் இணைவு

மட்டக்களப்பு, செப். 2
இனவிவகார நல்லிணக்க அமைச்சின் அனுசரணையுடன் தேசிய அரசகரும மொழிகள் திணைக்கள ஏற்பாட்டில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் நடத்தப்படும் தமிழ் மொழி டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ள 192 சிங்கள பொலிஸார் நேற்று மட்டக்களப்பில் இணைந்து கொண்டுள்ளனர்.
மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் பயிற்சி கல்லூரியில் இந்தக் கற்கை நெறிகள் நேற்று பயிற்சி பரிசோதகர் ஐ.பி.பேரின்பராசா தலைமையில் ஆரம்பமானது. 5 மாதங்களை கொண்ட இப்பயிற்சி நெறி 11 ஆவது பயிற்சி முகாமாகும். இதற்கு முன்னர் கல்லூரியிலிருந்து 1400 சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழ் மொழி டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேற்யுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பிரதம கொரடா கயந்த; அவை முதல்வர் கிரியெல்ல

கொழும்பு, செப்.2
நாடாளுமன்றின் ஆளும் கட்சி பிரதம கொரடாவாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பின்ருமான கயந்த கருணா திலகவும் அவை முதல்வராக அக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த)

# ஒரு கோடி 10 லட்சம் கிலோ நெல் பொலனறுவையில் பெரும் சேதம்

## கிருமிகளின் தாக்கமே காரணம்

கொழும்பு, செப். 2
பொலனறுவை மாவட்டத்திலுள்ள 9 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடந்த பெரும்போகத்தில் 4ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒரு கோடி பத்து லட்சம் கிலோ வரையிலான நெல் தொகை பல்வேறுவிதமான கிருமிகளால் சேதப்படுத்தப் பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் எச்.எம்.உபுல் அழகக்கோன் தெரிவித் துள்ளார்.
கடந்த ஐந்து மாதங்கள் வரையிலான காலத்திலிருந்து 120 களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்த நெல்லைக் கிருமிகளின் தாக்கத்திலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக இதுவரை ஐந்து லட்சம் ரூபா வரையில் மேலதிகமாகச் செலவு செய்திருப்பதாகவும் அழகக்கோன் தெரிவித்தார்.
அரசு, இது தொடர்பாக விரைந்து செயற்படாதுவிடில், அந்த நெல் தொகைகளை கால்நடை உணவுகளுக்காக வழங்க வேண்டிய நிலை ஏற்படக் கூடுமெனவும் அழகக் கோன் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அந்தக் களஞ்சியங்களில் இருக்கும் நெல்லை அரிசியாக மாற்றாது விட்டால் நெல் கொள்வனவுக்கு அரசு செலவிட்ட 4,500 மில்லியன் ரூபா வீணாகிப் போய்விடக் கூடுமெனவும் அவர் கூறினார்.
இந்தமுறை சிறுபோக நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக அரசு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நிதியை ஒதுக்காமையால் கிராமப்புற விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் அழகக்கோன் குறிப்பிட்டார்.
பொலனறுவை மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தமுறை நெல் கொள்வனவுக்காக அரசு நிதி வழங்குமேயானால் 50,000 மெற்றிக் தொன் நெல்லைக் களஞ்சியப் படுத்துவதற்கு களஞ்சிய வசதிகள் இருப்பதாகவும், தேவையான பணியாளர் குழாம்களும் இருப்பதோடு, விவசாயிகளுக்குச் சிரமமின்றி பணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாவட்டம் முழுவதிலும் 50 கிராமிய வங்கிகள் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-22)

# மைத்திரி தலைமையில் இன்று சு.கவின் மாநாடு

கொழும்பு, செப். 2
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 64ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று பொலன்னறுவையில் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
இலங்கையிலுள்ள இரு பிரதான கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1951ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# தலைக் கவசத் தடை நீடிப்பு

கொழும்பு, செப்.2
மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் முகத்தை முற்றாக மறைக்கும் வகையில் முழுமுக தலைக் கவசம் அணிவதற்கு பொலிஸார் விதித்துள்ள தடைக்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத் தரவு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (த)

# காட்டு யானைகளுக்கும் பரவுகின்றது காச நோய்

கொழும்பு, செப் 2
பழக்கப்பட்ட பெண் யானைகள், ஆண் யானைகளைப் போன்று காட்டு யானைகளுக்கும் காசநோய் பரவி வரும் அபாயம் அதிகரித்து வருவதாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கால்நடை வைத்தியபீட மற்றும் கால்நடை வைத்தியசாலைகளின் சிரேஷ்ட விரிவுரையாளரான வைத்தியர் அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.
கண்டி எசலபெரஹராவில் பங்கேற்கும் பெண் யானைகள், கொம்பன் யானைகளின் சுகாதார நிலைப்பாட்டைப் பரிசீலிப்பதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை வைத்திய பீடத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் யானைகளின் சுகாதாரத்தைப் பேணும் சிகிச்சை மையத்தில் வைத்தே அசோக தங்கொல்ல இவ்வாறு தெரிவித்திருந்தார்.
இந்தச் சிகிச்சை வழங்கல் மையத்தின் மூலமாக கண்டி எசல பெரஹராவில் பங்கேற்கும் யானைகள் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் நோய்கள் இனங்காணப்படுவதோடு, நீண்டகால மற்றும் குறுகியகாலச் சிகிச்சைகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இதற்கமைய இந்தச் சிகிச்சை மையத்தில் கண்டி எசல பெரஹராவில் பங்கேற்கும் 70க்கும் மேற்பட்ட யானைகளின் சுகாதாரம் குறித்துப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.
யானைகளுக்குக் காசநோய் பரவுவதைத் தடுப்புது போன்றே யானைகளைப் பராமரிப்போரின் சுகாதார நிலைப்பாட்டைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாகவும் விசேட நடைமுறைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை நியமியுங்கள்

## கல்முனை மாநகரசபைக் கூட்டத்தில் வலியுறுத்து

அம்பாறை,செப். 2
ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக் காது, ஜனநாயகத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நியமிக்கப்பட வேண்டும்.
இவ்வாறு, கல்முனை மாநகர சபையின் பதில் முதல்வரும் , முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவருமான ஏ.எல். அப்துல் மஜீத் வலியுறுத்தினார்.
கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த திங்கள் பிற்பகல் நடைபெற்றபோது, கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் வெளிநாடு சென்றிருப்பதால், பிரதி முதல்வர் அப்துல் மஜீத் பதில் முதல்வர் பொறுப்பேற்று, அவரது தலைமையிலேயே இந்த மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது.
மாநகரசபை சபாமண்டபத்தில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், பதில் முதல்வர் அப்துல்மஜீத், முக்கிய விடயங்கள் சில குறித்துக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டு உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் தொடர்பில் தற்போது பலதரப்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த விவகாரத்தில் ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கப்படாது. நீதி நியாயம் வழங்கப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்.
கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசில் இணைவதால் ஜனநாயக மரபுப்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டு மெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.
16 ஆசனங்களைக் கொண்ட மூன்றாவது பலம் பொருந்திய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதான எதிர்க்கட்சியாகவும், அதன் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராகவும் அங்கீகரிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
இன்றைய அரசியல் சூழலில் இது நியாயபூர்வமானதும், ஜனநாயக ரீதியான கோரிக்கையுமாகும். நல்லாட்சியை முன்னெடுக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்த விடயத்தில் ஜனநாயகம் நிலை பெற ஆவன செய்யவேண்டும். குறிப்பாக ஜனநாயக அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்க ஆவன செய்யப்படுவதே சிறப்பாகும்.
மேலும் கடந்த ஓகஸ்ட் 9ஆம் திகதி கல்முனையில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போது சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி சபை ஸ்தாபிக்கப்படுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.
சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை கடந்த 25 வருடகாலமாக மக்களால் முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கையாகும்.
எனவே பிரதமர் அளித்த வாக்குறுதியின்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்கு முதல் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றத்தைப் பிரகடனம் செய்துதருமாறு கோருகின்றோம்.
இதேபோல் ஜனாதிபதித் தேர்தலின் போது, மட்டக்களப்பு ரயில் சேவையைப் பொத்துவில் வரை நீடிப்பதற்கு ஆவன செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். மட்டக்களப்பு தென்பகுதி மக்களின் நலன் கருதி இந்த விடயத்தில் ஜனாதிபதி ஆவன செய்வாரென்வும் எதிர்பார்க்கின்றோம் –என்றார். (த-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மர்ஸ், விண்மீன் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப். 2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் பொம்மர்ஸ் மற்றும் விண்மீன் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

***பொம்மர்ஸ் எதிர் டயமன்ஸ்***

முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரு அணிகளுக்கும் கோல் வாய்ப்புக்கள் கணிசமான அளவு கிடைத்தாலும் எந்த வாய்ப்புக்களும் கோலாக்கப்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 3ஆம் சுற்றுக்குள் நுழைந்தது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம்.



ஆட்டநாயகனாக உதயராஜ் தெரிவானார்.

***விண்மீன் எதிர் றேஞ்சர்ஸ்***

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பித்து பதின்ம நிமிடத்திலேயே றேஞ்சர்ஸ் அணியின் வியூகத்தை உடைத்து விண்மீன் வீரர் உதயதாஸ் தனது கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் முதல்பாதி 1:0 என்ற நிலையில் முடிந்தது. இரண்டாம் பாதியின் 8ஆவது 14ஆவது 17ஆவது நிமிடங்களில் விண்மீனின் கன்மெரிசியஸ் தொடர்ச்சியாக 3 கோல்களை அடித்து மைதானத்தை ஆச்சரியப்படுத்தினார். மீண்டும் உதயதாஸ் ஒரு கோலை அடிக்க விண்மீனின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியது. ஆட்டத்தின் இறுதியில் றேஞ்சர்ஸ் அணியின் மாதுஜன் ஒருகோலை அடித்து ஆறுதல் கொடுக்க 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது விண்மீன். மூன்று கோல் களைப் விளாசிய கன்மெரிசியஸ் ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்டார். (ம-108)

## சென்.ஜேம்ஸை வீழ்த்தியது யூனியன்

யாழ்ப்பாணம், செப். 2
அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ராட்வன்ஸ்கா அடுத்த சுற்றுக்குள்

சர்வதேச தரம்வாய்ந்த ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டத்தில் போலந்து வீராங்கனை ராட்வன்ஸ்கா வெற்றி பெற்றார்.
தரப்படுத்தலில் 15ஆவது இடத்தில் இருக்கும் அக்னிஸ்கா ராட் வன்ஸ்கா 6:2, 6:3 என்ற நேர்செட்டில் செக் குடியரசின் காதெரினா சினிகோவாவை தோற்கடித்து 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். மற்ற ஆட்டங்களில் மரியானா மரினோ (கொலம்பியா), ஜெசிகா பெகுலா (அமெரிக்கா), அனெட் கொடாவெய்ட் (எஸ்டோனியா), மகரோவா (ரஷ்யா), வோனாஸ்கி (செர்பியா) ஆகியோர் வெற்றி பெற்றனர். (ம)

## மத்தியின் உதைபந்தாட்டத் தொடரின் முடிவுகள்





யாழ்ப்பாணம், செப். 2
யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

***யாழ்.மத்தி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்***

லீக் முறையிலான இந்தத் தொடரில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

***மானிப்பாய் இந்து எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்***

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

***சென்.பற்றிக்ஸ் எதிர் ஸ்கந்தவரோதயா***

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

***யாழ்.மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்து***

நான்காவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

***சென்.ஹென்றிஸ் எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி***

ஐந்தாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.ஹென்றிஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

***சென்.ஹென்றிஸ் எதிர் சென்.பற்றிக்ஸ்***

ஆறாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது. (23)

## தேசியமட்ட குத்துச்சண்டை
### தமிழ்மாணவர்கள் இருவருக்கு பதக்கம்



யாழ்ப்பாணம், செப். 2
குத்துச்சண்டை சங்கத்தினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட குத்துச்சண்டைத் தொடரில் யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய இரு மாணவர்கள் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.
15வயது ஆண்களில் 66-70 கிலோ எடைப்பிரிவில் களமிறங்கிய அ.டெனிசன் (வெள்ளிப்பதக்கம்) 80கிலோ எடைப்பிரிவில் களமிறங்கிய கு.டிலக்சன் (வெண்கலப் பதக்கம்) ஆகிய மாணவர்களே இவ்வாறு பதக்கங்களைக் கைப் பற்றியவர்களாவார்கள். (ம)

## யங்ஸ்ரார் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 2
வவுனியா லீக்கின் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் பண்டாரவன்னியன் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானதில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸரார் அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஸ்ரார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-422)

## இன்றைய மோதல்கள்

***பண்டாரவன்னியன் கிண்ணத்தொடர்***

யாழ்ப்பாணம், செப். 2
வவுனியா லீக்கின் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் பண்டாரவன்னியன் வெற்றிக்கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது. (ம-23-422)

***உடற்கல்வி ஆசிரியர் சங்கத்தொடர்***

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5மணிக்கு இடம்பெற்ற ஆட் டத்தில் வதிரி டமன்ஸ் அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது.

***ஏ.எல். வி.கழகத் தொடர்***

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதவுள்ளது. (ம-23)

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் பிற்பகல் 3மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் கல்லூரி மோதவுள்ளது.
மாலை 4மணிக்கு இடம் பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியைஎதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மீண்டும் பலத்த அடி
# இந்தியாவிடமும் வீழ்ந்தது

இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 117 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்தி தொடரை 2–1 என்ற கணக்கில் கைப்பற்றியது இந்தியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை களத்தடுப்பைத் தீர்மானிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல இலக்குகளையும் இழந்து 312 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 4 இலக்குகளையும் கேரத் 3 இலக்குகளையும் பிரதீப், மத்தியூஸ் கௌசால் மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 201 ஓட்டங்களை பெற்றது. பந்துவீச்சில் இந்தியா சார்பாக சர்மா 5 இலக்குகளையும் பின்னி, மிர்சா இருவரும் தலா 2 இலக்குகளையும் யாதேவ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

111 ஓட்டங்களுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஆரம்பத்தில் சரிவு கண்டாலும் பின்வரிசை வீரர்களின் நிதான ஆட்டத்தால் 274 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத், பிரதீப் தலா 4 இலக்குகளையும் கேரத் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

386 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை நான்காம் நாள் முடிவில் 67–3 என்ற நிலையில் இருந்தது. மத்தியூஸ் 22 ஓட்டங்களுடனும் சில்வா 24 ஓட்டங்களுடனும் ஐந்தாவது நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கினர். நாள் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே சில்வாவின் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. 12 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் திரிமன்னே. தற்பொழுது இலங்கை 107–5. மத்தியூஸ் தொடர்ந்தும் நிலைத்து நின்றார். உதவிக்கரம் நீட்டினார் குசல் பெரேரா. இணைப்பாட்டம் பலம்பெற்றது. ஆறாவது இலக்கை அவ்வளவு எளிதில் இந்திய வீரர்களால் வீழ்த்திவிட முடியவில்லை. இணைப்பாட்டம் நூறு ஓட்டங்களை எட்டியது. அரைச்சதம் கடந்தார் குசல். சதத்தை நோக்கி மத்தியூஸ். தொடர்ந்தும் நிலைத்து நின்று சதம்கடந்தார் மத்தியூஸ். அணியின் ஓட்ட எண்ணிக்கை 242ஆக இருந்த பொழுது 70 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கினார் பெரேரா. மத்தியூஸை வீழ்த்தினார் சர்மா. மீண்டும் சர்மாவின் ஆக்ரோசம் அரங்கேறியது. பின்வரிசை வீரர்கள் நிலைக்கவில்லை. முடிவில் இலங்கை 268 ஓட்டங்களில் சுருண்டு 117 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் இந்தியா சார்பாக அஸ்வின் 4 இலக்குகளையும் சர்மா 3 இலக்குகளையும் யாதேவ் 2 இலக்குகளையும் மிர்சா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக புஜாராவும் தொடராட்ட நாயகனாக அஸ்வினும் தெரிவானார்கள். (ம)



## அபராதம் விதித்தது ஐ.சி.சி.

இலங்கை – இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காவது நாளின் பொழுது கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இசாந் சர்மா, பிரசாத், சந்திமல், திரிமன்னே நால்வருக்கும் அபராதம் விதித்துள்ளது ஐ.சி.சி.

சர்மா துடுப்பெடுத்தாடும்பொழுது பிரசாத் தொடர்ச்சியாக நான்கு பவுன்சர்ககளை வீசினார். ஐந்தாவது பந்தை துடுப்பில் எடுத்து ஒரு ஓட்டத்தை நிறைவுசெய்தார் சர்மா. பின்னர் பிரசாத்தை நோக்கி இன்னமும் பவுன்சர் வீசுமாறு வெறுப்பேற்றும் விதமாக சைகை மூலம் தெரிவித்தார். பதிலுக்கு பிரசாத்தும் வாக்குவாதத்தில் ஈடுபட சந்திமலும் திரிமன்னேயும் இடையிட்டு பிரசாத்துக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். இத்தனை சம்பவங்களையும் ஒளிப்பதிவாக பார்வையிட்ட ஐ.சி.சி. நால்வருக்கும் அபராதம் விதித்துள்ளது. (ம)



## சச்சினே எனது முன்மாதிரி -டோனி

சச்சின்தான் தனது முன்மாதிரி என்று தெரிவித்துள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.

ஒவ்வொரு வீரரும் தமது முன்மாதிரியான வீரர்களைத் தெரிவிப்பது இயல்பு. ஆனால் இந்திய அணித்தலைவர் டோனி தமது முன்மாதிரியான வீரர் யார்? என்று இதுவரை தெரிவித்ததில்லை. தற்பொழுது அமெரிக்கா சென்றுள்ள டோனி அங்கு புலம்பெயர் இந்தியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.


குறித்த நிகழ்வில் டோனி மேலும் தெரிவித்ததாவது சச்சின்தான் எனது முன்மாதிரியான வீரர். அவருடன் இணைந்து விளையாடிய ஆட்டங்கள் மிகவும் பெறுமதியானவை. மிகவும் அழகானவை. சச்சினின் ஆலோசனைகள் ஒவ்வொன்றும் என்னை சிறந்த தலைவராக உருவெடுக்க உதவியது. இளம் வயதில் தலைமைப் பொறுப்பை ஏற்றதும் சச்சின் போன்றவர்களுக்கு எவ்வாறு தலைவராக இருப்பது என்று சிறிது தயங்கினேன். ஆனால் சச்சின் எனது தயக்கத்தை போக்கினார். அவர் புரிந்துணர்வுள்ள ஒரு மனிதர் என்றார். சச்சின் தனது முன்மாதிரி என்று யுவராஜ் ஏற்கனவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




## ரி-20 ஆட்டத்திலும் ஆஸியை வீழ்த்தியது இங்கிலாந்து

இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ரி–20 ஆட்டத்தில் 5 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவை திரிலாக வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானிக்க இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் ஹேல்ஸ். ரி–20 ஆட்டத்துக்கான அடையாளமே இங்கிலாந்தின் ஆரம்பவீரர்களிடம் இல்லை. அணியின் ஓட்டம் 18ஆக இருந்த பொழுது ஆரம்பவீரர்கள் இருவருமே பவிலியன் திரும்பிவிட்டனர். தற்பொழுது களத்தில் மொயின் அலியுடன் மோர்கன். ஆரம்பம் நிதானமாக இருந்தாலும் படிப்படியாக அதிரடி ஆரம்பித்தது. அடிக்கொருதடவை சிக்சர்கள் சீறிப்பாய்ந்தன. மொயினை விட மோர்கன் கூடுதல் அதிரடி காட்டினார். மோர்கன் அடித்த பவுண்டரிகளை விட சிக்சர்கள்தான் அதிகம். 13 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் இங்கிலாந்து 100 ஓட்டங்களை எட்டியது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். இணைப்பாட்டம் பலம்பெற இங்கிலாந்தின் ஓட்ட வேகம் கிடுகிடுவென சென்றுகொண்டிருந்தது. 74 ஓட்டங்களுடன் (39 பந்துகள்) ஆட்டமிழந்தார் மோர்கன். பின்வரிசை வீரர்கள் சற்று சொதப்பினாலும் மறுமுனையில் அதிரடி காட்டி திருப்தியளித்தார் மொயீன். முடிவில் இங்கிலாந்து 182–5.



கடினமான இலக்கென்றாலும் தற்பொழுது உள்ள ஆஸியால் நிச்சயம் சாதிக்க முடியும். களத்தில் வோர்ணருடன் வற்சன். இங்கிலாந்தின் ஆரம்பத்தைப்போல ஆஸ்திரேலியாவின் ஆரம்பத்திலும் சொதப்பலே மிச்சம். தற்பொழுது களத்தில் சிமித் மற்றும் மக்ஸ்வெல். நம்பிக்கை தரும்படியான் இணைப்பாட்டம். வழக்கம்போல சிமித் அரைச்சதம் கடந்தார். 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மக்ஸ்வெல். சிமித் நிலைத்து நின்றாலும் மறுமுனை பலவீனமானதாகவே அமைந்தது. வருவதும் போவதுமாகவே இருந்தனர். ஒருவர்கூட சிமித்துக்கு உதவுவதாக இல்லை. தனித்து நின்று போராடினார் சிமித். இருப்பினும் தோல்வியைத் தவிர்க்க இயலவில்லை. முடிவில் 5 ஓட்டங்களால் போராடித் தோற்றது ஆஸி. சிமித் 90 ஓட்டங்களை விளாசினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏமாற்றமே மிச்சம்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியமை மிகுந்த ஏமாற்றம் தருவதாக தெரிவித்துள்ளார் சர்வதேச தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள செரபோவா.

தனது விலகல் தொடர்பாக செரபோவா தெரிவித்ததாவது:- அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் கிண்ணத்தை மீண்டும் வெல்லவேண்டும் என்பதில் மிகுந்த ஆவலாக இருந்தேன். எனது உடல்நிலை அதற்கு ஒத்துழைக்கவில்லை. விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பாதியிலேயே காயமடைந்தேன். இருப்பினும் ஏதோ ஒரு நம்பிக்கையில் தொடர்ந்தும் போராடினேன். இந்த வருடத்தில் பெரும்பாலான தொடர்களின் பொ( காயும் என்னை ஆட்கொண்டிருந்தது. மொத்தத் ஏமாற்றமே மிச்சமாகியுள்ளது என்றார்.

## மெஸ்ஸி, ரொனால்டோ இருவரையும் இலகுவில் ஒப்பிட முடியாது




மெஸ்ஸி, ரொனால்டோ இருவரையும் ஒப்பிட இயலாது. இருவரும் சமனான திறமைகளைக் கொண்டவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார் கால்பந்தாட்ட ஜாம்பவான் டேவிட் பெக்காம்.

மெஸ்ஸி, ரொனால்டோ தொடர்பாக பெக்காம் தெரிவித்ததாவது:- மெஸ்ஸியையும், ரொனால்டோவையும் ஒப்பிடுவது கடந்த வருடங்களையும் விட சமீபகாலமாக அதிகரித்துள்ளது. ரசிகர்கள் மட்டுமல்லாது ஊடகங்களும் இந்தத் தவறைச் செய்கின்றன. உண்மையில் இருவரும் திறமையானவர்கள். இருவருக்கும் வெவ்வேறுபட்ட திறமைகள் உள்ளன. ஏனைய வீரர்களின் பங்களிப்பைப் பொறுத்தே அணியின் வெற்றி தோல்வி அமையும். மாட்ரிட் வெற்றிபெற்றால் ரொனால்டோ திறமையானவர் என்றோ அல்லது பார்ஸிலோனா தோல்வியடைந்தால் மெஸ்ஸி திறமையற்றவர் என்றோ ஆகாது என்றார். (ம)


**குகன் கல்வி நிறுவனம் ஆவரங்கால்.**

A/L தமிழ் - ச.கருணாகரன்
BA Hons Tam. (sp)
Dip in Edu.

A/L - 16,17, A/L - DAY
ஆரம்பம் : 02.09.2015
பி.ப 4.00

**After A/L..**
**CCTV**
துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
CCTV, Network Cabling
Copper Cabling & Wireless
100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி
*Real Equipments இனை பயிற்சி வழங்கப்படும்
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Next Batch : 4-Sep-2015
iCS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 021- 4926222, 076-7013060

**பதவிக்கான தேடல்**
சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டு வரும் எமது Innovage நிறுவனத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆரம்பமாக உள்ளதால் 6 வகையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.
* O/L, A/L உள்ளவர்கள் உடனே அழையுங்கள்
* O/L இல்லாதவர்களுக்குமான விசேட வாய்ப்புக்கள்.
* அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
077 077 1377, 076 864 3505, 077 966 0885
(62778) (15-16-16)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகளுக்கான பதிவுகள் 05.09.2015 வரைமட்டும்!
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
"உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஒரேயொரு பயிற்சிமையம்."
SAAMSON Experts in English Training 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313 077 621 4567


## மரண அறிவித்தல்

**திருமதி சறோஜினி தேவி (தேவி) பரராஜசிங்கம்**



கனகசபை வீதி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி (தேவி) பரராஜசிங்கம் நேற்று(01.09.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் நிர்மலன் (ஜேர்மனி), மைதிலி, (கௌரி-கனடா), கிரிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அனுஷியா (ஜேர்மனி), செந்தில்குமரன் (கனடா) வதனா ஆகியோரின் அன்பு மாமியாரும் , ஆரோன், ஜோனாஸ், யாதவன், யதுசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் திருவாஞ்சீஸ்வரன், இந்திராதேவி, சந்திராதேவி, நகுலேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2015) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் லோட்டன் வீதி மானிப்பாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி மானிப்பாய் தகவல்:
[illegible] குடும்பத்தினர்


**பணிநிலை வெற்றிடம்**
பதவி - கணக்குப் பதியுநர். (Accounts Assistant)
தகைமை - உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் 3C உடன் கணினி சம்பந்தமான அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
(யாழ் நகரை அண்டியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
தகுதிக்கேற்ப கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
மேற்படி பதவிக்கு தகுதியானவர்கள் கீழ் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு 10.09.2015 இற்கு முன்னர் தங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பிவைக்கவும்.
Email: jaffnadistrictjobs@gmail.com
T.P: 021 222 7050
(62778 12,15,17)

**WHAT'S Next After A/L?**
ஆங்கிலத்தின் அவசியம் புரிகிறதா?
எங்கே படிப்பது என குழப்பமா? குழப்பம் வேண்டாம்.
**SPOKEN ENGLISH**
மிக இலகுவான கற்றலை மேற்கொள்ள நுட்பமான கற்பித்தலுடன் முற்றுமுழுதான பேச்சுப்பயிற்சி.
**BASIC GRAMMAR**
வாக்கிய உருவாக்கம் முதல் கிரகித்து வாசிப்புப் பயிற்சிகளை மேற்கொள்ள
ஒரேயொரு உண்மையான இலங்கையின் முன்னணி ஆங்கில மொழிக்கல்வி நிறுவனம் (சி.18571) (13.15.16)
BCLL
BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING.
21, Palaly Rd, Jaffna. 077 132 7818, 021300 3839

**நியூ லலிதாஸ் ஜூவலறியின் மாதாந்த சீட்டிழுப்பில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் விவ**
* இமனுவல் யேசுராஜா
12/2, மத்தியூஸ் வீதி
யாழ்ப்பாணம்.
* எஸ்.யசோதா
அச்சுவேலி,தெற்கு
அச்சுவேலி
* வே. குருநாதன்
துரையன் தோட்டம்
நெல்லியடி
கரவெட்டி
மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் விற்பனைச் சிட்டையுடன் வருகை தந்து பரிசினைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நியூ லலிதாஸ் ஜூவலறி
இல.30,32 கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்
021 222 5511

**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Foreign Affairs
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka. Office : 021 222 3641 Fax No : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
SEPTEMPER BATCHES
» Dip.in Microsoft Office
» Dip.in Desktop Publishing
» Dip.in Information Technology
» Dip.in Computer Programming
Online Course
» Dip.in PC Application & Office Management
Languages
» VB.Net » PHP » C Sharp » Java
Workshops
» Internet & e-mail
» Webpage Designing & Development
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 18-09-2015
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 19-09-2015
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புதன் பொய்கை

உதயன்

02 செப்ரெம்பர் 2015 புதன்கிழமை

> மனித இனத்தைப் பற்றி மனிதன் தெரிந்து கொண்டது அவ்வளவும் இலக்கியமாக உருவெடுத்திருக்கிறது.
> — ஜார்ஜ் பின்லேசன்.



# பெண்ணே.....!

## அடிமைத்தனத்தின் விலங்கை உடைத்தெறி

செ.உமாசுதன்

அன்பான சகோதரியே....!!
அடிமைத்தனத்தின் விலங்கை உடைத்தெறி......
தடைக்கற்களே உனக்கு ஏணிப்படி....
இதுவே சமூக விடுதலைக்கான முதற்படி....
கடந்து வந்த... நடந்து வந்த பாதைகளை
எண்ணிப்பார்..
போராட்டக் கவிதைகளின் படைப்பு நீ...
எம் மண்ணின் கனதியான படைப்பு நீ..
தாய் மண் விடியலின் அம்பு(லி) நீ....
எம் உரிமைக்கான உயிர்(தியாகம்) நீ....
தமிழர் வீரத்தின் காவியப்படைப்பு நீ....
என்றென்றும், தேசியத் தலைவரின்
ஆசியுரை நீ....
இந்த மண்ணில் வரலாற்றில் எழுதப்பட்ட கவிதை நீ....
சுதந்திரப் பறவையாக நீ....!
பெண் அடிமைத்தனத்தின் விலங்கை உடைத்தெறி...!!!

**வா**ழ்க்கைப் பாதையிலே பல மேடு, பள்ளங்கள், எறியப்படுகின்ற திட்டமிட்டு உருப்பெறுகின்ற தடைக்கற்கள் எதிர்பாராமல் வாழ்க்கையில் வந்து போகின்றன. அதனால் நீங்கள் உங்கள் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டுமா...? ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் துன்பங்கள், துயரங்கள், முட்டுக்கட்டைகள், தடைகள் ஏற்படுகின்றன. ஆனால் இவை பற்றி.... அங்கலாய்த்துக் கொள்ளாமல், அலட்டிக் கொள்ளாமல் அவற்றை எமது எதிர்கால முன்னேற்றத்துக்கான பக்கபலமாக ஆக்கிக் கொண்டால் அதுவே எமக்கு வெற்றியைத் தருவதுடன் எம்பின்னே வரும் சகோதரிகளுக்கு விழிப்பூட்டுவதாகவும் அமைந்து விடும். துன்பக் கடலில் அடிக்கடி நாம் தூக்கி வீசப்படுவது துன்புறுத்தப்படுவதற்காக அல்ல. அந்தக் கடலிலே நீந்திப் பழகுவதற்கும் தெளிவான, சுதந்திரத்தின் செழிப்பான சுவாசிப்பைக் கொண்ட ஓர் கரையை நாம் சென்றடையவும் மட்டுமே என்பதை மனதிருத்திக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே, வாழ்க்கைப்பாதையில் ஏற்படக் கூடி சில தடைகளையும் அதைச் சமாளிக்கும் வழியையும் நீங்கள் சிந்திப்பதற்கு சில சந்தர்ப்பங்கள் உங்களுடன் விரிகிறது.

கமலி, அவள் துரு துருவென்ற செயற்பாடுடைய ஓர் அழகுச்சிறுமி. பாடசாலை செல்பவள். எப்போதும் எதையாவது செய்து கொண்டு சுழன்றோடித்திரியும் குறும்புக்காரி. அவளிடம் ஏதோ ஒரு கவர்ச்சி. ஒரு தனிக் குடும்பம். போரின் கொடூரப் பிடியில் சிக்குண்டு அனைத்தையும் இழந்து உறவுகள், சொந்தங்களின்றி நிர்க்கதியின் விளிம்பில் ஒரு காலை இழந்து வீட்டில் முடங்கிக் கிடக்கும் தகப்பன். குடும்பத்தின் முழுச்சுமைகளையும் தன்மீது சுமக்கும் அன்பான தாய். இத்தனை துன்பங்களைச் சுமக்கும் குடும்பத்துக்கு ஒளிதரும் கடவுள் ஒன்றுண்டு. அதுதான் கமலி. பக்கத்து வீட்டிலே தகப்பனாரின் நண்பர் குடும்பம். அவர் ஐம்பதைத் தாண்டியிருக்க மாட்டார். அவருக்கு இன்றும் திருமண ஆசை வரவில்லை என்ற தோற்றப்பாடும், செயற்பாடும் முகத்தில் காட்சி தந்தன. எல்லோருடனும் பழகுவதில் மிகவும் நல்ல சுபாவம் கொண்ட அவரிடம் எந்த விதத்திலும் குறைகாண முடியாது. அன்பாகப் பழகுவார். கமலியின் குடும்பம் அவரை மிகவும் நேசித்தது. போரின் பின்னர் பல நிறுவனங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளை நோக்கிப் படையெடுத்தன. இப்போதும் படையெடுக்கின்றன. சில நிறுவனங்கள் மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகாட்டிய போதும், பல நிறுவனங்கள் போரின் வலிகளைச் சுமந்த, எதிர்காலத்தின் விடியலை நோக்கிய பெண் தலைமைத்துவ குடும்பங்களை மையப்படுத்தியதாகத் தங்களது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இது யாவரும் அறிந்த விடயம்.

மாதம் முப்பதாயிரம் சம்பளம், அலுங்காமல் குலுங்காமல் இருந்த இடத்திலை வேலை என்கின்ற அலங்கரிப்பான அரவணைப்பான வார்த்தை ஜாலங்கள். கமலியின் அழகிய குடும்பத்தை நோக்கி ஒரு காலை இழந்த தன் கணவன், கல்வி கற்று வருகின்ற எதிர்காலம் ஒளிமயமாய் அமைய வேண்டிய சிறுமி கமலி, வீட்டின் அனைத்துப் பணிகள், கணவனின் பாரமரிப்பு வேலைகள் எனப் பெரிய பொறுப்புக்களும், துன்பங்களும் துரத்துகின்றன. துன்பங்களின் கிடுக்குப்பிடி கமலியின் தாயை வாழ்வாதாரத்தின் தேவை கருதி கட்டுப்பாடுகளின் பாதுகாப்பு எல்லைகளை மீறி பயணிக்கச் செய்கின்றது. என்ன நான் கையாலாகாதவன், வீட்டிலை முடங்கிக் கிடக்கிறன், எண்டுகுத்திக்காட்டிறியோ நீ வேலைக்கு போகப்போறாய் எண்ட திமிரோ என்ற கணவனின் இயலாமையின் நச்சரிப்பு ஒரு புறம், வேலைக்கான ஒப்பந்தங்களின் அடிப்படைகள் பல நீட்சியாகக் கையொப்பங்களை இட்டவளின் பயணம் எதிர்த்திசையில் பயணிக்கிறது. அங்கே பல துன்பங்கள் இவளைச் சூழ்ந்து ஆர்ப்பரிக்கின்றன. அவளின் விம்மலில் இருந்து புறப்படுகின்ற "என்னை முழுவதுமாக ஆடையின்றிப் பார்க்க நினைக்கும் முகங்கள் எத்தனை" என்ற வார்த்தைகள் உணர்ச்சியோடு தெறிக்கின்றன. பார்ப்பவர்கள் மனதை ஒருகணம் நெகிழவைத்து கன்னத்தில் ஓங்கி அறைகிறது.

தனிமைப்படுத்தப்படுகின்றாள் கமலி. எதிர்த்திசைப் பயணத்தால் கமலியின் தாய் இடைவெளிகளால் தூரப்படுத்தப்படுகின்றாள். கால்களின் இழப்பினால் முடக்கப்பட்ட கமலியின் தந்தை வீட்டின் ஓர் ஓரத்தில். இந்தச் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் கமலியின் அழகிய குடும்பத்தில் சிதைவுக்களை திணிக்கின்றன. சூழ்நிலைகளை சாதகமாக்கிய கமலியின் தந்தையின் நண்பர் உள்நுழைகின்றார். கமலியின் தாயின் இடத்தை இட்டு நிரப்புவது போல பாசாங்கு செய்கின்றார்.

அடிக்கடி தலையை நீட்டும் நண்பனின், வாழ்க்கையிலை நாங்கள் என்னத்தை கண்டம் என்ற வார்த்தைகளின் கூரிய ஆயுத முனையால் கமலியின் தந்தையின் மூளை மழுங்கடிக்கப்படுகிறது. போதையின் அடிமையாய் நிலத்தில் சாய்கிறார். நண்பனின் நடவடிக்கைகள் தற்போது தனிமைப்படுத்தப்பட்ட கமலியை நோக்கி நகர்கின்றன. ஆ பிள்ளை கமலி பலூன் விளையாடுறியளோ... மாமாவும் வாறன் சேர்ந்து விளையாடுவம். எங்கை பலூனைத் தாங்கோ... அன்பான வார்த்தைகளால் அவளை நெருங்க எத்தனிக்கின்றன.

நாள்கள் செல்லச் செல்ல நண்பனின் நடவடிக்கைகள் எல்லை மீறி தொடர்கிறது. கமலியை அவர் கூப்பிடுவதும் கமலி சற்று மறுப்புக் காட்டுவதும் தொடர்கிறது. தந்தையிடம் முறையிட எத்தனித்தால் அவர் போதையின் திட்டமிட்ட சதியால் சாய்ந்து கிடக்கிறார். வேலை முடிந்து வருகின்ற போது தாயிடம் முறையிட்டால் அவளிடம் இருந்து கமலிக்குக் கிடைப்பதோ மறுக்காமல் பெரியவர் பேச்சைக் கேள், அவர் ஆசையாய் விளையாடத் தானே கூப்பிடுறார் என்ற அறிவுரையும் அதட்டலுமே. கமலி ஏன் மறுப்பு காட்டுகிறாள் என்பதைத் தாய் அறிந்திருக்கவில்லை.

(B பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே.....!

*(A பக்கத் தொடர்ச்சி...)*

நாள்கள் நகர்ந்தன. கமலியின் தகப்பன் போதையில் சாய்வதும் நண்பன் எழுந்து பின்னால் சென்று பல்லைக்காட்டியபடி நிற்பதும் எட்டிக் கையில் பிடித்து இழுத்து தழுவிக் கொள்வதும் தொடர்ந்தன.

இது கமலிக்கு ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. இந்தச் செயற்பாடுகள் மற்றவர்களுக்கு வித்தியாசமாகத் தெரியாவிடினும் அவளுக்கு அவர்மீது வெறுப்பை ஊட்டிவிட்டிருந்தது. இத்தகைய பயமும், வெறுப்பும், கோபமும் அவளுக்கு இந்தத் தடைக்கற்களை தாண்டும் துணிவை ஏற்படுத்திவிட்டிருந்தது.

அடிக்கடி தொட்டுப் பழகுபவர்களிடமும் தம் மீது அதிக கரிசனை காட்டுவோரிடத்திலும் அவதானமாக இருக்கும்படி அவள் படித்த ஞாபகத்தால் அவள் உசுப்பிவிடப்பட்டிருந்தாள். சோகமயமாக உட்கார்ந்திருந்த கமலியிடம் வேலை முடிந்து வீடு வந்த தாய் என்ன நடந்ததென வினவுகிறாள். இனியும் இதைப் பொறுக்க முடியாது. அந்த மிருகத்தின் நல்ல பிள்ளைத் தனத்தை வெளிப்படுத்த வேண்டும் என மனதில் முடிவெடுத்து தாயிடம் முறையிடுகிறாள். அவள் இதை நம்புவதா...? வேண்டாமா....? என்று தடுமாறுகிறாள்.

வெளியிலை எவருக்காவது தெரிந்தால் அவர் பெரியவர். அதிலும் ஆண் எப்படியும் தப்பித்துக் கொள்வார். கமலி வளருகின்ற பெண். அவளின் எதிர்காலம் என்னவாகும்...? இது அவளுக்கு மாறாத வடுவை ஏற்படுத்திவிடுமே என மிகவும் வேதனைப்பட்டாள். கமலியை ஆசுவாசப்படுத்தி சாந்தப்படுத்துகின்றாள்.

கமலியும், தாயும் பாஞ்சாலி கூத்துப் பார்க்கப் போகின்றனர். கூத்திலே இவர்கள் இருவரும் அனுபவித்த, கடந்து வந்த துன்பியல் நிகழ்வுகளை ஞாபகமூட்டும் காட்சி வருகின்றது. அது வேறு ஒன்றுமல்ல, மகாபாரதத்திலே துரியோதனன் பாஞ்சாலியைத் துகிலுரியும் காட்சி. கமலியும் தாயும் தங்களின் நிலையையெண்ணி ஒருகணம் கலங்குகின்றனர். துன்பத்தால் வெம்புகின்றனர். துரியோதனன் தோன்றி சூதாட்டம் எனும் சதி மூலம் அடிமைகளாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர்களை யும் பாஞ்சாலியையும் நோக்கி கீழார்க்கு மார்பில் துணி எதற்கு? அணிகலன்கள் எதற்கு எனக்கூறி துச்சாதனனை அழைத்து கோதை அவள் கருங்கூந்தல் பற்றி அவள் துகிலினை களைக எனப் பணிக்கிறான். துகிலுரியப்படும் பாஞ்சாலி உரத்த குரலிலே தன் மானத்தைக் காத்தருள வேண்டி எனைக் காப்பாற்ற எவருமில்லையே இவ்வுலகில் எனப் பதறுகிறாள்.

போரின் கோரத்தால் பாதிக்கப்பட்டு கணவனின் கால்களைப் பறிகொடுத்து நிர்க்கதியில் நிற்கும் கமலியின் தாயையும் கமலியையும் ஓர் அசுரக்கூட்டம் துகிலுரியப் பருந்தாக வட்ட மிடுகிறது. அவர்கள் எங்களைக் காக்க இந்த மண்ணில் எவருமில்லையா எனக் கதறியழு கின்றனர்.

இந்த நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நெஞ்சில் சலனத்தோடு விழிமூட மறுத்து அடுத்து என்ன நிகழுமோ என விழி பிதுங்கியிருக்கின்றனரே ஒழிய கூத்தைப் பார்த்து அதில் நடந்த துகிலுரியும் சம்பவத்தை கண்டு ஒருவரும் எழுந்து சென்று உதவவில்லை. அது கூத்தென விட்டிருக்கலாம் மாறாக இந்தக் கதையின் கருவிலே தோற்றம் பெற்ற கமலிக்கும் தாய்க்கும் இடம்பெற்ற நிகழ்வைக் கண்டும் எவரும் எழுந்து சென்று அதனைத் தடுக்கவில்லை. ஒரு சிலர் மாத்திரம் எழுந்து சென்று அந்த அசுரப்பிடியில் இருந்து இருவரையும் காப்பாற்ற நினைக்கின்றனர். மறை பொருளாக இருந்து ஒரு குரல் ஒலிக்கின்றது. இது கூத்தல்ல நிஜம் என.

நிஜத்தை புரிந்து கொண்ட அனைவரும் வயது வேறுபாடின்றி எழுந்து சென்று மனம் எனும் திரையிலே ஒளிந்து கிடக்கும் தீய, கெட்ட எண்ணங்களை கொடும்பாவியாய்க் கட்டி எரித்து அந்த எண்ணங்களைத் துரத்தியடிக்க ஒன்றிணைகின்றனர்.

உண்மையிலே தமிழ் மக்களாகிய நாங்களும் ஒற்றுமையோடு ஒன்றிணைய வேண்டும். 30 வருடங்களுக்கு மேலாக இனவாதத்தின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு வந்தோம். 2009ஆம் ஆண்டு வரை கட்டுக்கோப்பாக இருந்த சமூகம் சிந்தனையாலும், திட்டமிட்ட சதிகளாலும் திசைமாற்றப்பட்டிருக்கின்றது. வந்த தடங்களின் வரலாற்றுப் படிமங்களை, தமிழர்களின் கலாசார பண்பாட்டுச் செழுமைகளை மழுங்கடிக்கும் வகையிலே போதைகளாலும், கலாசார சீரழிவுகளாலும் திசைமுகப்படுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் மிடுக்குடன் தமிழன் தலைநிமிர்ந்திட ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். சமூக மாற்றத்துக்காக சிந்திக்க தலைப்பட வேண்டும்.

சாரதாம்பாள், கிருஷாந்தி, இசைப்பிரியா, புங்குடுதீவு மாணவி வித்தியா என்று தொடர்கின்ற தமிழ்த் தாயின் அன்புக் குழந்தைகளின் சிதைவுகள் மறக்கப்படாமல், மறைக்கப்படாமல் ஒவ்வோர் தமிழ் மகளதும் மனங்களில் பதியப்பட வேண்டும். எங்களை சூழ்ந்து பரவிக் கிடக்கின்ற சதித்திட்டங்களை திட்டமிட்டு திசையறியாது தலைதெறிக்க ஓடவிட வேண்டும். தீமையின் கரங்கள் கண்டால் ஒற்றுமையாய்விரைந்து சென்று நெஞ்சுரங்கொண்டு அவற்றைத் தூர ஓட்டவேண்டும்.




மேலே கமலி என்கின்ற சிறுமியின் நடை முறை வாழ்க்கையோடு ஒன்றிப் போகின்ற கதையோட்டம் உங்கள் சிந்தனைக்கான ஒரு சந்தர்ப்பமாக உங்கள் முன்விரிந்தது. இது கூத்தல்ல, நிஜம் என்ற நாடகத்தின் கதை சொல்லல் மட்டுமல்ல. சமூக மாற்றத்துக்கான சிந்தனையின் செயலுருவமே. யாழ்ப்பாணம் செயற்திறன் அரங்க இயக்கத்தின் அனுசரணையில் அதன் பணிப்பாளர் தே.தேவானந்தால் தயாரித்து நெறிப்படுத்தப்பட்ட ஓர் நாடகத்தின் கதையோட்டமான மேடையேற்றமே. இந்த நாடகம் வடமாகாணத்தின் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வை தந்தது. தற்போது நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இடம்பெறுகின்ற நாடக திருவிழாவில் மேடையேற்றப்பட்டு வருகின்றது. இன்னும்பல நாடகங்கள் மாற்றம் தரக் காத்திருக்கின்றன. அனைவரும் சென்று பாருங்கள். சமூக மாற்றத்துக்காக இதயசுத்தியுடன் ஒன்றுபட்டு உழையுங்கள். இன்று எத்தனையோ இடங்களில் சிறுபிள்ளைகள் மீதான இத்தகைய துஷ்பிரயோகங்கள் எல்லை மீறிய அளவில் நடந்துள்ளன, நடந்து வருகின்றன. இதற்கெல்லாம் காரணம் யார் என்றால் நிச்சயமாக பெரிய வர்களும், இந்தச் சமூகமும் தான். சமீபத்தில் பெருகிவரும் இத்தகைய சம்பவங் களை பலரும் அறிந்திருக்கக்கூடும். ஒரு நாட்டின் எதிர்கால சிற்பிகள் என வர்ணிக்கப்படும் சிறார்கள் இவ்வாறு அழிவுப் பாதையில் இட்டுச்செல்லப்படக்கூடாது.

எனவே அன்பான சகோதரிகளே, சமூகமே! கமலி போன்ற சிறுமிகளின் வாழ்வில் இத்தகைய தடைகள் ஏணிப்படியாக இருக்க வேண்டுமேயன்றி தடுக்கி விழக் காரணமாக இருக்கக்கூடாது. இத்தகைய பெண்களைத் தாக்கும் மோசக்காரர்கள் இனங்காணப்பட்டு திருந்தும்படியாக செயற்படவேண்டும். இத்தகைய மனிதர்களின் முகமூடிகள் கிழிக்கப்படும் போதுதான் சமூகத்தில் பெண்களின் உயர்ச்சியும், மகிழ்ச்சியும் அமைதியும் வளர்த்தெடுக்கப்படும். தமிழீழத் தேசியத் தலைவனின் வார்த்தைகளை மனதிருத்துவோம்.

பெண் அடிமைத் தனத்தின் விலங்கை உடைத்தெறியாத எந்தவொரு நாடும், எந்தவொரு சமூகமும் முழுமையான சமூக விடுதலையைப் பெறமுடியாது.

---



ராஜ் மூவிஸ் வழங்கும் வினோதனின் மனசுக்குள் ஒரு மலைச் சாரல் என்னும் ஈழத்து முழு நீளத்திரைப் படத்தின் பாடல் வெளியீட்டு விழா, கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி ஞாயிறு மாலை 3 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விஜயசுந்தரம் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக வணிக பீடப் பீடாதிபதி தேவராஜா, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். பாடல் இறுவெட்டின் முதல் பிரதியை கிருபா லேணர்ஸ் உரிமையாளர் பெற்றுக் கொண்டார்.

இந்தத் திரைப்படம் தொடர்பில் இயக்குநர் வினோதன் கருத்துத் தெரிவிக்கையில், போருக்குப் பின் இது ஒரு பிரமாண்டமான புது முயற்சி. எமது நாட்டுக் கலைஞர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். சினிமாவும் இலாபகரமான ஒரு துறைதான் என்று எமது மக்களுக்கு உணர்த்த வேண்டும். இந்தத் திரைப் படத்தில் வேலை செய்த அனைத்துக் கலைஞர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. ஈழத்து சினிமாவுக்கும், கலைஞர்களுக்கும் சமூக அங்கீகா ரத்தை வழங்குங்கள். இந்தியத் தினரப்படங்களுடன் எமது ஈழத்து படைப்புக்களை ஒப்பிட்டுப் பேச வேண்டாம். யாழ். மண்ணுக்கு உரித்தான மண்மணம் மாறாத திரைப்படமாக இது உருவாகியுள்ளது – என்றார்.

இந்தத் திரைப்படம் தொடர்பில் இசையமைப்பாளர் சுதர்சன் கருத்து தெரிவிக்கையில், யாழில் ஒரு பிரமாண்டமான முதல் முயற்சி இது. ரசிகர்கள் ஆகிய உங்களின் அங்கீகாரம் எமக்குத் தேவை என்றார். இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினார்கள். அத்துடன் சில நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (14-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பாராட்டைப் பெற்ற
## செயல் திறன் அரங்கில் - சிறுவர் மாணவ மாணவிகளது நாடகங்கள்

நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயல் திறன் அரங்கில் 29.8.2015 திகதி முதல் 9.9.2015வரை இடம்பெறும் சிறுவர் மாணவ ,மாணவிகளது குறும் நாடக அரங்கேற்ற விழாவில், முதல் நாள் இரு நாடகங்களைப் பார்த்தேன். அவை என்னை முழுமையாக கவர்ந்திருந்தன.

முதலில், 'முகத்தில் சிரிப்பைக் காணேன்' என்ற நாடகமும் ,இரண்டாவதாக 'இன்றைய வேலையில்லாப் பட்டதாரிகள் படும் பாடு' என்ற நாடகத்தையும் பார்த்து ரசித்தேன்.

இரண்டிலும் நடித்த நடிகர்கள் இன்றைய யதார்த்த நிலையை தத்ரூபமாக, நகைச்சுவை கலந்த, சுறுசுறுப்பான தம் உணர்வு பூர்வமான நடிப்பால் வெளிக் காட்டியிருந்தார்கள்.

இங்கு நான் கவனித்த முக்கியமான விடயம், தகப்பனின் இடுப்பில் அமர்ந்திருந்த 4–5வயதுச் சிறுவனது தன்னை மறந்த சத்தமான சிரிப்பு, அவனது சிரிப்பில் மட்டும் அல்ல ,ஏனைய சிறுவர்களதும்,பெரியோர்களதும் சிரிப்பு, நாடகத்தின் வெளிப்பாட்டை பிரதிபலித்திருந்தது.

செலவுகள் குறைந்த உடை அலங்காரம்,நால்வரது பின்னனி இசை,அதில் ஒரு மாணவியின் கதைக்கேற்ற கதையுடன் தொடர்பு பட்ட பிற்குறிப்புக்கள் யாவுமே பாராட்டுதலுக்குரியவை.

இந்த வகையிலான நாடக முயற்சிகளுக்கு மக்கள் பெரும் அளவில் ஆதரவு வழங்க வேண்டும். அரங்குகள் நிரம்பி வழிய வேண்டும். நமது கலைகளை அப்போதுதான் நலியவிடாமலும் வளர்த்தும் செல்ல முடியும். யாழ் மக்களே... தொடரும் இவ் வாறான நாடகங்களை பாருங்கள். சம்பந்தபட்ட வர்களையும் பாராட்டுங்கள்.

**சோமசுந்தரம் சொக்கலிங்கம்.**

# யாத்திரீகனின் உயிரோடிருத்தல் கவிதைத் தொகுப்பு

செ.மகேஷ்





இளைய படைப்பாளிகளில் யாத்திரீகன், புதியதொரு நம்பிக்கையின் தோற்றம். அனுபவம் மிக்க படைப்புகளின் வடிவம் யாத்திரீகனின் ஆக்கக்களில் ஒளிர்கின்றன. உண்மைகளே கவிதைகளாகின்றன என்ற கருத்தின் மீது உறுதி கொண்டு பயணிக்கும் யாத்திரீகன், இராட்சத காலங்களின் தடங்கள் எனக் கூறிக் கொண்டே தனது ஆக்கங்களை முன்வைத்துள்ளார்

**மீளவும் மீளவும்
முற்றுப்பெறாத இடங்களிலிருந்தே
கவிதைகள் எழுதப்படுகின்றன
வலிபுரிந்த தாள்களிலிருந்து
சொற்கள் உதிர்ந்து
விழுகின்றன
இலக்கணம்
பிழைத்துப்போக
இலக்கியம் சேர்த்துக்
கொள்கிறார்கள்
கவிதை தனது
எல்லாப் பரிமாணங்களையும்
இழந்து போனது
நீள் மூச்சொன்று
ஆழக்கிடங்கிலிருந்து
வெளிக்கிளர்ந்தது.
மீளவும் மீளவும்
முற்றுப்பெறாத இடங்களிலிருந்தே
கவிதைகள் எழுதப்படுகின்றன.**

கவிதைகள் எழுதப்படும் ஒவ்வொரு கணமும் அந்த முற்றுப்பெறாத எதிர்பார்ப்புகளின் உண்மைகளே ஊமைக்குரல் எழுப்பித் தொடர்கின்றன. காலங்களும் கால நிகழ்வுகளும் கவிதைகளின் இலக்கணத்தைக் குலைத்து இலக்கியத்தை விதைத்துள்ளன. இன்று ஈழத்தில் விளைந்துள்ளவையெல்லாம் உண்மையில் ஓயாத முற்றுப்பெறாத வார்த்தைகளே என்கின்றார் கவிஞர் யாத்திரீகன்.

இவரது உயிரோடிருத்தல் என்ற முதலா வது கவிதைத் தொகுப்பிலே மீளத்திரும்பும் வார்த்தைகள் எனுந் தலைப்பிலான முதலாவது கவிதை இது.

பிரபலமான ஓவியர் புகழேந்தி அவர்களின் அழகிய சித்திர அட்டையைத் தாங்கி வெளிவந்துள்ள இந்தத் தொகுப்பிலே இருபத்தியிரண்டு தலைப்புகளிலே ஆக்கங்கள் அச்சாகியுள்ளன. இலக்கணம் மீறிய இலக்கியங்களாக அவை என்றும் ஒளிரும் வலிமை மிக்க மொழிச் சிறப்புடையனவாக உயர்ந் துள்ளன.

**மண்ணை அரிப்பதற்காய் பேய்களின்
பெருநதி பெருக்கெடுத்தது
அணைகட்டச் சிலர் மண்வெட்டி கொண்டு
புறப்பட்டனர்
புறப்பட்டவர்களில் சிலர் நதியின்
குளிர்மையில்
மூழ்கித் திளைப்பதில் இன்பம் கண்டனர்
சிலர் அணைகளாய் மாறி அசையாமல்
நிமிர்ந்தனர்
அணைகளை அடித்துச் செல்வதற்காய்
மீண்டும் மீண்டும் பேய்களின்
பெருநதி
ஆக்ரோசமாய் எழுந்து சூழ
முனைகையில்
அணைகள் விடவில்லை
அவை தீயொன்றின்
மூலத்திலிருந்து
புறப்பட்டனவாய்
பெரும் சுவாலை வளர்த்தன
சுவாலையின் வெம்மையால்
பேய்களின் பெருநதிச் சுவடுகள் அழிந்து
போயின.**

எங்கள் மண்ணும் அதன் மீட்பும் போரென்ற புயலுக்குள் சிக்கிக் கிடந்த காலத்தை, இந்தப் பேய்களின் பெருநதி எனும் கவிதை நினைவூட்டுகின்றது.

பள்ளி நாள்களில் இவர் தனது ஆரம்ப காலக் கவிதைகளை இமையூர் இமையாளன் என்ற புனைபெயரில் ஈழநாடு வாரமலரில் எழுதிவந்தார். இடைப்பட்ட காலத்தில் கவிதைக்கும் இவருக்குமான தொடர்புகள் அறுந்திருந்த நிலையில் வன்னியின் கள நிலை இவரைக் கவிதை எழுதத் தூண்டியது. இவருக்கு எழுத்துத் துறையில் ஊக்க மூட்டிய எழுத்தாள நண்பர்கள் பலரையும் அவர் தனது நூலின் முகவுரையில் நினைவு கூர்ந்துள்ளார்.

கவிஞர் தனது முகவரியாக இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைக் குறிப்பிட்டுள்ளார். இளைய படைப்பாளியான இவர் யாத்திரீகன் என்ற பெயரிலேயே தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார். ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன. அகதியாக்கப்பட்டாலும் வாழ்வின் மீதான நம்பிக்கையோடு இவரது பயணம் தொடர்கிறது.

உண்மைகளே கவிதைகளாகின்றன என்று நம்பும் கவிஞரின் எழுத்தாற்றல் பல உண்மைகளை வெளிக்கொணர வேண்டும். இதற் கென விளைக்கும் வார்த்தைகளில் உயிரோடிருத்தலும் இவரது யாத்திரையும் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.





## பிருந்தாவனம் சஞ்சிகையின் முதலாம் ஆண்டு நிகழ்வு

சிவராணியின் பிருந்தாவனம் சஞ்சிகையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நகர விருந்தினர் விடுதியில் கவிஞர் மாணிக்கம் ஜெகன் தலைமையில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அனுசரணையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார். வடமாகாணசபை உறுப்பினர் ம. தியாகராசா மற்றும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் சந்திரகுமார் (கண்ணன்) ஆகியோர் கலந்து கொண்டதுடன் வெளியீட்டுரையை கவிஞர் யோ. புரட்சி நிகழ்த்தினார். [illegible] மக்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பார்வை இல்லாமலே.....



இந்த உலகிலே கணம்தோறும் பலபேர் பிறக்கின்றனர், இறக்கின்றனர். ஆனால் மிகச் சிலரின் வாழ்வே ஏனையோருக்கும் இளையோருக்கும் ஒரு பாடப்புத்தகமாக அமைந்து விடுகின்றது. இந்த வகையில் சமூகத்தில் பார்வை அற்றோர் சம்பந்தமாக இருக்கும் மறையான கருத்துக்களைப் போக்குவதற்கும், பார்வையற்ற பிள்ளை ஒரு குடும்பத்தில் பிறந்து விட்டால் உலகமே இருண்டு போனது போல் நினைக்கும் பெற்றோருக்கு நம்பிக்கை ஒளி ஊட்டவும், பார்வை இல்லாமல் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கிற எம் சிறார்களுக்கு கலங்கரை விளக்கமாகவுமே தனது கண்களில் முழுப் பார்வையையுமே இழந்தும் இன்று ஒரு பட்டதாரியாக, ஒரு அரச ஊழியராக, வியாபாரத்தில் ஒரு முன்னோடியாக விளங்கும் ஆறுமுகம் பரமேஸ் வரன் தமது 50 ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் வேளையில் இந்தக் கட்டுரை வெளி யாகின்றது. இவர் திருநெல்வேலிப் பதியிலே 1965 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி பிறந்தார். பிறக்கும் போது தனது கண்களிலே ஓரளவு பார்வையைக் கொண்டிருந்த போதும் 12 ஆவது, 13 ஆவது வயதில் முழுப் பார்வையையும் இழந்தார். இவரது தமையனார் ஆ.இரவீந்திரன் பிறக்கும் போதே தமது கண்களில் பார்வையை முற்றாக இழந்தவர். பார்வையற்ற சிறுவர்களுக்காக சுன்னாகத்தில் இயங்கி வரும் வாழ்வகத்தின் தலைவர். இவர் யாழ்.மக்கள் அனைவராலும் நன்றாக அறியப்பட்டவர். இவரது வாழ்க்கை வரலாறும் எமது இளம் தலைமுறையினருக்கான சிறந்த முன்னுதாரணமே. இவரது வரலாறு ஏற்கனவே நூல் வடிவில் வெளிவந்துள்ளது. பரமேஸ்வரன் ஆரம்ப காலத்தில் பார்வை உள்ள சாதாரண மாணவர்களின் பாடசாலை யிலேயே கல்வி கற்கச் சேர்க்கப்பட்டார். தனது முழுப் பார்வையையும் இழந்த பின்னர் நவீல்ட் பாடசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவ்வாறு தந்தையாரால் நவீல்ட் பாடசாலையில் சேர்க்கப்பட்ட பரமேஸ்வரன், அங்கு பார்வையற்றோருக்கான எழுத்து முறையான பிறையிலி முறையில் (குத்தெழுத்து) தனது கல்வியை மிகச் சிறந்த முறையில் துடிப்பாகக் கற்று ஆசிரியர்களின் அன்புக்குரிய மாணவனானார். கல்வியோடு அங்கு இசைத்துறையிலும் நன்றாகத் துலங்கினார். நவீல்ட் பாடசாலையின் பல மேடைகளில் இவரின் இசை நிகழ்வுகள் இடம்பெற்றன. நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பின்பும் அங்கு கல்வி கற்ற நண்பர்களுடன் இணைந்து இசை நிகழ்வு ஒன்றை ரிக்கற் சோ (TICKET SHOW) ஆக ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்வில் பாடியவர்கள், பக்க வாத்தியக் கலைஞர்கள், அறிவிப்பாளர்கள் அனைவருமே பார்வையற்ற மாணவர்களும், நண்பர்களும் இவரது தமையனாருமேயாவர். இந்த நிகழ்வில் வசூலித்த பணத்தை இவர் பார்வையற்ற மாணவர்களுக்கான நிதியமாகத் தொடங்கி அந்தக் கால கட்டத்தில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த தன் போன்ற பார்வையற்ற சகோதரர்களுக்குக் கொடுத்து அவர்களுக்காகத் தன்னால் இயன்றதை எல்லாம் செய்தார். மேலும் இவர் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழகக் கல்வியை எதிர்நோக்கிக் காத்திருந்த வேளை கைதடி நவீல்ட் பாடசாலைக்கு வந்து தனது சகோதர மாணவர்களுக்கு பிறையிலி எழுத்து முறை, கணிதம் உட்பட தன்னால் இயன்ற பாடங்களை எல்லாம் கற்பித்து வந்தார். இன்றும் பார்வை இல்லா திருந்தும் கற்றுத் தேறி நல்ல நிலையில் உள்ள பலர் அன்று பரமேஸ்வரன் சேர் தான் இவற்றை யெல்லாம் புரியும்படி கற்பித்து எமது நல்ல நிலைக்குக் காரணமானவர் என்று கூறுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. தனக்கே பார்வை இல்லை. தனது வாழ்வே தட்டுத்தடு மாறியதாக இருந்தவேளை தானும் தளராது உறுதியுடன் நடந்து தம் போன்றவர்களையும் கரம் கொடுத்து அழைத்து வந்த கருணைச் செம்மல் ஆ. பரமேஸ்வரன் என்று கூறினால் மிகையாகாது.

இவ்வாறு நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்ற இவர் திறமையின் காரணமாகத் தனது ஏழாம் வகுப்புக் கல்வியை யாழ்ப்பாணத்தின் அதி சிறந்த கற்றோரைப் பெற்றுத் தந்த யாழ்.இந்து அன்னையின் மடியில் பெறும் வரத்தைப் பெற்றார். இந்துவில் தனது கல்வியைப் பெற்ற பரமேஸ்வரன் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தார். இந்த நிலையில் க.பொ.த. உயர் தரத்தில் கற்பதற்கு இவர் தெரிவு செய்த பாடங்கள் இந்துக் கல்லூரியின் உயர்தரத்தில் இருக்கவில்லை. ஆகையால் தனது பாடங்கள் உள்ள பாடசாலை என இவர் தேடிய போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இவர் கற்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. யூனியன் தாய் இவரைச் சீராட்டி, பாராட்டி வலுவூட்டிப் பல்கலைக்கழகம் வரை கரம் பிடித்து அழைத்து வந்த பெருமை பெற்றாள்.

பரமேஸ்வரன் யூனியன் கல்லூரியில் கற்றவேளையிலேயே போதே செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் அவர்களால் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் காசி விநாயகர் கோயிலின் அருகில் பார்வையற்ற பிள்ளைகளுக்காக இன்று வானோங்கி வாழ்வுயர நிற்கும் வாழ்வகம் 1988 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த வாழ்வகத்தின் முதல் மாணவனாக ஆ.பரமேஸ்வரனே பதியப்பட்டார். அன்று கல்வியே ஒளி கல்வியே வழி என்ற மகுட வாசகத்துடன் அன்னையவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வகம் இன்று சுன்னாகத்தின் சபாபதிப்பிள்ளை வீதியில் பரமேஸ்வரன் அவர்களது தமையனார் தலைமையில் பார்வையற்ற அனைத்து மாணவர்களுக்கும் ஒளிகொடுக்கும் இல்லமாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறாக யூனியன் கல்லூரியில் தனது உயர் கல்வியைப் பெற்று யாழ். பல்கலைக்கழகம் வந்த பரமேஸ்வரன் பல்கலைக்கழகத்திலும் கல்வியிலும், இசைத்துறையிலும் சிறப்பாகத் துலங்கினார். பல்கலைக்கழகத்தில் கற்கும்போது இசைநிகழ்வு ஒன்றுக்காக இவர் பாடிய பொன் வானில் மீனுறங்க... பாடலால் கவரப்பட்ட இவரது நண்பர்கள் இவரை பொன்வானில் புகழ் பரமேஸ்வரன் என்றழைப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறான மகிழ்ச்சிகரமான யாழ்.பல்கலைக்கழக வாழ்வு அமைந்த போதும் நாட்டுச் சூழலால் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்ததன் காரணமாக தனது பல்கலைக்கழகக் கல்வியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து தனது பட்டத்தையும் கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே பெற்றார். தற்போது வேலை செய்வதும் மட்டக்களப்பில் ஆரையம்பதி பிரதேச செயலகத்திலேயே ஆகும். இவை மட்டுமன்றி இவருக்கு ஓர் அழகான சிறந்த வாழ்க்கைத் துணையைப் பெற்றுக் கொடுத்ததும் மீன் பாடும் தேன் நாடே. ஒரு தனி நபர் எவ்வளவு தான் முயற்சியுடையவராக, கெட்டிக்காரராக இருந்தாலும் சரியான ஓர் ஒத்துழைப்புக் கிடைக்காவிடின் அவரின் முயற்சிக்கோ, கெட்டித் தனத்துக்கோ பயனிராது. அந்த வகையில் இவரது இன்று வரையான சகல வெற்றிக்கும் இவருடன் சரிபாதியாக திருமதி வினோதினி பரமேஸ்வரன் விளங்குகிறார். அத்துடன் இவர்களுக்கு நிவேதிகா, நிவேதனன் என இரு அருமைக் குழந்தைகளும் உள்ளனர். இவர்கள் முறையே தரம் 9 இலும், தரம் 4 இலும் கல்வி கற்கின்றனர். பரமேஸ்வரனின் இளமைக் காலப் பகுதியில் ஒரு பார்வை அற்றவர் கல்வி கற்று ஓர் அரச வேலையைப் பெறுவதென்பது கல்லிலே நார் உரிப்பது போன்றிருந்தது. இவ்வாறிருக்கப் பர மேஸ்வரன் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தது மட்டுமன்றி, வியா பாரத் துறையிலே தனது முழுத் திறமையையும் செலுத்தி இன்று இரு கடைகளுக் குச் சொந்தக் காரராகவும் விளங்குகின்றார். பரமேஸ்வரனின் வாழ்வுப் பயணத்தில் இருந்து நாம் அறிந்து கொள்வது ஒவ்வொருவருக்கும் வாழ்வில் பிரச்சினைகள், இடையூறுகள், கஷ்டங் கள் இருப்பது வழமை. ஆனால் இரு கண்களிலும் பார்வை அற்றிருந்தும் இவரால் மேற்கண்ட அனைத்தையும் சாதிக்க முடியும் என்றால் எம் ஒவ்வொருவராலும் சாதிக்க முடியாதென்றோ ஏனையோருக்கு எம்மால் உதவி செய்ய முடியாதென்றோ ஒன்றும் இல்லை. எனவே இவர் போன்றோரைப் பார்த்து சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் எமது வாழ்வைச் செம்மைப்படுத்தித் தமக்கும், பிறருக்கும் பயனுடையதாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

செல்வி பிறேமறஜனி கார்த்திகேசு, ஆசிரியர்
யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# இடம்பெயர்ந்த வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

கஷ்டப்பட்ட குடும்பங்களினது, குறிப்பாக, பெண்கள் தலை மைத்துவத்தில் உள்ள வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக அவர்களால் செய்யக்கூடிய தொழில்களை மேற்கொள்வதற்குத் தேவை யான உபகரணங்களை உதவியாக வழங்குவதே வாழ்வாதாரத்திட்டத்தின் அடிப்படையாகும். இதனைப் போரின் பின்னரான காலகட்டத்தில் அரசு முன்னெடுத்து வந்தது. எனினும் புலம்பெயர் தமிழர்கள் சிலரும் இடைக்கிடை இவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளனர். எனினும் வசதி படைத்த புலம்பெயர் தமிழர்கள் ஆலயங்களுக்கு ராஜ கோபுரம் அமைத்தல் போன்றவற்றுக்கு அள்ளி வழங்குவது போன்று சாதாரண வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள வறிய குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க மிகச்சொற்ப அளவிலான ஒருசிலரைத் தவிர ஏனையோர் முன்வருவதில்லை. ஈழத்தில் இடம்பெற்ற போரை மையமாகக் கொண்டு அதன்பேரில் புலம்பெயர்ந்து வந்தவர்கள் தமதும் பிள்ளைகளது,



பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கேக் வெட்டுவதற்கென பத்து அல்லது பதினைந்து பவுணில் கத்தி செய்வதும் இருபத்தியைந்து முப்பது பவுணில் தாலிக்கொடி போடுவதிலும் காட்டும் அக்கறையை போரின் வடுக்களைச் சுமந்து அன்றாடம் வாழ வழியின்றி அல்லல்படும் வசதி குறைந்த மக்களின் மீதோ; சிறுவர்கள் குழந்தைகள் மீதோ காண்பிப்பதில்லை. இப்போது எமது உறவுகள் உண்டு என்ற நிலை போய் நாம் மட்டுமே என்ற நிலையிலேயே வாழத்தலைப்பட்டுள்ளனர். இப்போது விடுமுறையில் வந்துள்ள பல புலம்பெயர்ந்த மக்கள் நகை மாளிகைபோல் நல்லூர் வீதிகளில் நடமாடி குளிர்பானம் ஐஸ்கிறீம் என்று சுவைத்து விட்டுக் ஹாயாகத் திரும்பிச் செல்வதைக் காண்கிறோம். கஷ்டப்பட்ட மக்கள் இருக்கிறார்களே. அவர்களுக்கு ஏதாவது உதவுவோம் என்ற சிந்தனை அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இதே சமயம் தாம் உழைப்பதில் ஒரு பகுதியை கஷ்டப்பட்ட மக்களின் கல்விக்காக, வாழ்வாதாரத்துக்காக உதவ வேண்டும் என்ற கொள்கையுடன் உள்ள புலம் பெயர்ந்த ஒரு சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது சற்று ஆறுதலான செய்தியாகும். இந்த வகையில் நெடுந்தீவு கிராம சபைத் தலைவியாகப் பதவி வகித்த திருமதி செல்லம்மா நாகேந்திரரின் (இவர் இலங்கையில் முதல் பெண் கிராம சபைத் தலைவியாகப் பதவி வகித் தவர்) நெருங்கிய உறவினரான செல்வரட்ணம் சுரேஷ் முக்கிய மான வராவார். இவர் நேற்று இன்றல்ல நீண்ட காலமாகவே கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டி வந்துள்ளார். வடக்கு மாகாண சபை உருவான பின்னர் அதன் உறுப்பினர்களூடாக கல்வி, விளையாட்டுக்கான உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கியுள்ளதுடன், முன்னதாக வடக்கு மாகாண அமைச்சராக உள்ள பொ.ஐங்கரநேசன் தனது அமைப்பினூடாக வழங்கிய மாணவர்களுக்கான உதவிகளிலும் இணைந்திருந்தார். அளவெட்டியில் வாழ் வாதார



உதவியாக வழங்கப்பட்ட ஆடுகளையும் இன்று கிராம அலுவலர் பிரிவு 109இல் வழங்கப்படும் ஆடுகளுக்கான நிதியுதவியையும் இவரே வழங்கியிருந்ததாகவும் கடந்த 27ஆம் திகதி வியாழக் கிழமை நல்லூர் மூத்தவிநாயகர் கோயில் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் குறிப்பிட் டார். தனது நண்பரான சுரேஷ் தேர் தலுக்கு முன்னராக இந்த உதவிகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என எதிர்பார்த்திருந்தபோதும் அந் தக் காலத்தில் நாங்கள் இந்த ஆடு களை வழங்கியிருந்தால் தேர் தலுக்காக இவர்கள் இதனை வழங் குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு கிளம்பு மாதலால், தேர்தல் முடிந்த பின்னர் இந்த ஆடுகள் உங்களிடம் கையளிக்கப்படுவதாகவும் இது அரசின் உதவியல்ல எனது நண்பரின் தனிப்பட்ட உதவி என்பதையும் எடுத்துக் கூறி பெரும் வசதி படைத்த புலம்பெயர்ந்த மக்களும் இவ்வாறான உதவிகளை கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நல்லூர் மூத்த விநாயகர் கோவில் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ம.புஸ்பமதி தலைமை வகித்தார். ஏழைகளின் பசு எனக் கூறப்படும் ஆடுகளைப் பராமரிப்பதற்கு பெரும் இடவசதியோ செலவினங்களோ தேவையில்லை. கால்நடைத் திணைக்கள வைத்திய அதிகாரி குறிப்பிட்டது போன்று எல்லா மக்களுமே சிரமங்களின்றி வளர்க்கக்கூடிய பிராணிகள் ஆடுகள். இன்று வழங்கப்பட்ட ஆடுகளை உரியமுறையில் பயன்படுத்தி வருமானத்தைக் கூட்டுவதோடு எதிர் காலத்தில் ஏனைய பகுதிகளுக்கு ஆடுகளை விநியோகிக்கக்கூடிய கிராமமாகவும் இந்தப் பகுதி அமைய வேண்டும் என்பதையும் ஆட்டுப் பால் சிறந்த மருந்து எனவும் குழந்தைகளுக்கு முக்கியமானது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள் ளனர் எனவும் பெரும் பர பரப்புக்களின்றி இந்த வாழ்வாதார உதவிகளை எமது மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் சுரேஷ் பாராட்டுக்குரியவர் எனவும் நிகழ்வில் கலந்துகொண்ட சுகாதாரக் கால்நடை வைத்திய அதிகாரி, கால்நடை அபிவிருத்தி திணைக் களப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள செயலாளர், மாகாண சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர் ஆகியோர் குறிப்பிட்டதுடன் இவற்றைப் பெற்ற பயனாளிகள் தமது வருமான உயர்வுக்கான பயன்களைப் பெறுவதற்கு அவற்றை உரிய முறையில் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியதுடன் அவற்றை விற்பனை செய்ய முடியாது எனவும் அறிவுறுத்தினார்.

நல்லூர் ஜே/109 பிரிவில் சிறு பிள்ளைகள் உள்ள பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட முப்பது குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உயர்ரக ஆடுகள் (ரூபா ஐந்து லட்சம் பெறுமதியானவை) வழங்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் உள்ள வறிய குடும்பங்களுக்கும் இதுபோன்ற உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுரேஷ் குறிப்பிட்டுள்ளார்.




## பக்தி மணம் கமழும் நல்லூரில் தெய்வீக இசை

நல்லூர் சூழல் எங்கும் பக்தி மணம் கமழும் காட்சியாகக் காணப்படுகின்றது. நல்லூர் உற்சவ காலம் அதன் சூழல் மிக அழகாக, புனிதம் நிறைந்ததாக இருக்கின்றது. திருவீதிகள் யாவும் சுகாதாரமாக, சுத்தமானதாக மிகவும் குளிர்மையாக உள்ளன. முருகன் திருவீதி உலா வலம் வரும் காட்சி மிக அழகாக, பக்தி மிகுந்ததாக, அடியார்கள் யாவரும் அமைதியாக நாதஸ்வர இசையை மெய்மறந்து கேட்பதும், பஜனைகள் பாடுவதுமாக மிகவும் கண்கொள்ளாக் காட்சியாக காண்கின்றோம்.

மஞ்சத்திருவிழா மிக அலங்காரமாகக் காட்சி தர, பக்தர்கள் பல ஆயிரம் பேர் சூழ்ந்துவர ஈழ நல் லூர் பி.ரஜீந்திரன் கோஷ்டியினரின் இனிய நாதஸ்வர இசையில் முருகன் மெல்ல மெல்ல மஞ்சத்தில் கொலு வீற்றிருந்து மின் ஒளியில் திருவீதி உலா வந்த காட்சி மிகவும் அற்புத மானது.

நல்லூர் முருகன் உற்சவகாலத்தில் இளங் கலைஞர் மன்றம் வருடா வருடம் தவறாது நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு, துர்க் காதேவி மணி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் சோ.பத்மநாதன், வி.சிவஞானசேகரம், ஆறு. திருமுருகன் ஆகியோரால் நடத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கு மிகவும் பாராட்டக் கூடியதாக அமைந்துள்ளது. இங்கு இசை விருந்து வழங்கும் கலைஞர்கள் பெரும்பாலானோர் இளம் கலைஞர்களாக உள்ளனர். இந்த இசை நிகழ்வுகள் இந்த மண்டபத்தில் 27 நாள்கள் நடைபெறுவதும் சிறப்பானது.

மஞ்சத் திருவிழாவில் துர்க்காமணி மண்டபத்தில் இசை ஆர்வலர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் ஈழநல்லூர் பிரபல இளம் கலைஞரான விநோதன் பி.எஸ்.பாலமுருகனின் கெஞ்சிராக் கச்சேரி மிகமிக இனிமையாக அமைந்தது. இன்று ஈழநாட்டிலே சிறந்த நாதஸ்வர இசைக் கலைஞராக பி.எஸ்.பாலமுருகன் மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றார்.


இந்த நிகழ்வில் வயலின் வாசித்த சு.கோபிதாஸ் மிகவும் சிறப்பாக இணைந்து வாசித்தமையும், மிருதங்கக் கலைஞர் க.கண்ணதாசனின் மிருதங்க வாத்தியமும், தவில் வாசித்த பி.எஸ். செந்தில்நாதனின் வாத்திய இசையும் மிகவும் கச்சிதமாக அமைந்து கெஞ்சிரா வாத்திய நிகழ்ச்சியைச் சிறப்படையச் செய்தன.

பாலமுருகனின் முதல் வணக்கம் எனும் பாடலுடன் அழகாக வாசிக்கத் தொடங்கி, பின்னர் வாசித்த காபி ராகத்தில் ஜெகதோ தாராணா எனும் புரந் தரதாசர் கீர்த்தனம் மிகவும் இனிமையாக இருந்தது. பற்பல சுரங்களுடன் வாசித்தமையும் சிறப்பானது. தொடர்ந்து முருகனுக்கு உகந்தது எனும் பாடலினையும், ஜேசுதாஸ் பாடிய சந் தனமும் ஜவ்வாதும்... காணக் கண்கோடி எனும் பாடலும் வெகு அற்புதமாக அமைந்தமையும் இறுதியாக குயிலே உனக்கு அனந்த கோடி எனும் பாடலை பிரமாதமாக வாசித்து திருப்புகழ் வாசித்து நிறைவு செய்தனர். மெய்மறந்து கேட்ட இரசிகர்கள் இன்னமும் வாசிக்க மாட்டார்களா என்ற நிலையில் அமர்ந்து இருந்தமை அவர்களின் வாசிப்பின் சிறப்பைக் காட்டி நின்றது.

இந்த மேடையில் இன்னமும் தினமும் பல இசை நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இரசிகர்கள், ஆர்வலர்கள் நன்கு பயன்பெற அரிய சந்தர்ப்பம்.


இ.குமாரசாமி சர்மா
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பிரசன்ன விதானகேயின் திரைப்படம் யாழ்.மஜெஸ்ரிக் திரையரங்கில்



யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் திரையிடப்படவிருக்கும் பிரசன்ன விதானகேயின் 'பிறகு' திரைப்படத்துக்கு ஆங்கில உபதலைப்புக்கள் இருக்கும் என்பது விசேட அம்சமாகும். 'பிறகு' திரைப்படம் ஆறு சர்வதேச விருதுகளைச் சுவீகரித்தது மாத்திரமன்றி, உலகளாவிய ரீதியில் 35க்கும் மேற்பட்ட, பிரசித்தி பெற்ற திரைப்பட விழாக்களில் பங்குபற்றி ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.ஆரம்பத்தில் இந்தத் திரைப்படத்துக்கு தணிக்கைக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கவில்லை.

சில காட்சிகளை அகற்றுமாறு தணிக்கைக் குழு கோரியிருந்தது. அதனை திரைப்படத்தின் நெறியாளர் பிரசன்ன விதானகே ஏற்க மறுத்திருந்தார். இப்போது புதிதாக நியமிக்கப்பட்ட தணிக்கைக்குழு எத்தகைய தணிக்கையுமின்றி படத்துக்கு அங்கீகாரம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் மஜெஸ்ரிக் தியேட்டரில் இடம்பெறவிருக்கும் ஆரம்ப விழாவில், இந்தத் திரைப்படத்தில் பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்த இந்திய நடிகை அஞ்சலிபட்டேல் உட்பட, திரைப்படத்தில் முக்கிய பங்காற்றிய சகலரும் கலந்து கொள்வார்கள்.

இதேவேளை இந்தப்படத்தின் இயக்குநரும் இணைத் தயாரிப்பாளருமான பிரசன்ன விதானகே பற்றிய சில தகவல்களைப் பார்க்கலாம். 1962 ஆம் ஆண்டு பிறந்த இவர், ஏற்கனவே ஆறு திரைப்படங்களை வெளியிட்டு உலகளவில் புகழ் பெற்றவர்.

இதேவேளை 90 நிமிடங்கள் திரையில் காண்பிக்கப்படவிருக்கும் இந்தத் திரைப் படத்தில் சியாம், பெர்னாண்டோ, அஞ்சலி பட்டேல், வசந்த மொறகொட, மகேஸ்வரி இரத்தினம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் தோன்றுகின்றனர்.

இந்தப் படத்தின் ஒளிப்பதிவை எம்.டி மகிந்தபால சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

ஹரிஸ்சந்திர வழங்கும் உளுந்து மா

ஹரிஸ்சந்திர என்ற நாமம் மிகச் சிறப்பானதாகவும் முழுமையான உணவுடன் ஒத்ததாகவும் இருப்பதன் காரணமாக, சந்தையில் இது மறுக்கப்பட முடியாத வகையில் முன்னணி வகிக்கின்றது. பல விடயங்கள் மாறி விட்டன. ஆனால், நாம் மாறவில்லை. மிகச்சிறந்த பொருட்கள் சேர்த்து அன்புடனும் கரிசனையுடனும் பார்த்துப் பார்த்து பழைய பாரம்பரிய முறையில் இவ் உளுந்து மா தயாரிக்கப்பட்டுள்ளது. ஹரிஸ்சந்திரவிடமிருந்து பெற்றுக் கொண்டதனால், அது இயற்கையும் ஊட்டச்சத்தும் மிக்க உணவு என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.




மேலதிக விபரங்களுக்கு,
இணையத்தளம்: www.harischandramills.com
www.facebook.com/harischandramills
தொ.பேசி: 011 2 685 734 / 041 2 224 701
ஈ-மெயில்: info@harischandramills.com

விலை - ரூ 130/- இலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரே நாளில் இரு இசைத்தட்டுக்கள் வெளியீடு



தென்னவன் –

யாழ்ப்பாணத் தமிழ் இசையின் மைற்கல்லாக ஆலயங்களின் சிறப்புக்களையும் அற்புதங்களையும் வெளியுலகுக்கு எடுத்தியம்பும் வகையில் ஆலயங்களில் பக்தி பாமாலை இசைத்தட்டு வெளியீடுகள் அண்மைக்காலமாக இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தின் இரு ஆலயங்களின் மகிமைகளை உலகுக்கு எடுத்தியம்பும் வகையிலான இசைத்தட்டு வெளியீடுகள் அண்மையில் அந்தந்த ஆலயங்களில் இடம்பெற்றன.

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம், சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலயம் ஆகியவற்றில் ஒரே நாளில் இவை பகல் இரவு நிகழ்வாக நடத்தப்பட்டன.

நீண்ட காலமாக தென்னிந்திய திரைப் படப் பாடகர்களால் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் தினமும் பாவனையில் உள்ளன. ரி.எம்.சௌந் தரராஜன் பாடிய

உச்சிப்பிள்ளையார் கோவில் கொண்ட திருச்சி மலையினிலே

மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்

கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாய் அம்மா

சீர்காழி; கோவிந்தராஜன் பாடிய

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான், மலை மீதிலே காணலாம்

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடிய ஆயர் பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல்: சூலமங்கலம் சகோதரிகள் பாடிய கந்த சஷ்டி கவசம் போன்றவை இன்றும் எம் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள பக்திப் பாடல்களாக உள்ளன.

எமது நாட்டுக் கலைஞர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய திரைப் படப் பாடகர்களால் பாடப்பட்ட பாடல்கள் பல எம்மத்தியில் அழியாக் காவியமாக இன்றும் காணப்படுகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த வீரமணி ஐயா அவர்களால் எழுதப்பட்டு ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பெற்ற கற்பகவல்லிநின்பொற் பதங்கள் பிடித்தேன் என்னும் பாடலும் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பெற்ற சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே என்ற பாடலும் தமிழ் மண்ணில் இன்றும் மறக்கப்படாத, இந்து ஆலயங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும் பாடல்களாக உள்ளன. பாடலை இயற்றியவரும் அவற்றைப் பாடியவர்களும் எம் மத்தியிலிருந்து மறைந்து பல வருடங்களுக்கு மேலாகியும் பாடலின் இசை வரிகள் இன்றும் எமது காதுகளில் அவர்களது ஓங்காரமிட்ட வண்ணம் உள்ளன. பாடலுக்கு வழங்கப்பட்ட இசையே அவற்றின் மேன்மைக்கு வழிவகுத்தன. அமரர் வீரமணி ஐயா தென்னிந்தியாவில் படித்த காலத்தில் பாடசாலைக்குரிய பணம் வந்து சேராததால் அருகில் உள்ள கற்பகவல்லி ஆலயத்தில் அழுதழுது பாடிய பாடலே கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் என்னும் பாடலாகும். அவர் அழுதழுது பாடிய பாடலை அந்த ஆலயத்திற்கு வருகை தந்திருந்த ரி..எம்.சௌந்தரராஜன் பாடல் வரிகளால் கவரப்பட்டு அதனைப் பெற்றுச் சென்று பாடிய பாடல் உலகெங்கிலும் ஒலித்தது. அமரர் வீரமணி ஐயாவினால் எழுதப்பட்ட பாடல் இன்றும் அந்தக் கோவிலில் உள்ள கல்லில் செதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக புத்தகத்தில் படித்த ஞாபகம். இதே போன்று சீர்காழி கோவிந்தராஜன் யாழ்ப்பாணத்திலுள்ள வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய திருவிழாவுக்கு இசை நிகழ்ச்சி நடத்த அழைத்தபோது விமானத்தில் வந்து பலாலியில் இறங்கி ஆலயத்திற்கு வரமுன்னர் இணுவிலில் உள்ள வீரமணி ஐயாவின் வீட்டுக்குச் சென்று அவரது ஆசியைப் பெற்றுவிட்டு அவரிடம் சுட்டிபுரம் கண்ணகை அம்பாளின் மகிமை பற்றிப் பாடவுள்ளேன்.அதற்கான பாடல் வரிகளை எழுதித் தரவெண்டுமெனக் கேட்டுக் கொண்டார். வரணிப் பிரதேசத்தைப் பற்றி முழுமையாகத் தெரியாத நிலையிலும் ஒருநாள் கொடிகாமத்தின் ஊடாக பருத்தித் துறைக்குச் சென்ற வேளையில் வீதியைக் கடந்து சென்ற பசு நிரைகளுக்காக சில நிமிட நேரம் வாகனத்துடன் காத்து நிற்க வேண்டியிருந்ததை ஞாபகப்படுத்தி சீர்காழி கோவிந்தராஜன் வரணிக்குப் புறப்படுவதற்கு முன்னர் எழுதி வழங்கி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பெற்ற சுட்டிபுரம் வாழும் சிவசுந்தரியே கண்ணகியே என்ற பாடல் இன்றும் ஆலயம் மட்டுமல்ல ஆலயத்தின் அடியார்கள் வீடுகளிலும் பொக்கிசமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்தக் காலத்தில் சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இசைக் கச்சேரி நடத்த தனது சொந்தக் காணியை விற்று அவரை அழைத்த வந்துள்ளார் வரணியைச் சேர்ந்த இசை ஆர்வலர் ஒருவர். அன்றைய நிகழ்வில் இசைக்கச்சேரி நிகழ்வை நடத்திய சீர்காழி கோவிந்தராஜனுக்கு ஆலய நிர்வாகத்தினர் வழங்கிய பட்டத்தை தன்னை நிகழ் வுக்கு அழைத்த இசை ஆர்வலருக்கு வழங்கி இசையின் மகத்துவத்தை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டினார் இசைப் பேரரசு. குறித்த இசை ஆர்வலருக்கு சீர்காழி கோவிந்தராஜனால் பட்டம் வழங்கப்பட்டதால் அவர் நீண்ட காலம் சீர்காழி என ஊர் மக்களால் அழைக்கப்பட்ட வரலாறு எம் மத்தியில் உள்ளது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த ரி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், மதுரை சோமு, பித்துக்குளி முருகதாஸ், சூலமங்லம் சகோதரிகள், பி.சுசீலா போன்ற பாடகர்கள் போன்று எமது நாட்டிலும் சிறந்த பாடகர்களும் பாடல்கள் புனைபவர்களும் நிறையப் பேர் இருந்த போதிலும் அவர்களின் பாடல்களை இசை வடிவமாக்கி வழங்கக் கூடிய வசதிகள் எம் மத்தியில் இல்லாததால் சிறந்த இசை ஆர்வலர்களை நாம் தவறவிட்டுள்ளோம் என்பது பெரும் வேதனையான விடயமாகும். இந்த நிலையில் இன்று இசைத் தட்டுக்கள் வெளியிடக்கூடிய வசதிகள் கிடைத்துள்ளதால் ஆலயங்களில் பக்திப் பாமாலைகள் இசைத் தட்டுக்களாக வெளி வந்த வண்ணமுள்ளன. பாடல் ஆசிரியர் பலர் இருந்த போதிலும், பொன் ஶ்ரீவாமதேவன், ஶ்ரீதர்சனன் போன்ற கர்நாடக இசை மேதைகள் இருந்த போதிலும் காலத்துக்கேற்ற வகையில் இசை வடிவங்களையே மக்கள் பெரிதும் ரசித்தனர்.இந்த வகையில் எமது நாட்டில் புரட்சிப் பாடல்களைப் பாடி எம் மத்தியில் சிறந்த பாடகர்களாக பிரபல்யமிக்கவர்களாகத் திகழ்ந்த சாந்தன், சுகுமார் போன்ற இசைக் கலைஞர்களுடன் பாடசாலை மாணவனான மதுசிகன் ஶ்ரீதர்சனன், பெண் பாடகியான மேதி போன்றோர் சிறந்த பாடகர்களாக எம்மத்தியில் திகழ்ந்து வருகின்றனர். அவர்களால் பாடப் படும் பாடல்களே ஆலயங்களின் பெருமையை எடுத்தியம்பும் இசைப் பக்திப் பாமாலைகளாக உருவாகி வருகின்றன.

அந்த வகையில் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையாரின் அற்புதங்களையும் அருட் சிறப்புக்களையும் உலகுக்கு தெரியும் வகையில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்களால் ஆக்கப்பட்ட பாடல்களுக்கு உயிரோட்டம் கொடுத்து பாமாலையாகத் தொகுத்து அதனை இசைத் தட்டாக வெளிக்கொணர சுவிஸ் நாட்டில் வாழும் வெள்ளைமாவடியானின் அடியார்களில் ஒருவரான சின்னத்துரை சிறிதரன் சிந்து ஜன் அவர்களின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட மாவடி நாதம்

என்னும் இசைத்தட்டும் புலம் பெயர் நாடுகளில் உள்ள சங்கத்தானை மீனாட்சி அம்பாளின் அடியார்களின் நிதிப் பங்களிப்படன் உருவாக்கப்பட்ட ஈழவாரியம்பதியுறை தாயே என்னும் இசைத்தட்டுமே கடந்த 28 ஆம் திகதி ( 28.08.2015) வெளியடப்பட்டன. நிதி உதவி மட்டும் கிடைத்தால் போதாது அதனைச் செயற்படுத்தி இசை வடிவில் பாடலாக்கி அதனை இசைத்தட்டாக கொண்டு வருவதில் அந்த ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் மாவடி நாதம் பக்திப் பாமாலை இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஶ்ரீஸ்கந்த மூர்த்தியும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் கா.சண்முகதாசனும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் ஆலயத்தின் தேர்த் திருவிழா என்பதால் நூற்றுக் கணக்கான அடியார்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதேபோன்று வரலட்சுமி விரத தினமான அன்று சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் ஈழவாரியம் பதியுறை தாயே என்ற தலைப்பிலான இசைத் தட்டு வெளியீட்டு நிகழ்வுக்கு சாவகச் சேரி டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலனும் பெருந்தொகையான அடியார்களும் கலந்து கொண்டனர். ஆசியுரையை ஆலயத்தின் பிரதம குரு கலாநிதி பண்டிதர் சிவஶ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார்.

இரு பக்திப் பாமாலை இசைத்தட்டுகளின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செஞ்சொற் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்தினார்.

மாவடியானின் அற்புதங்களையும் அருட் சிறப்புகளையும் எழுத்துவடிவில் உருவாக்கியவர்களும் பாடியவர்களும் மனமுருகி தம்மை மறந்து வடித்துள்ளமையை பாடல்களின் ஒவ் வொரு வரியும் எமக்கு தெட்டத் தெளிவாக புரிய வைக்கிறது. ஒவ்வொரு வரியிலும் காணப்படும் உள்ளடக்கம் எம்மையெல்லாம் மெய் சிலிர்க்க வைத்துள்ளது. வெள்ளை மாவடியானின் அடியார்களாயினும் மீனாட்சிஅம்பாள் அடியார்களாயினும் ஒவ்வொரு அடியார்களின் வீடுகளிலும்அவசியம் இருக்க வேண்டிய ஒரு பொக்கிசமாக இந்தப் பக்திப் பாமாலை இசைத் தட்டுக்கள் காணப்படுகின்றன. புகழ்ச்சிக்காக இதனைச் சொல்லவில்லை. ஏனெனில் ஒரு காலத்தில் எமது இல்லங்களிலும் ஆலயங்களிலும் ஒலித்த தென்னிந்திய திரைப்படப் பாடகர்களின் பாடல்களுக்குப் பதிலாக இந்தப் பாமாலை தினமும் ஒலிக்கும்போது அந்தந்த தெய்வங்களின் மகிமைகள் எமக்குத் தெரிவதுடன் வெளிநாடுகளுக்கும் பரவக் கூடியதாக இருக்குமென நம்புகிறேன். இந்த இசைத்தட்டுக்கள் தினமும் ஒலிக்கும் போது எமது இளஞ் சந்ததியினருக்கு இந்தத் தெய்வங்களின் அற்புதங்களும் அருட் சிறப்புகளும் தெரியவருவதுடன் அவர்கள் நாவிலும் மனதிலும் தெய்வங்களின் அருட்சிறப்புகள் பதிந்து விடும். இந்தியாவில் உள்ள ஆலயங்களின் சிறப்புகள் எமது நாட்டில் நிலைத்து நிற்பது போல எமது பிரதேச தெய்வங்களின் அற்புதங்களும் அருட் சிறப்புகளும் அண்மைக்காலமாக ஆலயங்களில் வெளிக்கொணரப்படும் இசைத்தட்டுக்களால் உலகெங்கும் பரவும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக இசையே ஒவ்வொரு பாடலையும் மனதில் பதிய வைக்கின்றது. அவ்வாறான இசை வடிவங்களைப் புகுத்தி எமது நாட்டுக் கலைஞர்களின் சிற்பபையும் உலகறியச் செய்யவேண்டுமென்பது பலரின் விருப்பமாகும்.



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளை யார், [illegible] களில் பக்திப் பாமாலை இறுவட்டு மற்றும் இசைத் தட்டு வெளியீடுகள் இடம்பெற்றபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடற்கலைகளின் வகைகளும் அதன் சிறப்பு அம்சங்களும்

தொகுப்பு: சேபனா.

(சென்றவாரத் தொடர்ச்சி..........)

கதகளி நடனத்தில் முகபாவமும், கையசைவுகளும் முக்கியமான அம்சங்களாகும். ஒப்பனையும், உடையலங்காரமும் இதனை ஒரு தனித்துவமான நடன வடிவமாக்குகின்றன. தேவர்கள், அசுரர்கள் முதலான புராண சம்பந்தமான பாத்திரங்களே பெரும்பாலும் இந்த நாடகங்களில் வருகின்றபடியால், பரிச்சயமான தோற்றத்தைத் தவிர்த்து, அமானுஷ்யமான கதா பாத்திரங்களாக வேஷக்கட்டு அமைகிறது. கதகளி நடிகர்கள், பச்சை, கத்தி, தாடி, கரி, மினுக்கு என ஐவகை முக வேஷத்தை ஒட்டி பிரிக்கப்படுகின்றனர்.

தேவர்கள், கிருஷ்ணன், இந்திரன் போன்ற கதாபாத்திரங்கள் பச்சை வேடத்துக்கு உரியவராவர். இத்தகைய பாத்திரங்களுக்கு, அரிசிப் பொடியையும் சுண்ணாம்பையும் கலந்து முகத்துக்குச் சுட்டி அமைப்பார்கள். காதின் மேற்புறத்திலிருந்து தாடை எலும்பைப்பற்றி வில் போல மத்தியில் அகன்றும் நுனியில் குறுகியும் இருக்கும்படி ஒப்பனை செய்வார்கள். சுட்டியின் உட்பாகத்திலும், முகத்திலும், நெற்றியிலும் பச்சைச் சாயம் தீட்டப்படும். இதழிலே சிவப்பு, புருவத்திலே மைக்கறுப்பு, நெற்றியிலே நாமம் முதலியன இடம்பெறும். கதகளி சம்பிரதாய அஹார்ய அபிநயம் வருமாறு கச்சை, முன் வால், பின்வால், உடுத்துக்கட்டு, உள் குப்பாயம், வெளிக்குப்பாயம், தோள்பூட்டு, தோள்வளை, கடகம், பருத்திக் காய்மணி, கிரீடம், நெற்றிச் சுட்டு, மேல்கட்டு, சாமரம், வெள்ளி நகம் போன்ற ஆடையாபரணாதிகளே கதகளியின் சம்பிரதாய ஆஹார்ய அபிநயமாகும். மூக்கின் கீழிருந்து கண்வரை கத்தரி போல, வெள்ளை பூசி, அதிலே இரத்தச் சிவப்புப் பூசினால் மேலே குறித்த பச்சை வேடத்தில் மாறுதல் ஏற்பட்டு கத்தி வேடம் ஆகிறது. நெற்றியிலே புருவங்களுக்கிடையிலும், மூக்கு நுனியிலும், வெள்ளை உருண்டைகள் ஒட்டப் பெற்று, முகத்தின் தோற்றமே மாறுபாடடைந்து இராவணன், ஹம்சன், சிசுபாலன் முதலிய அசுரர்களைக் குறிக்கின்றது. கோரப்பற்கள் பயங்கரமான இராட்சத தோற்றத்தை அளிக்க வல்லவை. சிவப்பு, வெள்ளை, கறுப்பு நிறத்தாடிகளைத் தாங்கியிருப்பதனால் இந்த வகைக்குத் தாடி வேடம் என்று பெயர். சிவப்புத் தாடி துச்சாதனனைப் போன்ற கொடியவர்களையும், வெள்ளைத்தாடி அனுமன், சுக்கிரீவன் போன்றவர்களையும் குறிக்கிறது. கறுப்புச் சாயத்திலும், கறுப்பு உடையிலும் தோன்றும் சூர்ப்பனகை போன்ற பாத்திரங்களுக்கு கரி வேஷம் என்று பெயர். உடம்பில் அழகிய நிறமாக இலேசாக வர்ணம் பூசி, மைக்காத் தூளைத் தெளிப்பார்கள். ரிஷிகள், பிராமணர்கள், அரக்கியர் அல்லாத மற்றப் பெண்கள் ஆகியோர்களைக் குறிக்க மினுக்கு வேடம் அமைக்கப் பெறும். எல்லா வகைப் பாத்திரங்களும் தங்கள் கண்கள் சிவப்பாகத் தோன்றும் படி செய்து கொள்வார்கள். ஆடவர்கள் தங்கள் விரல்களில் நீண்ட வெள்ளி நகங்களைத் தரித்திருப்பார்கள். உடையிலும் அணிகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இருக்காது. ஆடவர்கள் பெரும்பாலோர் கிரீடம் அணிந்திருப்பர்.

**கதகளி நடிப்பு முறை**

பேச்சில்லாத நாடகமான படியால் அபிநயம் நாடகத்தின் பாஷையாக அமைகிறது. 10 அல்லது 12 வயதிலும் ஆரம்பிக்கப் பெற்று, நடிகர்களுக்குக் கடுமையான பயிற்சியளிக்கப்படுகிறது. கதகளி நடக்க இருப்பதை மத்தளம் முழக்கி அறிவிப்பார்கள். இரவு சுமார் 9 அல்லது 10 மணிக்குத் தொடங்கி இரவு முழுவதும் நாடகம் நடைபெறும். மேடையையும் சபையையும் பிரித்துக் காட்டும் வகையிலே, பெரிய குத்து விளக்கு வைக்கப் பெற்று, அதன் ஒளியிலே நாடகம் நடிக்கப் பெறும். முதலில் மத்தளம், செண்டை வாசிப்பார்கள். இது அரங்கு கழி எனப்படும். அதன்பின் தெய்வ வணக்கம். அதையடுத்து திரை நோக்கு. இது பக்திரஸமான பாடல். பாடும்போது திரைக்குப் பின்னாலிருந்து கலாசங்களுடன் ஆடும் பாடல். சில வேளைகளில் திரையைப் பதித்து முகத்தை மட்டும் சபையோருக்குக் காட்டுவார்கள். திரை எடுத்ததும் தோடயம், புறப்பாடு போன்ற ஆடல் வகைகள், அதற்குப்பின்னர், மேளப்பதம். இது கதையின் அறிமுகப்பாடல். இதன் பின்னர் ஆட்டக்கதை. இறுதியில் தனாசி என்னும் மங்களம் ஆகும் . கதகளி நடனத்தில் பாடுபவர்களும், மத்தளம் செண்டை வாசிப்ப வர்களும் இருப்பார்கள். பிரதான பாடகர் பாடும் ஒவ்வொரு வரியையும் சீடர்கள் திருப்பிப் பாடுவார்கள். இவர்கள் பாடும் போ து நடிகர்கள் அபிநயம் பிடிப்பார்கள். பாட்டும், நடனமும் அனேக முறை நடைபெறும். காதல் காட்சிகளுக்கு பதிஞ்ச ஆட்டம் என்று பெயர். இது மெதுவாக ஒருமணி நேரமாவது நிகழும். கதையிலே, தர்மத்துக்கும் அதர்மத்துக்கம் போராட்டம் நடந்து இறுதியில் தர்மத்தின் வெற்றியையும் அதர்மத்தின் அழிவையும் கதகளி நாடகங்கள் போதிக்கின்றன. வீரம், ரௌத்திரவம் ஆகிய ரஸங்கள் கதகளியில் முக்கியத்துவம் பெறுகி ன்றன. அசுர பாத்திரங்கள் மேடை யில் தோன்றும்போது கர்ஜனை செய்வதும் முன்னால் பிடித்திருந்த திரையைப் பிடித்திழுப்பது போன்ற ஆர்ப்பாட்டங்களும் செய்வர். இவ்வாறாக இரவு முழுவதும் நடைபெறும் கதகளி விடியும் தருணத்தில் பக்திரஸ்மான நடனத்துடன் நிறைவு பெறும்.

**குச்சிப்புடி**

குச்சிப்புடி இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் வளர்ந்த ஒரு நடன நாடக வடிவமாகும். இந்தப் பெயர் ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள குச்சிலாபுரம் என்ற கிராமத்துடன் தொடர்புடையது. 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி தொடக்கம் இந்தக் கிராமத்திலிருந்து பரவத்தொடங்கிய இந்த நடன நாடகம் இன்று இந்தியாவின் ஒரு முக்கிய நடனமாகப் பிரபலமாகியுள்ளது. நெடுங்காலமாக தேவதாசிகள் இந்த நாட்டிய நாடகத்தை ஆந்திராவின் கோயில்களில் ஆடி வந்தார்கள். காலப்போக்கில் சமுதாய மாற்றத்தோடு தேவதாசி முறை இல்லாதொழியவே இடைக் காலத்தில் பிராமணர்களால் இது வளர்க்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. அந்தக் காலத்தில் இது பல பாத்திரங்களைக் கொண்ட நாட்டிய நாடகமாக, ஆண்களாலேயே ஆடப் பட்டதாகத் தெரிகிறது. தற்காலத்தில் ஆடப்படும் குச்சிப்புடி ஆரம்ப காலத்திலிருந்ததிலும், பெருமளவு வேறுபட்டுள்ளது. இன்று இந்த நடனம் தனிநபர் ஆட்டமாகப் பெரும்பாலும் பெண்களால் ஆடப்படுகிறது. இந்த ஆட்டம் பெரும்பாலும், சமயத்தொடர்புள்ள புராணக் கதைகளையே கருப்பொருளாகக் கொண்டுள்ளன. துரித பாத அசைவுகளையும், லாவகமான உடலசைவுகளையும் அடிப்ப டையாகக் கொண்டது இந்த நடனம். நாட்டிய நாடகம் மூலம் மக்களுக்கோ, அரசுக்கு ஒரு செய்தியைத் தரும் ஊடகமாகவும் இந்த குச்சிப்புடி நடனம் செயற்பட்டிருக்கிறது. ஒரு சமயம் நரச நாயக்கர் மன்னராக இருந்தபோது, வரிச் சுமையினால் மக்கள் படும் அவதியை மன்னரது பார்வைக்கு அரசவையில் இருந்த குச்சிப்புடி கலைஞர்கள் கொண்டு சென்றார்கள். மன்னனும் நிலைமையை உணர்ந்து மக்கள் துயர் தீர்த்தானாம்.

இந்த நாட்டிய இசையில் கருவிகளாக ஹார்மோனியம், கஞ்சீரா, புல்லாங்குழல், வீணை மற்றும் வயலின் போன்றவை பயன்படுத்தபடுகிறது. மேலும், வாய்ப்பாட்டு பாடுபவர் கர்நாடக சங்கீதத்தில் பாட்டுப் பாட, நட்டுவனார் ஜதி சொல்ல, குச்சிப்பிடி நடனம் அரங்கேறும்.

குச்சிப்பிடி நடனத்தின் அங்கங்கள் நிருத்தம், நிருத்யம் மற்றும் நடனம் ஆகும். நிருத்தம் தீர்மாணங்களையும், ஜதிகளையும் கொண்டது. நிருத்யம் என்பது பாடல் பகுதி. நடனம் என்பது முக பாவனைகள் மற்றும் கை முத்திரைகளை அடக்கியது ஆகும். நடனத்தில் ஒரு பகுதியாக வெண்கலத் தாம்பாளத்தின் விளிம்பின்மீது நின்றுகொண்டு ஆடுவதுண்டு. இந்தப் பகுதிக்கு பெயர் தரங்கம் ஆகும். சில சமயம் தண்ணீர்ப் பானையுடனும் ஆடுவதுண்டு.



**கதக்**

வட இந்தியாவில் உருவான எட்டு இந்திய பாரம்பரிய நடன வடிவங்களில் ஒன்றாகும். இந்த நடன வடிவத்துக்கானமூலங்கள், கதாக்ஸ் அல்லது கதை சொல்லிகள் என்றழைக்கப்படும் பழங்காலத்து வட இந்தியாவின் நாடோடிப் பாணர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. கிராம மையப் பகுதிகள் மற்றும் கோயில் முற்றங்களில் நிகழ்வுகளை நடத்திய இந்த பாணர்கள், பெரும்பாலும் புராணக் கதைகள் மற்றும் வேதப் புத்தகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிக்கதைகளை விவரித்துக் கூறுவதில் நிபுணர்களாக இருந்தனர், மேலும் தங்கள் கதை எடுத்துரைத் தலை கை அசைவுகள் மற்றும் முக பாவங்களால் அலங்கரித்தனர். கதைகளுக்கு உயிரூட்டுவதற்கு, இசைக் கருவிகள் மற்றும் வாய்மொழி இசைகளுடன் புது நடையிலான கை அசைவுகளைப் பயன்படுத்தும் ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு அரங்கமாக இருந்தது. இன்றைய அதன் வடிவம் கோயில் மற்றும் சமயச் சடங்குக்குரிய நடனங்கள் மற்றும் பக்தி இயக்கத்தின் பாதிப்பையும் கொண்டிருக்கிறது. 16 ஆம் நூற்றாண்டு முதல் அது பெர்ஷிய நடனம் மற்றும் முகலாய காலத்தின் அரசவையால் இறக்குமதி செய்யப்பட்ட மத்திய ஆசிய நடனத்தின் சில குறிப்பிட்ட அம்சங்களை உள் வாங்கிக் கொண்டது. கதக்குக்கு மூன்று பெரும் பள்ளிகள் அல்லது கரானாக்கள் இருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை புரியும் விளையாட்டுக் கல்லூரி

செ.செல்வராஜா,
அரியாலையூர்.



சாதனை புரியும் விளையாட்டுக் கல்லூரி ஒன்று சென்னையிலுள்ளது. அதில் கற்றுத் தேர்ந்து எமது நாட்டிலும், சாதனையாளர்களை உருவாக்கியவர்கள் உள்ளனர். அமரர் கே.வி. தனேஸ்வரன், ஓய்வு நிலை உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கணேசதாசன் போன்றோர் இந்தக் கல்லூரியில் கற்றுத் தேறியவர்கள். தென் ஆசியாவிலேயே முதன் முதலில் விளையாட்டுக்கெனத் தொடங்கப்பட்ட கல்லூரிதான் இது. 1920 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றுக்கு எதிரில், வை.எம்.சி.ஏ. கல்விக் கல்லூரி, அமெரிக்க நாட்டவரான எச்.சி.பக், என்பவரால் தொடங்கப்பட்டது.

இது வெறும் ஐந்து மாணவர்களுடனேயே தொடங்கப்பெற்றது. பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்த இந்தக் கல்லூரி, 1932 ஆம் ஆண்டு நந்தவனம் என்கின்ற இடத்துக்கு இடம் மாற்றப்பட்டது. இது 65 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியது. இதன் பின்னர் இதன் புகழ் எங்கும் பரவவே, இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலிருந்து மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலுமிருந்து இங்கு வருகை தந்து பலரும் கற்கத் தொடங்கினர்.

1940 ஆம் ஆண்டு பயிற்சிக்கு மாணவியரையும் இணைத்துக்கொள்ளத் தொடங்கினர். 1968 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறைப் பட்டப் படிப்புத் துறை தொடங்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு முதுநிலைமானிப் பட்டமும் வழங்கத் தொடங்கினர். 1979 இலிருந்து கலாநிதிப்பட்டமும் வழங்கப்படுகின்றது. 1985 ஆம் ஆண்டுக்கு– அதாவது 30 ஆண்டுகளுக்கு – முன்னர்வரை மட்டும், 12,500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் இங்கு கற்று வெளியேறினர். அவர்கள் இந்தியாவின் பலபாகங்களிலும் மட்டுமல்லாது, நேபாளம், பர்மா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அந்தமான்தீவு, குவைத், மொரிசீயஸ், நைஜீரியா, ஆஸ்திரேலியா, போர்னியா, இங்கிலாந்து, சீனா, கனடா உள்ளிட்ட பல நாடுகளில் ஆசிரியர்களாக, விளையாட்டுத்துறை ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தனர், வருகின்றனர். இப்போது பல நவீன வசதிகள் கொண்ட பிரமாண்டமான விளையாட்டுத்திடல் மற்றும் நீச்சல் குளம் அடங்கலாக உலக நாட்டவரின் கனவு பயிற்சிக்களமாக இந்தக் கல்லூரி திகழ்ந்து வருகின்றது.

இந்த வேளையில், இதைப்பற்றிய இவ்வளவு விவரங்களையும் ஏன் பிடுங் குகிறேனென நீங்கள் சலித்துக் கொள்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.


தமிழ் மாணவர்களின் தகைமைகள் தேசியத்துக்கு நிகராக உள்ளதாக இலங்கை மெய்வன்மைச் சங்க தலைவர் சுமத் திலகரட்ன அண்மையில் புகழாரம் சூட்டியிருந்தார்.

மிகக் குறுகிய காலத்தில், கிடைக்கப்பெற்ற ஒருசில வளங்களை மட்டும் கொண்டு, தேசியத்துக்கு நிகராகச் சாதித்து வருகின்றனர் என ஜூலை மாதம் நடைபெற்ற வடக்கு மாகாண பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியைக் கண்டுகளிக்கும் போது தெரிவித்திருந்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட ஏழ்மைக் கிராமமான கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்தவரும், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மாணவியுமான தேவதாஸ் டென்சிகா, இந்த வருடம் பியகமவில் இடம்பெற்ற தேசிய மெய்வன்மைப் போட்டியில் 15 வயதுக்கு உட்பட்ட ஆண்கள், பெண் கள் பிரிவில் 800 மீற்றர் ஓட்டப் போட்டி யில் தங்கப் பதக்கம் பெற்றுச் சாதனை படைத்திருந்தார்.

பல்வேறு நெருக்கடிக்குள் சிக்கி மீண்டுவருகின்றது மாணவர் சமுதாயம். போர்க் காலத்தில் பல்வேறு தடைகள் காரணமாக பெரும் பின்னடைவைச் சந்தித்து இருந்தவர்கள் இவர்கள்.

பொருளாதாரத் தடை, மருந்துத் தடை நீக்கப்பட்ட இக்காலத்தில்,





பொருள்களைக் கொள்வனவு செய்யவும், திறனை அதிகரிக்கவும் வறுமை தடையாக உள்ளது.

இந்நிலையிலும் வடமாகாண பாடசாலை மாணவர்கள் மாகாண மட்டத் தடகளப் போட்டிகளில், பதிவு செய்யப்பட்ட தேசிய மட்டச் சாதனைகளைத் தொட்டு நிற்கின்றனர்.

சாதனை படைக்கக் கூடிய பல மாணவர்கள், மந்த போக்கு நிலையில் காணப்படுகின்றனர். இதனால் இவர்கள் கல்வியிலோ, விளையாட்டிலோ முன்னேற முடியாத நிலையிலுள்ளனர்.

மாகாண மட்டத்தில்சாதனைபடைத்தவர்களுக்கும், மாகாண மட்டத்தில் பங்கு கொள்ளத்தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும்விசேடகவனிப்பின்கீழ் அனைத்து வளங்களும் கிடைக்க ஆவன செய்யவேண்டியது அவசியமாகும். கல்வியுடன் விளையாட்டும் இணையும் போது புது உற்சாகம் பிறக்கும். அல்லாமலும் விளையாட்டுத் துறையும், மருத் துவ, பொறியியல், கணக்காளர் துறை போன்று உயர் தொழிற்றுறையாக ஓங்கி வளர்ந்து வருகின்றமையும் மனத்திலிருத்தப்பட வேண்டிய தாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு விளையாட்டுத் துறையை வளர்த்தெடுக்க, தேவையான வளங்களைத் திரட்டித்தரவேண்டிய கடமையும் பொறுப்பும் மாகாண விளையாட்டுத்துறை அமைச்சுக்கு உண்டு.

வட மாகாணத்தின் வளங்கள் நிறைந்த பாடசாலை ஒன்றைத் தேர்ந்தெடுத்து, (முன்னைய மத்திய கல்லூரிகளிலொன்று பொருத்தமானதாக அமையும்)– விளையாட்டு, கல்வி தொடர்பான அனைத்து வளங்களையும் அங்கு ஒருங்கே கிடைக்கச்செய்து– மாணவ, மாணவியருக்கான விடுதி வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அங்கு உணவு, உடை, கற்றல் உபகரணங்கள் தங்கு தடையின்றி, இலவசமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

துறைபோன ஆசிரியர்கள் அங்கு நியமிக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக விளையாட்டுத் துறை பங்களிப்பையும் பெற வேண்டும்.

பல்கலைக்கழக உயர்தரத் தேர்வுக்குத் தோற்றும் அங்குள்ள மாணவ மாணவியருக்கு பிரபல தனியார், மற்றும் அரச பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கற்க வாய்ப்பு, வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இவை எவற்றிலும் அரசியல் கலப்போ, பரிந்துரையோ, குடும்பச் செல்வாக்குகளோ இல்லாது தூய்மை பேணப்பட வேண்டும்.

கடுமையான ஒழுக்கம் கட்டுப்பாடு ஒவ்வொரு மட்டத்திலும் பேணப்படுவதுடன், கடுமையான பயிற்சியின் பெறுபேறுகளை விளக்கும் வகையிலும், விஞ்ஞான ரீதியாக விளையாட்டுத்துறை நுணுக்கங்களை அறிந்துகொள்ளச் செய்யும் வகையிலும், நவீன தொழில்நுட்ப சாதனங்களும், வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.


திட்டமிட்ட வழிப்படுத்தலில் இவை மேற்கொள்ளப்படுமிடத்து, மென்மேலும் பல சாதனைகளைப் புரிகின்ற மனத்திடமும், ஆற்றலும் நம்முடைய மாணவர்களிடையே யும், அவர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளர்களிடமும் உள்ளது.

இதற்கு மேலாக அர்ப்பணிப்புணர்வுடன் விளையாட்டுத் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பணிக்கு அமர்த்த வேண்டும். தேவையான இடத்து அத்தகைய ஆசிரியர்களுக்கு பல வரப்பிரசாதங்களை வழங்கவும் தயங்கக் கூடாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத் துறை விரிவுரையாளர்கள், வளவாளர்களும் இவ்வாறான மாணவர் மேம்பாட்டுத் திட்டத்துக்கு உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை. அதற்கான அறிவுத் திறனுடன், விளையாட்டுத் துறை ஓங்கி வளரவேண்டும் என்கின்ற மனப்பாங்கும் அவர்களிடம் நியைவே உள்ளமை ஒன்றும் இரகசியமல்ல.

விளையாட்டு என்பது தனி ஒரு உயர் தொழில் முயற்சியாண்மையாக உலகம் முழுவதும் பரவி வரும் இவ் வேளையில், நம்மவர்கள் இனங்காணப்பட்டு, வாய்ப்பு வசதியளிக்கப்பட சிறந்த தருணம் இதுவே. கல்வியமைச்சும் விளையாட்டுத் துறையமைச்சும் மாகாண மட்டத்தில் ஒரு அமைச்சின் கீழேயே வருவதனால் இது சாத்தியப்படாத தொன்றல்ல. அல்லாமலும், நொந்து போயுள்ள தமிழ் மக்களுக்கு உதவ புலம் பெயர் தமிழர் உதவி புரியக் காத்திருக்கின்ற இந்தத் தருணத்தில், அதனைப் பயன்படுத்திக் கொள்வது எமது உள்ளூர் அரசியல் சமூக, சமயத் தலைவர்களின் கெட்டித்தனமாகும். செய்வார்களா? அல்லது குண்டு சட்டிக்குள் குதிரை யோட்டிக்கொண்டு இருப்பார்களா?







மிஷாந்தி செல்வராஜாவின் 'மூன்றாம் முத்தம்' குறுநாவல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நூலாசிரியரின் பெற்றோர் மங்கல விளக்கேற்றுவதையும், திருமதி மீரா அருள்நேசன் (ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர்) நயப்புரை ஆற்றுவதையும் முதற்பிரதியை கவிஞர் சோ.பத்மநாதன் நூலாசிரியரிடம் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org